www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර

பக்கம் 20

ஜூலை 27 – ஆக.02,1997

11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 215

## உளவியல் யுத்தம்



## உருமாறும் செய்திகள்

## தப்பிய புலி!

அரசியல் தொடர்





## கமலஹாசன் எழுதிய முதல் சிறுகதை

## அந்த இயக்குநரும் ரயில் நடிகையும்



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## நடக்கக்கூடிய காரியமா?

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

வடக்கு-கிழக்கில்
மனித உரிமை நிலவரம்
நாள்தோறும் தேய்ந்து வருகிறது!

பாலியல் வல்லுறவுகளும்
தொடர்கதைகளாக உள்ளன!

படையினரின் அத்துமீறல்களை
இனக் கண்ணோட்டத்தில்
மட்டும் நோக்கக்கூடாது!

உளவியல் ரீதியிலும்
உற்று நோக்க வேண்டும்!

தங்கள் உறவுகளைப் பிரிந்து
வேறொரு பிரதேசத்தில்
வேற்றுமொழி, வேற்று கலாசாரம்
போன்றவற்றின் மத்தியில்
தனிமைப்படுத்தப்பட்ட நிலையில்தான்
சிப்பாய்களின் நாட்கள் நகர்கின்றன!

வடக்கு-கிழக்கில்
நிலைகொண்டுள்ள சிப்பாய்களில்
எத்தனைபேருக்கு
இனப்பிரச்சனை பற்றிய
தாற்பரியங்கள் தெரியுமென்பது
சந்தேகம்தான்!

உத்தரவுகளாலும்
வெறும் போதனைகளாலும் மட்டும்
மனமாற்றங்களை
ஏற்படுத்துவது இயலாது!

அடிப்படையிலேயே
இலங்கையின் முப்படைகளும்
சிங்கள இன இளைஞர்களால்
உருவானவையாகவே உள்ளன.

அதனால்-படையினருக்குள்
மூவினம் கலந்த
புரிந்துணர்வு நிலை ஏற்படும்
சாத்தியமும் அற்றுப்போயுள்ளது.

இந்தியாவில்
சீக்கியர்கள் தனிநாடு கேட்டபோதும்
இந்திய அரச படைகளுக்குள்
சீக்கிய இனத்தினரும்
முக்கிய பொறுப்புக்களில் இருந்தனர்!

தற்போதைய நிலையில்
படைகளுக்குள்
தமிழ் இளைஞர்களை
இணைத்துக் கொள்வதும் இயலாது!

இனப்பிரச்சனை மேலும்
கூர்மையடைந்து வரும் நிலையில்
அரசே விரும்பினால்கூட
தமிழ் இளைஞர்கள்
படைகளில் சேர முன்வரார்.

தமிழர்கள் என்றாலே
சந்தேகத்துடன் நோக்கப்படும்
காலகட்டம் இது.

படைகளுக்குள் தமிழர்களை
இணைக்க அரசும் விரும்பாது!

இந்நிலையில்,
வடக்கு-கிழக்கில்
நிலைகொண்டுள்ள படையினர்
அங்குள்ள மக்களையிட்டு
அந்நிய மனோபாவம் கொள்வதும்,
அதேபோல மக்களும்
படையினர் தொடர்பாக
அந்நியத் தன்மையுடன் நோக்குவதும்
தவிர்க்க முடியாத ஒன்றாகும்!

ஒரே பிரதேசத்தில்
பெருந்தொகையாகக் குவிந்திருக்கும்
படையினர்
நீண்ட மாதங்களாக
வீடுகளைப் பிரிந்திருக்கும்
காய்ந்த மனநிலையில்
சலிப்புடனும், விரக்தியுடனும்
அத்துமீறல்களில் ஈடுபடுவதும்
கட்டுப்படுத்த முடியாததே!

மேம்போக்காக வேண்டுமானால்
சில நடவடிக்கைகளை எடுக்கலாம்.
ஒரே பிடியில்
கடிவாளத்தை வைத்திருந்தால்
சிப்பாய்களின் அதிருப்தியைத்தான்
அரசு சம்பாதிக்கும்!

இராணுவத் தீர்வை
நா[illegible]நிற்கும் நிலையில்
படைபலம் குறைவதை-
மனபலம் குன்றுவதை-
அரசு விரும்பாது!

கட்டாய இராணுவ சேவை
இங்கே சாத்தியமில்லை.
அப்படிச் செய்வதாயின்
இன விகிதாசாரப்படி
தமிழர்களையும் சேர்த்தாகவேண்டும்.
அதனால் அதற்கு துணியார்கள்!

எனவே-தற்போதுள்ள
படைபலத்தை
நெளிவு-சுழிவு போக்கோடு
கட்டிக் காக்கவே
அரசு கரிசனம் காட்டும்.

வடக்கு-கிழக்கில்
மனித உரிமைகளின் பாதுகாப்பு,
உயிர்வாழ்தலுக்கான உத்தரவாதம்
அனைத்துமே-
இராணுவத் தீர்வு முனைப்பை
அரசு கைவிடாதவரை-
நடக்கக்கூடிய காரியங்களல்ல!

இத்தகைய நிலை
மக்களிடம் மறுதாக்கங்களை
தோற்றுவிக்கவே செய்யும்.
அதனால் இராணுவத்தீர்வு
முனைப்புகள்-
'குளிக்கப் போய்
சேறு பூசிக்கொண்ட கதை'யாகிவிடும்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்

## தேவ ஆசீர்வாதங்கள்!

"இன்று முதல் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்!" (ஆகாய் 2:19)

"கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்!" (சங்கீதம் 115:12)

ஆசீர்வாதம் என்ற சொல்லைப் போல இனிமையான வார்த்தையும், இதயத்தை மகிழ்விக்கக் கூடிய சொல்லும் வேறு ஒன்றும் இல்லை! தேவனிடத்திலிருந்து இறங்கி வருகின்ற ஆசீர்வாதங்கள் எவ்வளவு அருமையானவைகள்! அதன் இனிமையை ருசித்தவர்கள் எத்தனைபேர்! அந்த வார்த்தையைக் கேட்டவுடன் உள்ளமெல்லாம் குளிர்கிறது. நீங்கள் ஆசீர்வதிக்கப்படவேண்டும் என்ற வாஞ்சை உங்களுக்கு இருக்கிறதா? ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்ற வாஞ்சை இல்லாதவர்கள் எவரும் இருக்க முடியாது.

வேதம் சொல்கிறது- கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். (நீதி 10:22) தேவ பிள்ளையே! நீயும் கர்த்தரிடத்திலிருந்து வரும் தேவ ஆசீர்வாதத்தை பெறவாஞ்சிப்பாயா? அது சமாதானமும் நீதியுமாயிருக்கும்! மன நிறைவும் ஆறுதலும் இருக்கும்! அதுவே என்றென்றைக்கும் நிலைக்கும்!

பெஞ்சமின் தேவபாலன், மட்டக்களப்பு.



## நீ விரும்புவதையே உன் சகோதரனுக்கும் விரும்பு!

'யாருடைய கைவசம் என்னுயிர் இருக்கிறதோ, அவர்மீது சத்தியமாக நான் விரும்புவதைத்தான் தன் சகோதரனுக்கும் அல்லது அண்டை வீட்டானுக்கும் விரும்பாதவரை உங்களில் எவரும் விசுவாசியாக முடியாது' என்று முஸ்லிமில் ஒரு கதீஸ் பதியப்பட்டுள்ளது.

'தமக்கு அவசியமற்றதை விட்டு விடுவது ஒரு முஸ்லிமின் சிறந்த பண்பாகும்' (ஹதீஸ்-திர்மிதி)

"இறைவன் தன் அடியானை புறக்கணித்து விட்டான் என்பதற்கு அடையாளம் அவன் அந்த அடியானை அவனோடு தொடர்பற்ற, அவனுக்கு அவசியமற்ற விடயங்களில் ஈடுபடச் செய்து விடுவதேயாகும்" என்று ஹஸன் (றழி) அவர்கள் கூறியதாக அபு உபைதா (றழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்.

ஒரு முஃமின் எல்லா விடயங்களிலும் நம்பிக்கைக்கு உரியவனாக இருப்பதும் தான் விரும்புவதை தன் சகோதரனுக்கு விரும்பும் பண்பில் உள்ளதேயாகும். (அல் ஹதீஸ்)

தொகுப்பு: எம்.எம்.எம்.ஸாமித், கிண்ணியா-03.

## கவிதைப் போட்டி இல. 212



### பரிசுக்குரிய கவிதை

**ஒளி வருமா?**

இந்த மழையும் ஓய்ந்து விடும்
இருண்ட வானும் ஒளிரும்-எங்கள்
சொந்த மண்ணிற் போர் ஓய்ந்து
சோபன வாழ்வும் ஒளிர்ந்திடுமா?

ச. வித்யாசாகரன்-ஹைலண்ட் மத்திய கல்லூரி, ஹட்டன்.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்:

**வாசல் தேடி**

மழை காக்க குடை.,
அரவணைக்க அண்ணன்,
உயிர்காக்க யார்?
நடைபோடும் கால்கள்
சமாதான வாசல் தேடி...!

ச. பிறியந்தி- வவுனியா.

**மழை**

மழை வந்தால் குடை பிடிப்போம்:
செல் வந்தால் எதைப் பிடிப்போம்?

வி. நம்பியா -'காமதேனு' ஆரையம்பதி-2.

**பயனில்லை**

குண்டு மழை பொழியுதண்ணா,
குடைபிடித்தும் பயனில்லை!
மிதிவெடிகள் வெடிக்குதண்ணா,
செருப்புமிட்டும் பயனில்லை!

செல்வன் பி. பிரணவன்-
தாண்டவன்வெளி, மட்டக்களப்பு.

**இனங்கள் ஒன்று சேருமா!**

ஒற்றுமையாய் ஒரு குடையில்
ஒட்டிச் செல்லும் அழகு பார்!
ஒட்டாத மனங்களினால்
ஒடிந்து நிற்கும் தேசம் பார்!
இந்த நிலை மாறுமா?- நம்
இனங்கள் ஒன்று சேருமா?

இமையாணன்-உடுப்பிட்டி,
யாழ்ப்பாணம்.

**பாதுகாவல்**

பயிர் செழிக்கும் பருவ மழைக்குப்
பிடிப்போம் சிறுகுடை;
உயிர் அழிக்கும் போர் மழைக்கு
உண்டோ பெருங்குடை....?

திருமதி. ராஜேஸ்வரி கிருஷ்ணன்- வவுனியா.

**புதுக்குறள்**

மழைக்கும் வெயிலுக்கும்
அரணாகும் குடை.
யமனாகும்
சோதனை சாவடிமுன்
மடக்காதவிடத்து.

நிஜந்திக்கா கனகசிங்கம்-
கல்லடி, மட்டக்களப்பு.

**வரண்டு போன மனசுகள்**

மாரி பொழிந் தென்ன-
பூமி செழித் தென்ன-
மழையாகப் பொழிகிறது
ரவைகளும் குண்டுகளும்!
பார்க்குமிடமெல்லாம்
பாழ்பட்ட தரிசு நிலம்!
வரண்டு கிடக்குதிங்கே
வயிறுகளும் நெஞ்சங்களும்!

மதுரா யோகேந்திரன்- திருக்கோவில்.

**பயணம்**

நண்பா வா....!
வாழைச்சேனை
வேண்டாம்.....
இங்கேயும் இனி
குண்டு மழை தான்!

வசந்- இரத்தோட்டை.

**இருமழை**

இருமழை பெய்யுமிங்கே:
ஓர்மழைக்கு குடை பிடிப்போம்;
போர் மழைக்கு ஏதுசெய்வோம்?

ஆரையம்பதி- இதயம்.

**அவலம் ஏன்?**

எம்மைப் போல் ஒரு குடையில்
ஈரணியும் இணைந்துவிட்டால்
விடுதியற்ற அகதிகளாய்
அலையும் அவலம் ஏன்?

கா. காந்தரூபன்- ஹாலி-எல.

## கவிதைப் போட்டி இல.215



கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி- 02.08.1997

முகவரி: கவிதைப் போட்டி இல.215
தினமுரசு வாரமலர், த.பெ. இல—1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

முரசாரே,

தமிழ்க்கட்சிகளின் தகிடுதத்தங்களை நெத்தியடியாக ஆசிரியத் தலையங்கத்தில் சுட்டிக்காட்டிய உனது துணிச்சல் பாராட்டுக்குரியது. தகுந்த அரசியல் அணி இல்லாமையால் சந்தர்ப்பங்கள் தவறவிடப்படுவதை நீ சுட்டிக்காட்டத் தவறவில்லை.

'பூலான் தேவியின்' தொடர்கதையின் விறு விறுப்பு, 'உடைந்த இரவு' என்னும் தொடர் நவீனம் என்பன வாராவாரம் முரசை தேடி அலைய வைக்கிறது.

இரா. வினோத்குமார், அன்புநகர், அட்டன்.

வாராவாரம் ஏகப்பட்ட வாசகர்களை வசீகரிக்கும்.... 'அன்பு ரசிகன்' அளிக்கும் இலக்கியச்சுவை முன்னம் ஒரு (வசன) நடை! தற்போது பல வாரங்களாய் தொடரும் (கவிதை) நடை! ஆம், புதுமையும், பழமையும் கலந்து நயக்கவைக்கும் இலக்கியச்சுவை இனிக்கும் பலாச்சுளை! பாராட்டுக்கள் ரசிகனுக்கு.....!

முத்துமணி-கோட்டைமுனை.

அன்பின் முரசிற்கு!

நீ சுமந்து வரும் அனைத்தும் சுவை. அதில் இனிய தொடரான 'உடைந்த இரவு' படு அசத்தல். அதை சுமந்துவரும் முரசிற்கு சபாஷ்!

கி. றெஜிச்சந்திரன், வத்தளை.

என் இனிய முரசுக்கு!

நீ சுமந்து வருகின்ற அம்சங்கள் அத்தனையும் சுவாரஸ்யமானவை. உனைக் காணத் தாமதித்தால் என் நெஞ்சு ஏங்கித் தவிக்கிறது. 'கனவு மெய்ப்பட வேண்டும்' தொடரில் சுமதியின் நிலை மிகவும் பரிதாபத்துக்குரியது. உன்பணி என்றும் தொடர மனமார வாழ்த்துகின்றேன்.

திருமதி பரிதிமலர்- பவளேந்திரன், களுவாஞ்சிக்குடி.

முரசே!

உன் அம்சங்கள் அத்தனையும் மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும். எத்தனை முறை படித்தாலும் சலிப்பதில்லை. குறிப்பாக தேன் கிண்ணம், இலக்கிய நயம் மேலும் மெருகூட்டுகின்றன.

நா. செவ்வந்தி, நாவற்குழி.

தித்திக்கும் முரசே! கவிதை நடையில் வரும் இலக்கிய நயம் பிரமாதம். 'உடைந்த இரவு' தொடர் கதை ஒரே அசத்தல். பூலான்தேவி விறுவிறுப்பாக செல்கின்றது.

மூதூர் செல்வி, மஸீனா மன்சூர்.

## எங்கும் ஒரே விதம்

பத்திரிகைகள் மீது குற்றம்சாட்டுவது அரசியல்வாதிகளின் பழக்கதோஷம். குறையென்ன என்று கூறாமல் வசைபாடுவது அவர்களின் பாணி. தமிழக ஏடுகளையும் நான் படிப்பதுண்டு. பத்திரிகைகள்தான் அங்கு ஜெயலலிதா ஆட்சிக்கு முடிவு கட்ட முன்னின்றன. இப்போது கலைஞர் கருணாநிதி அங்குள்ள பத்திரிகைகளை திட்டித்தீர்க்க ஆரம்பித்துள்ளார். எங்கும் அரசியல்வாதிகள் ஒரேவிதமாக இருப்பது பொது ஒற்றுமை.

சி. இராமகிருஷ்ணன், கொழும்பு-06.

## இலவச யோசனை

தமிழ்க்கட்சிகளின் பந்தாட்டம் பற்றிய துருவல் நன்று. பத்துவருடத்தின் பின்னர் தமிழ் தாயகத்தை பிரித்து கூறுபோட இலவச யோசனை சொன்ன தமிழ்க் கட்சிகளை பாராட்ட வார்த்தைகளே இல்லை (?!) இன்னும் எம்மை என்ன செய்யப் போகிறார்கள்? 'உதவி செய்யாதுவிட்டாலும் உபத்திரவம் செய்யாதீர்!' என்பது இக் கட்சிகளுக்கு சாலப் பொருத்தம்.

ஆர். கணேசமூர்த்தி, மட்டக்களப்பு.

## பாலபாடம்

காலம் அறிந்து பயிர் செய்ய வேண்டும் என்பது பாலபாடம். இந்தப் பாலபாடம் கூடவா எங்கள் கட்சிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் தெரியவில்லை? அதிரடி அய்யாத்துரையார் சொன்னதுபோல, பொதியை விட பொரியே போதும் என்று நினைத்துவிட்டனரோ?

ஜி. தேவசகாயம், கல்லாறு.

## ஆயிரம் பொய்

'மணமகள் இல்லாத திருமணம்'- 'காதிலை பூ கந்தசாமி' அசத்திவிட்டார். தரகர்கள் ஆயிரம் பொய் சொல்லி கல்யாணம் நடத்துவதாக கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் மணமகள்கூட இல்லாத கல்யாணத்துக்கு தம்பிமாரை தயார்படுத்தும் தரகர்கள் அரசியலில் மட்டுமே உள்ளனர்.

திருமதி பத்மா சிறிகாந்த், புதுக்குடியிருப்பு.




## தொகுப்பாளர்கள்

முரசின் விமர்சனங்களை தொகுத்து வெளியிடும் விமர்சகர்கள் பற்பலர். 'வெளியிட்டால் வெளியிடட்டுமே, நல்லதுதான்!' என்று முரசு முன் பொருமுறை சொன்னதாக ஞாபகம். ஆயினும் தங்கள் பெயர்களில் அன்றோ வெளியிடுகிறார்கள்! முரசின் பாணி மேலோங்கியிருப்பது அதன் வாசகர்களான எமக்கும் பெருமையே. இன்னொன்று- 'முரசு' நம் கைக்கு வந்துசேர முன்பே முரசச் செய்திகளை இங்குள்ள பத்திரிகைகள் அனைத்தும் மறுபதிப்புச் செய்துவிடுகின்றன.

எல். விமலன், கனடா.

பூலான்தேவியின் பழிவாங்கும் படலம் விறு விறுப்பாய் தொடர்கிறது. பெண்களோடு விளையாடும் பேடிகளுக்கு பூலானின் பதிலடி தொடரட்டும்.

செல்வி ஜே. கனிஸ்றா, ஹெந்தளை.

## இணைப்பில் விடை

'விசேட இணைப்பு' வெளுத்து வாங்கிவிட்டது. எங்கள் மனதில் எழுந்த சந்தேகங்களை முரசே வரிசைப்படுத்தியதோடு விடைகளையும் விளக்கமாக தந்தமை பாராட்டுக்குரியது. 'முரசு' சொன்னது சரியே என்பதே புலிகள் மறுக்காதது மூலம் உணர்த்திவிட்டனர்.

எ. பிறேமசாந்தன், திருமலை.

அன்பின் முரசே,

வாரம் தவறினாலும் உன்னை வாங்கி வாசிக்கத் தவறாத பலகோடி வாசகர்களில் நானும் ஒருத்தி. அதிலும் என்னை மிகவும் கவர்ந்தது 'பூலான் தேவி' தொடர், மற்றும் பல சுவை ததும்பும் ரசிகனின் இலக்கிய நயம்.

மொத்தத்தில் எல்லா அம்சங்களுமே என் மனதை கொள்ளை கொண்டவை. என் முரசுக்கு நன்றிகள்.

பா. தர்ஷி, சின்னக்கடை, மன்னார்.


படிப்பகம்

www.padippakam.com

# 32 ஆயிரம் குண்டுகளுடன் புறப்பட்ட கப்பல் எங்கே?

## புலிகளின் பெயரில் உரிமை கோரிக் கடிதம்

இலங்கைப் படையினருக்கு ஆயுதங்களை ஏற்றிவந்த 'ஸ்ரில்லஸ் லிம்மாசுல்' என்னும் கப்பல் ஒன்று காணாமல் போயுள்ளது.

இதனையடுத்து, இக் கப்பலைக் கண்டுபிடிக்க சர்வதேச பொலிஸ் சேவையான இண்டர்போலின் உதவி நாடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இலங்கைக் கடற்பரப்பிலும் கடும் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அக் கப்பல் புலிகளால் கடத்தப்பட்டிருந்தால், இங்கு கொண்டுவரப்படலாம் என்று கருதியே கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள. இக் கப்பல் காணாமல் போனது தொடர்பாக இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் அதிர்ச்சியடைந்துள்ளன.

இக் கப்பல் காணாமல் போனது தொடர்பாக பல்வேறு தகவல்கள் கூறப்படுகின்றன.

ஆபிரிக்க நாடான ஸிம்பாப்வேயில் இருந்து இலங்கை பாதுகாப்பு அமைச்சு மோட்டார் குண்டுகளை கொள்வனவு செய்தது. 32 ஆயிரத்து 400 மோட்டார் குண்டுகளுடன் ஆபிரிக்க நாடான மடகஸ்கார் நாட்டின் துறைமுகத்தில் இருந்து 'ஸ்ரில்லஸ் லிம்மாசுல்' என்னும் கப்பல் இம்மாதம் ஜூலை 2ம் திகதி புறப்பட்டது. கப்பலில் லைபீரியன் நாட்டுக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

**இரகசியத்தேடல்**

இம்மாதம் 11ம் திகதி அக் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்திருக்க வேண்டும். ஆனால் இன்றுவரை கப்பல் வந்து சேரவில்லை.

இதனால் இரகசிய விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டு கப்பலைத் தேடும் பணி ஆரம்பமானது.

இதற்கிடையே கொழும்பில் உள்ள மேற்கு நாட்டுத் தூதரகம் ஒன்றுக்கு கடந்த வாரம் 'ஃபாக்ஸ்' மூலம் கடிதம் ஒன்று வந்து சேர்ந்தது.

விடுதலைப் புலிகள் என்ற பெயரில் அனுப்பப்பட்டிருந்த அக் கடிதத்தில், 'ஆயுதக் கப்பலை கடத்தியது தாங்களே' என்று உரிமை கோரப்பட்டிருந்தது. இத் தகவல் தொடர்பாக குறிப்பிட்ட தூதரகம் இலங்கை பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டது. இதன்பின்னரே கப்பல் காணாமல் போன விடயம் வெளியே கசிந்திருக்கிறது.

**சந்தேகம்**

குறிப்பிட்ட கப்பல் தம்மால் கடத்தப்பட்டதாக புலிகளின் பெயரில் அனுப்பப்பட்ட கடிதத்தில் புலிகளின் இலச்சினை காணப்படவில்லை. அதாவது புலிகளின் கடிதத் தலைப்பில் அக் கடிதம் எழுதப்படவில்லை.

புலிகள் உரிமை கோருவது என்றால் குறிப்பிட்ட தூதரகத்துக்கு மட்டும் அதனை ஏன் இரகசியமாகத் தெரிவிக்க வேண்டும்? தமது கடிதத் தலைப்பில் தெரிவிக்காமல் அநாமதேய கடிதம் போல் ஏன் அனுப்ப வேண்டும்? ஆயுதக் கப்பலை கடத்தியிருந்தால் புலிகள் பகிரங்கமாக உரிமை கோருவதற்கு ஒரு தடையும் இல்லை. இராணுவ ரீதியில் அவர்களது ஆற்றலை வெளிப்படுத்தும் செயலாகவே அமைந்திருக்கும்.

கப்பலை பாதுகாப்பான இடமொன்றுக்குக் கொண்டு செல்லும் வரை உரிமை கோர விரும்பாவிட்டாலோ, அல்லது இலங்கை அரசை குழப்ப நினைத்தாலோ குறிப்பிட்ட தூதரகத்திற்குக்கூட தெரிவித்திருக்கமாட்டார்கள்.

இவ்வாறான சந்தேகங்கள் மத்தியில் புலிகளும் இவ் விடயத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

இலங்கை அரசு ஆயுத விநியோகஸ்தர்கள் பலருடன் தொடர்பு கொண்டு, குறைந்த விலையில் விநியோகம் செய்பவர்களுடனேயே இறுதியாக ஒப்பந்தம் செய்யும். கப்பலில் ஆயுதத்தை ஏற்றிவந்த விநியோகஸ்தருக்கு போட்டியான மற்றொரு விநியோகஸ்தர் கப்பல் காணாமல் போனதாக புரளி கிளப்பி உள்ளாரா என்றும் சந்தேகிக்கப்படுகிறது. புலிகளின் பெயரில் அவர்தான் கடிதம் அனுப்பினாரா என்றும் சந்தேகிக்கப்படுகிறது.

எப்படியோ கப்பல் இதுவரை வந்து சேரவில்லை என்பதால் மர்மம் நீடிக்கிறது. கப்பல் மர்மம் கண்டுபிடிக்கப்படுகிறதோ இல்லையோ, வடக்கு-கிழக்கு போருக்கு 30 ஆயிரம் மோட்டார் குண்டுகள் கொண்டு வரப்பட்டன என்ற செய்தி மற்றொரு அதிர்ச்சிதான்! ■

# முற்றுகைக்குள் ஒரு முற்றுகைத் தாக்குதல்!

## மட்டக்களப்பு மோதலில் ஏட்டிக்குப் போட்டியான வியூகம்!

மட்டக்களப்பு மாவட்டத்தில் சித்தாண்டியில் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே கடும் மோதல் இடம்பெற்றது.

21.07.97 அன்று நடைபெற்ற இம் மோதல் தொடர்பாக முரசுக்கு கிடைத்துள்ள தகவல்கள் வருமாறு:

படையினரை முகாமில் இருந்து வெளியே இழுத்து பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த புலிகள் திட்டமிட்டனர்.

அத் திட்டத்தின்படி வேன் ஒன்றை புலிகள் கடத்திச் சென்று சித்தாண்டி நாகதம்பிரான் கோயிலின் பின்புறமாக நிறுத்தியிருந்தனர்.

'கடத்தப்பட்ட வேன் அங்கு நிற்பதை அறிந்து, அதனை எடுத்துச் செல்ல படையினர் தொடர் அணியாக அங்கு வருவார்கள். அவர்கள்மீது தாக்குதல் நடத்தலாம்' என்பதுதான் புலிகளின் தந்திரம்.

**வேன்தான் பொறி**

வந்தாறுமூலை-கிழக்கு பல்கலைக்கழகம் தொடக்கம் மாவடிவேம்புஆலயம் வரை புலிகள் படையினரை எதிர்பார்த்து பதுங்கியிருந்தனர். கிட்டத்தட்ட இருநூறு புலிகள் தாக்குதலுக்கு தயார் நிலையில் காத்திருந்தனர்.

வேன் நிற்கும் தகவல் அறிந்த முறக்கொட்டாஞ்சேனை முகாம் படையினர் அணியாகப் புறப்பட்டனர். அப்போது புலிகள் பெருமளவில் காத்திருக்கும் தகவல் அவர்களுக்குக் கிடைத்துவிட்டது. உடனே முகாமுக்கு திரும்பிய படையினர் கொம்மாதுறை முகாமுக்குத் தகவல் அனுப்பினார்கள்.

பின்னர் கொம்மாதுறை முகாம் படையினரும், முறக்கொட்டாஞ்சேனை முகாம் படையினரும் ஒரு திட்டம் வகுத்தனர்.

முறக்கொட்டாஞ்சேனையில் இருந்து தென்மேற்கு திசைவழியாக படையினரை எதிர்பார்த்து புலிகள் காத்திருந்தனர். புலிகள் எங்கு பதுங்கியுள்ளனர் என்ற தகவலை துல்லியமாக அறிந்த படையினர் வடக்கு திசையாகவும், கிழக்கு திசையாகவும் முன்னேறி சென்றனர். சித்தாண்டிக்குள் பதுங்கியிருந்த புலிகள் வெளியேறிச் செல்லக்கூடிய பாதையில் படையினர் பதுங்கிக் கொண்டனர். உதயன் மூலை என்ற இடத்தில்தான் படையினர் பதுங்கியிருந்தனர்.

நீண்ட நேரமாக காத்திருந்த புலிகளின் தாக்குதல் அணி படையினர் இனிமேல் வரமாட்டார்கள் என்று நினைத்து உழவு இயந்திரத்தில் திரும்பிச் சென்றனர். அதில் 32 புலிகள் இருந்தனர்.

**32 புலிகள்**

உழவு இயந்திரம் உதயன் மூலைக்கு

(நமது நிருபர்)

வந்ததும் பதுங்கியிருந்த படையினர் கடும் தாக்குதலை நடத்தினார்கள். இத் திடீர் தாக்குதலை புலிகள் எதிர்பார்க்கவில்லை. அப்படியிருந்தும் படையினரை நோக்கி புலிகளும் தாக்கினார்கள். ஆனாலும் உழவு இயந்திரம் வசமாக முற்றுகையிடப்பட்டதால் படையினரின் தாக்குதல் வெற்றியளித்தது.

உழவு இயந்திரத்தில் சென்ற 32 புலிகளும் பலியானார்கள். படையினர் தரப்பில் ஒருவர் மட்டுமே பலியானதாக படைவட்டாரங்கள் கூறியுள்ளன.

பலியான புலிகளின் ஆயுதங்களை மட்டுமே எடுத்துக் கொண்டு படையினர் முகாம் திரும்பினார்கள். அதே நேரம் ஏனைய பகுதிகளில் நிலையெடுத்து நின்ற புலிகளின் அணிகள் உதயன் மூலைக்கு விரைந்தன. பலியான உறுப்பினர்களது உடல்களை புலிகளும் எடுத்துச் சென்றனர்.

மறுநாள் 22.07.97 அன்று காலையில்தான் படையினர் அப்பகுதிக்கு மீண்டும் சென்றனர். புலிகள் எடுத்துச் செல்லாமல் விட்டிருந்த உடல்களை படையினர் கண்டெடுத்தனர்.

உயிரற்ற அந்த உடல்கள் மீதும் படையினர் ஆத்திரத்தில் சுட்டதாக நேரில் பார்த்த பொதுமக்கள் சிலர் தெரிவித்தனர்.

முன்கூட்டியே படையினருக்கு தகவல் கிடைத்ததால் புலிகளின் தாக்குதல் திட்டம் தோல்வியில் முடிந்துள்ளது.

இத் தாக்குதலை அடுத்து புலிகள் பதிலடியாக பாரிய தாக்குதல்களில் ஈடுபடலாம் என்று அஞ்சப்படுகிறது. ■

## புலிகளுக்கெதிரான உளவியல் யுத்தம்!

புலிகள் இயக்கத்தினருக்காக கிழக்கில் படையினரால் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. புலிகள் இயக்க உறுப்பினர்கள் மத்தியில் உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதே இதன் நோக்கம் என்று தெரிகிறது.

வடக்கில் உள்ள புலிகள் சுகபோகமாக இருப்பதாகவும், கிழக்கு மாகாண புலிகள் போரிட்டு மடிவதாகவும் சித்தரிக்கும் காட்டூன்களைக் கொண்ட பிரசுரங்களும் படையினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஹெலிகொப்டர்கள் மூலம் இப் பிரசுரங்கள் போடப்பட்டன.

புலிகளுக்கு எதிரான உளவியல் யுத்தத்தில் படையினர் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளதையே இது வெளிப்படுத்துகிறது.

ஆனால், வட பகுதியைச் சேர்ந்த புலிகள் இயக்க உறுப்பினர்களும் தற்போது கிழக்கு போர் முனைகளில் செயற்பட்டு வருகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்திலும் வட பகுதியைச் சேர்ந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் தாக்குதல்களில் பங்கெடுத்து வருகின்றனர்.

திருமலையில் சாள்ஸ் அன்ரனி படைப் பிரிவில் வடபகுதி புலிகள் இயக்க உறுப்பினர்களே பெரும்பாலானவர்களாக உள்ளனர். இந்நிலையில் படையினரின் பிரசுரம் புலிகள் இயக்க உறுப்பினர்கள் மத்தியில், படையினர் எதிர்பார்க்கும் தாக்கங்களை ஏற்படுத்தப்போவதில்லை என்றே தெரிகிறது.

இதுதவிர, கிழக்குக்கு சமீபத்தில் அனுப்பப்பட்ட புலிகளின் படையணியில் வட பகுதியைச் சேர்ந்த உறுப்பினர்களும் பெருமளவில் உள்ளனர் என்று தகவல்கள் கூறுகின்றன. ■

## போதிய பொருட்கள் கையிருப்பில் உள்ளன!

### யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிப்பு!

கப்பல் போக்குவரத்தில் பாதிப்பு ஏற்படலாம் என்று கருதி யாழ் குடாநாட்டில் பொருட்களைப் பதுக்குவதில் வர்த்தகர்கள் சிலர் ஈடுபட்டனர்.

பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் என்று கருதிய பொதுமக்களும் கடைகளுக்கு விழுந்தடித்துச்சென்று பொருட்களை வாங்கிச் சேகரித்தனர்.

இதனால் யாழ் குடாநாட்டில் பொருட்களின் விலை கிடுகிடுவென்று உயர்ந்தது. தட்டுப்பாடுகளும் ஏற்பட்டன.

இதனையடுத்து யாழ் குடாநாட்டு பாதுகாப்பு தலைமையக கட்டளை அதிகாரி ஜெனரல் பி.ஏ.கருணதிலக ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

'யாழ் குடாநாட்டு மக்களுக்கு' என்ற தலைப்பில் விடுக்கப்பட்டுள்ள அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ் குடாநாட்டில் தற்போது எரிபொருள் மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும்,பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் சில வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

புலிகள் கப்பலை தீயிட்டதாலும், கடத்தியதாலுமே இவ்வாறு நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இச் செய்தி முற்றிலும் தவறானதாகும். யாழ் குடாநாட்டில் எவ்விதமான பொருட்களுக்கும் தட்டுப்பாடு கிடையாது, என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ் குடாநாட்டில் ஆறுமாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாக யாழ் அரச செயலக வட்டாரங்களும் கூறியுள்ளன.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பொருட்களை பதுக்குவோரே செயற்கையான தட்டுப்பாட்டை உருவாக்குகின்றனர். ■

## பதிலடித் தாக்குதல்!

யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் புலிகள் இயக்க உறுப்பினர்கள் ஏழுபேர் படையினரின் தாக்குதலில் பலியாகினர். 9.07.97 அன்று இரவு இச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இத் தாக்குதலுக்கு பதிலடியாக கொடிகாமத்தில் புலிகளால் ஒரு தாக்குதல் நடத்தப்பட்டது.

16.07.97ல் நடத்தப்பட்ட அத் தாக்குதலில் ஏழு படையினர் பலியாகினர். அவர்களிடமிருந்து நான்கு துப்பாக்கிகளும், புலிகளால் கைப்பற்றப்பட்டன. காலை 8.45 மணியளவில் ரோந்து சென்ற படையினர் மீதே இத் தாக்குதல் நடத்தப்பட்டது. ■

## கண்ஜாடை காட்டினார் – வயோதிபருக்குச் சூடு!

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் 16.07.97 அன்று மூன்று பெண் புலிகள் சைக்கிளில் சென்று கொண்டிருந்தனர். அவர்கள் முன்பாக ஒரு வயதானவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார்.

படையினரின் சோதனை அரணைச் சமீபித்தபோது அந்த வயதானவர் படையினருக்கு கண்ஜாடை காட்டினாராம். அதனை பெண்புலிகளில் ஒருவர் கவனித்துவிட்டு தப்பியோட, ஏனைய இரு பெண்புலிகளும் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகினர்.

தப்பிச் சென்ற பெண்புலி உறுப்பினர் அன்றிரவே மற்றொரு உறுப்பினருடன் அந்த வயோதிபர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

'அவரை அழைத்து நெற்றியில் சுட்டு விட்டு போய்விட்டார். ஆனால் சூடு நெற்றியில் சரியாக படாததால் அந்த வயோதிபர் உயிர் தப்பி, யாழ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கி சூட்டுக்கு உள்ளானவர் துரையப்பா அரசரத்தினம், வயது 58. கொக்குவிலைச் சேர்ந்தவர். ■

## யுத்த மனோநிலை தேவையாம்!

அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்தி விட்டு நாட்டின் தென்பகுதி மக்களிடையே யுத்த மனோநிலையை உருவாக்க வேண்டும்.

அரச நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் இவ்வாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளதாக 'திவயின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்கம் அளிக்கும் விளக்கப்பட்டறை கடந்த வாரம் களுத்துறையில் நடைபெற்றபோது, அதில் கலந்து கொண்ட அமைச்சர்கள், எம்.பி.க்கள் ஆகியோரே முன் கண்டவாறு வலியுறுத்தியுள்ளனர்.

அங்கு சமுகமளித்திருந்த ஓர் அமைச்சரும், பிரதி அமைச்சர் ஒருவரும் மட்டுமே இந்த யோசனைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இந்த யோசனையை நிராகரித்த ஜனாதிபதி, இவ்வாறான முயற்சிகள் நாட்டில் இனக் கலவரங்கள் ஏற்பட வழிவகுக்கும் என்று தெரிவித்தார், என 'திவயின' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ■

## உருமாறும் செய்திகள்!

நாவலடி முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் ஒட்டமாவடியைச்சேர்ந்த இரண்டுபேர் பலியாகினர். ஜாயத்து முஹமட் (50) அவரது மகனான இஸ்மாயில் (20) ஆகியோரே பலியானவர்களாவர். பௌசியா (16), இளவத்தம்பி ஆகியோர் காயமடைந்தனர்.

இந்த ஷெல் தாக்குதல் புலிகளால் நடத்தப்பட்டதாக செய்தி ஒன்று பரவியது. இதனையடுத்து ஓட்டமாவடியில் சற்றுப் பதற்றமான நிலை ஏற்பட்டது. பின்னர் அது புலிகளால் ஏவப்பட்ட ஷெல் அல்ல வென்று தெரிந்ததும் பதற்றம் அடங்கியது.

## மூவர் பலியெனத் தெரிவிப்பு!

மட்டக்களப்பு-ஏறாவூர்-5ம் குறிச்சி எல்லையிலுள்ள பொலிஸ் காவலரணைத் தாக்க புலிகள் இயக்கத்தினர் எடுத்த முயற்சியின்போது பொலிஸார் முந்திக் கொண்டு தாக்குதலை முறியடித்தனர். இச்சம்பவம் கடந்த 18.07.97 அன்று இடம்பெற்றது. இதில் தமது தரப்பில் லெப்டினன்ற் கிருஷ்ண பிள்ளை-சற்குணம் (அங்கையன்), 2வது லெப்டினன்ற் யோகராஜா– ஈஸ்வரன் (குணபாலன்); வீரவேங்கை கிருஷ்ணபிள்ளை-உதயகுமார் (சிவகிரி) ஆகியோர் பலியானதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். ■

## பிரிட்டனில் தஞ்சம் வழங்க கோரிக்கை!

### "புகலிடம் கோருவோருக்கு உதவுக"

பிரிட்டனிடம் தஞ்சம் கோரியுள்ள அனைவருக்கும் பொது மன்னிப்பளித்து, அவர்களுக்கான உதவிகளைச் செய்ய வேண்டும் என்று குடிவரவு சட்ட ஆலோசகர்களின் சங்கம், தஞ்சம் கோரும் உரிமைக்கான பிரசாரர்கள் குழு மற்றும் 'ஜஸ்டிஸ்' என்ற பெயருடைய நீதிக்கான குழு ஆகிய நிறுவனங்கள் ஒன்றிணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன. பிரிட்டன் உள்துறைச் செயலர் ஜாக் ஸ்ட்றோவிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நாட்டில் தஞ்சம் கோரி, சராசரி இரண்டாயிரம் பேர் வரை மாதாந்தம் வந்து சேர்கின்றனர். தற்போது எழுபதாயிரம் பேரின் விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்படாமலுள்ளன. இலங்கைத் தமிழர்களுடைய விண்ணப்பங்களே இதில் பெரும்பாலானவை என்று கூறப்படுகிறது.

"தஞ்சம் கோரி அனுப்பப்படும் விண்ணப்பங்களை பரிசீலனை செய்வதற்காகத் தற்போது கடைப்பிடிக்கப்பட்டு வரும் நடைமுறைகள் அநீதியானவையும் நடைமுறைக்குதவாதவையுமாகும். இவற்றை மாற்றி அமைத்து சட்ட பூர்வமான குடிவரவு விசாரணை சபைகளை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். தஞ்சம் கோருவோர் மற்றும் குடியேற அனுமதிகோருவோருக்கான பொருளாதார உதவிகளைக் கட்டுப்படுத்த வேண்டாம்" என மேற்படி சங்கங்கள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிராகரிக்க உத்தேசித்திருக்கிறது.

தஞ்சம் கோருவோருக்கு பிரிட்டனில் இடமளிக்க வேண்டும் என்று சட்டம் இருக்கிறது. ஆனால் மிகக் குறைந்த தொகையினருக்கே தஞ்சமளிக்கப்படுகிறது. ஆகவே காலதாமதமின்றி விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, உள்துறை அமைச்சு, தஞ்சம் கோருவோருக்கு சட்டப்படியான உரிமைகளை வழங்க துரிதமான நடவடிக்கைகளை எடுக்குமாறு இச்சங்கங்கள் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளன. ■

## ஊரடங்கு நேரத்தில் பிரசவங்கள்!

யாழ்குடாநாட்டில் இரவு நேர ஊரடங்கு அமுலில் இருப்பதால் அவசர நோயாளர்கள், கர்ப்பிணிப் பெண்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்வதில் பல்வேறு சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன.

ஓர் ஆஸ்பத்திரியில் தங்கியுள்ள நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் அவசர சிகிச்சைக்காக வேறு ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர்.

ஆனால் இரவு நேரத்தில் ஒரு நோயாளியை அல்லது கர்ப்பிணிப் பெண்ணை வீட்டில் இருந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலை பலருக்கு ஏற்படுகின்றது.

தென்மராட்சிப் பகுதியில் இரவுநேரத்தில் வீடுகளில் பிரசவங்கள் நிகழ்வது அதிகரித்துள்ளன.

நிறைமாதக் கர்ப்பிணிகள் இரவு நேரத்தில் பிரசவ வேதனைக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்களில் பல பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றனர்.

அவர்களை அவசரமாக அழைத்துச் செல்ல வாகன வசதி பெற ஊரடங்கு நேரத்தில் முடியாது போய் விடுகின்றது. ■

## போருக்கு ஆள்திரட்டும் போதனை!

மட்டக்களப்புக்குத் தெற்கேயுள்ள பிரசித்திபெற்ற தாந்தாமலை ஆலய உற்சவம் இம்முறையும் விமர்சையாக இடம்பெற்றது. படையினரின் கண்காணிப்பின் கீழ் இல்லாத பகுதியில் உள்ள இக்கோயிலின் உற்சவத்தைப் புலிகள் இயக்கத்தினரே முன்னின்று நடத்தினர். பெரிய இரு ஜெனரேற்றர்களினால் மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது.

திருவிழாவுக்காக வரும் உள்ளூர் மக்களின் போக்குவரத்து ஏற்பாடுகளும் புலிகள் இயக்கத்தினராலேயே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

ஆலயத்தில் குழுமியிருந்தோர் மத்தியில் ஒருபுறம் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறு பற்றிய விவரணப் படங்கள் காண்பிக்கப்பட்டுக் கொண்டிருக்க, மறுபுறம் புலிகள் இயக்கத்தின் உள்ளூர் முக்கியஸ்தர் ஒருவரால் "விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு சரித்திரம் படைக்க வாரீர்!" என்ற தொனிப்பொருளிலான கருத்துரை வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. தாந்தாமலை ஆலயத் தீர்த்தோற்சவம் கடந்த 21.07.97 அன்று முடிவுற்றது.

இதனிடையே நாட்டின் பெரும்பாலான பகுதிகளிலிருந்து கதிர்காம ஆலயத்தின் வருடாந்தக் கொண்டாட்டங்களைக் காண இந்து, பௌத்த, இஸ்லாமிய சமூகங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சென்றிருந்தார்கள். ஏராளமான வாகனங்கள் கதிர்காமச் சேவையிலீடுபடுத்தப்பட்டதால் உள்ளூர்ப்போக்குவரத்துப் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தது. ■

## "ஆயுதங்களைக் கைவிட்டால்தான் பேச்சு!"

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு!

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த அரசு தயார், என்று நீதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கூறியதாக செய்திகள் வெளியாகின. இதனையடுத்து தமிழ்க் கட்சிகள் சிலவும் அரசின் நிலைப்பாட்டுக்கு பாராட்டுத் தெரிவித்திருந்தன.

இதேவேளை பி.பி.ஸிக்கு அமைச்சர் பீரிஸ் அவர்கள் வழங்கியுள்ள பேட்டியில் தெரிவித்துள்ளதாவது:

"விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். பேச்சுவார்த்தைக்கான ஒருகால எல்லையை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால் புலிகளோடு பேச அரசாங்கம் தயாராக உள்ளது.

போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வைத் தேடும் அதே நேரத்தில், புலிகளை இராணுவ ரீதியில் முறியடிக்கும் அரசின் இரட்டை உத்திகளில் முரண்பாடு எதுவும் கிடையாது" என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். ■



படிப்பகம்

www.padippakam.com

# "முறைகேடு நடக்கவில்லை"
## தமிழ் கல்வியமைச்சர் தெரிவிப்பு

(கண்டி நிருபர்)

தோட்டப் பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனத்தின் போது பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாத்ததும்பறை பிரதேச செயலாளர் பிரிவு மாணவி ஒருவருக்கு நியமனம் வழங்கலின் போது எந்தவித அநியாயமும் இழைக்கப்படவில்லையென 'முரசு' செய்தியைச் சுட்டிக் காட்டி, மத்திய மாகாண தமிழ் கல்வி அமைச்சர் திரு.வீ. புத்திரசிகாமணி மாகாணசபையில் உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்தினார். கடந்த 212 ஆவது முரசு இதழில் "ஆசிரியர் நியமனத்தில் முறைகேடுகள்" என்ற செய்தி தொடர்பாக சபையில்– அதனைப் பிரஸ்தாபித்து 118 புள்ளிகளைப் போட்டிப் பரீட்சையில் மாணவி பெற்றாலும்கூட, பரீட்சை எழுதும் காலப்பகுதியில் ஜீ.ஸி.ஈ. உயர்தரப் பரீட்சையில் அவர் சித்தியடைந்திருக்கவில்லையெனவும் இதன் காரணமாகவே அவர் நேர்முகப்பரீட்சையின் போது நியமனம் பெறக்கூடிய தகுதியை இழந்தார் எனவும் அமைச்சர் புத்திரசிகாமணி சபையில் மேலும் கூறினார். முறைகேடுகள் எதுவும் இடம்பெறவில்லையெனவும் அவர் மேலும் சொன்னார்.

இதேவேளையில் மாகாண சபையின் உப தலைவர் திரு. இரா. தங்கவேல், சபையில் பிரஸ்தாபிக்கையில் தோட்டப் பாடசாலை ஆசிரியர் நியமனங்களில் பல முறைகேடுகள் நடந்திருப்பதை ஆதாரபூர்வமாக சபையில் விளக்கினார். தனது மகளும் இதே நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும், இதேபோன்ற அநீதிகளினால் மேலும் பல அப்பாவி மாணவர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். இது விடயத்தில் கல்விச் சேவைகள் சபை ஆணைக் குழுவின் செயலாளர் திரு.என்.ஏ. பிரேமரத்னவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவித்து, கண்டியில் இடம்பெற்ற தோட்டப் பாடசாலைகள் ஆசிரியர் நியமனக் கடிதம் வழங்கும் வைபவத்தில் மாகாணசபை தமிழ் உறுப்பினர்களுக்குக்கூட அழைப்பு விடுக்கப்படாமையும் கவலைக்குரியதெனவும் திரு. தங்கவேல் தெரிவித்தார்.

# வழிகெடும் இளைஞர்களை நல்வழிப்படுத்துக!
## இந்து மதகுருமாரிடம் படையினர் வேண்டுகோள்!

மட்டக்களப்பு– வாழைச்சேனையில் சமீப காலந்தொட்டு தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வரும் நிலை பற்றிப் படையினர் மிகுந்த பிரயாசை மேற்கொண்டு வருகின்றனர். இதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பல சமூக நல்லுறவுக் கூட்டங்களும் ஏற்கனவே அப்பகுதியில் நடத்தப்பட்டுவிட்டன. எனினும் இந்து ஆலயங்களின் சார்பாக எவரும் அழைக்கப்படாத குறையை நிவர்த்திக்கும் வகையில் கடந்த 14.07.97 அன்று இந்து ஆலயங்களைச் சேர்ந்த 7 பேரை அழைப்பித்து வாழைச்சேனைப் பகுதிப் பாதுகாப்பு அதிகாரி கேர்ணல் சில்வாவினால் கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. பிரதேச செயலாளர் திரு.கே. கதிர்காமநாதனும் அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அக்கூட்டத்திற்கு வந்திருந்த இந்து ஆலயத்தைச் சேர்ந்த குருமாரிடம், "நீங்கள் வழிகெட்டுச் செல்லும் இளைஞர்களை நல்ல போதனைகளைக் கூறி, அவர்களுக்கு நல்வழி காட்டுங்கள். அவர்கள் தவறான பாதையில் சென்று கொண்டிருப்பதை எடுத்துச் சொல்லுங்கள்," என்று படையினர் கூறிய பொழுது அங்கிருந்த இந்து மத குருமார், "நாங்கள் வழக்கமாக ஆலயங்களில் நல்வழிப்படுத்தலையே செய்து வருகிறோம். ஆனால் நல்வழி நாடி ஆலயத்திற்கு வரும் இளைஞர்கள் கூட ஆலயத்திற்குள் வைத்துப் படையினரால் தாக்கப்படுகிறார்களே! மதகுருமாராகிய எமக்குள் பேதங்கள் இல்லை. நாம் எப்பொழுதும் பகைமை உணர்வை வளர்ப்பதில்லை," என்றனர்.

# ஏமனாக மாறிய கசிப்புக் கடை!
## 4 படையினர் பலி 119 வீடுகளுக்குத் தீவைப்பு!

மட்டக்களப்பு-வாழைச்சேனை, புதுக்குடியிருப்பில் கடந்த 15.07.97 அன்று காலை 7.45 மணியளவில் படையினரை எதிர்பார்த்துப் புலிகள் இயக்கத்தினர் மறைந்திருந்து தாக்கியதில் 4 படையினர் பலியானார்கள்.

இப்பகுதியிலுள்ள வடிசாராயம் விற்பனை செய்யும் கடையொன்றுக்குப் படையினர் வழக்கமாகச் செல்வதுண்டாம். இதைச் சில நாட்களாக அவதானித்த புலிகள் இயக்கத்தினர் எட்டுப்பேர் சம்பவதினத்தன்று இந்தக் கடைக்கு அருகிலிருந்த வீடுகளுக்குள் பதுங்கிக் கொண்டனராம். 'புலி'கள் அங்கு பதுங்கியிருப்பதைக் கண்ட், ஏதோ விபரீதம் அங்கு நிகழப்போவதை எண்ணி பொது மக்கள் பெரும்பாலானோர் அவ்விடத்தை விட்டு ஏற்கனவே இடம் பெயர்ந்துவிட்டனர். எனினும் புலிகள் இயக்கத்தினர் வந்து பதுங்கியிருந்த இரு வீட்டுக்காரர்களும் ஓட எத்தனித்த பொழுது புலிகள்! "ஓடவேண்டாம் எதுவும் நடக்காது. நாங்கள் சும்மாதான் வந்திருக்கிறோம்," என்று கூறி அவர்களைத் தடுத்து தம்முடன் வைத்துக் கொண்டனராம். அச்சமயம் படையினர் நால்வரும் தாம் வழக்கமாகச் செல்லும் வடிசாராயக்கடையை நெருங்கிய பொழுது புலிகளின் பொறிக்குள் சிக்கினார்கள்.

இதன் விளைவாக ஏற்பட்ட தொடர் சம்பவங்களின்போது வாழைச்சேனை மின்சார சபை ஊழியர் கே. சங்கரமூர்த்தி (50) கத்திக் குத்துக்கு இலக்கானார். 119 வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 32 வீடுகள் உடமைகளுடன் சாம்பராகியுள்ளன. 30 வீடுகளின் வேலிகளும் கொளுத்தப்பட்டுள்ளன. ஒரு கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த புறாக்களும் எரிந்து போயின. சமாதானச் சின்னமான புறாக்களும் ஆவேசத்திற்குப் பலியாகியுள்ளன. புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரும் பலியாகியுள்ளார்.

ஸ்தலத்திற்கு வாழைச்சேனை பாதுகாப்பு அதிகாரி கேர்ணல் சில்வா சென்று பார்வையிட்டுள்ளார். குறித்த சம்பவத்தினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பீதிநிலையையும், பாதிப்புக்களையும் பிரதேச செயலாளர் திரு. கே. கதிர்காமநாதன் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

# பொலீஸ்படைக்கு திரட்டல்

பொதுஜன முன்னணி பா.உக்கள் ஒவ்வொருவரும் 50 பேரை பொலிஸ் படையில் சேர்ப்பதற்கு சிபார்சு செய்யலாம் என சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் 18 முதல் 30 வயதுக்குட்பட்டவராக இருக்கவேண்டும்.

பொலிஸ் படைக்கு ஆள் திரட்டுவதற்காக ஏற்கனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பலன் தரவில்லை என்பதனால் இந்த ஏற்பாடு. சேர்க்கப்படுவோர் குறுகிய காலப் பயிற்சியை முடித்துக் கொண்டதும் வடகிழக்கில் சேவைக்கு அனுப்பப்படுவர். முடிவுத் திகதி ஜூலை 28.

# ஆசிரியர் கல்விக் கல்லூரிகள்
## எண்ணிக்கை உயர்த்தப்படும்!

(கண்டி நிருபர்)

ஆசிரியர் கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கை ஏழில் இருந்து பதினைந்தாக அதிகரிக்கப்பட உள்ளன.

கல்வி, உயர்கல்வி அமைச்சு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. இதே வேளையில் கல்விக் கல்லூரிகள் அனுமதியைப் பெறும் பயிற்சி மாணவர்கள் தாம் சித்தியடைந்துள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பாட நெறிகளின் கீழ் இரண்டு நெறிகளில் பயிற்சி பெறவும் வகை பேணப்படும். இப்போதையப் பயிற்சித் திட்டத்தின் கீழ் ஒரே ஒரு பாடநெறியை மாத்திரமே பயிற்சிக்காகத் தெரிவு செய்யலாம்.

புதிய திட்டத்தின் கீழ் இத்தகைய கண்டிப்பு தளர்த்தப்படும். முதல் மொழி, சமயம், சமூகக் கல்வி, தொழில் நுட்பம், விவசாயம், சித்திரம், நடனம், சங்கீதம், நூலகம், புள்ளி விபரத் தொழில் நுட்பம் ஆகிய பாடநெறிகளே புதிதாக அறிமுகம் செய்யப்பட உள்ளன.

உத்தேச புதிய கற்கை நெறிகளுக்கான பாடத் திட்டம் பெரும் அளவில் தயாராகி இருப்பதுடன் புதிய பாடநெறிகளைக் கொண்ட கற்கைகள் அடுத்த வருடம் அல்லது, 1999ஆம் ஆண்டு நடைமுறைக்குவரும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பொழுது நாடு எங்கணும் இயங்கும் 11 ஆசிரியர் கல்விக் கல்லூரிகளின் எண்ணிக்கையும் 14 ஆக அதிகரிக்கப்படவும் கல்வி, உயர்கல்வி அமைச்சு திட்டமிட்டுள்ளது.

# 7 சடலங்கள் ஒப்படைப்பு

மிருசுவில் பகுதியில் கடந்த 9ம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் இறந்ததாக 7 இனந்தெரியாத இளைஞர்களின் சடலங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் கடந்த 10ம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டன.

சுமார் 20ல் இருந்து 25 மதிக்கத்தக்க இந்த இளைஞர்களின் சடலங்கள் அடையாளம் காணும் பொருட்டும் பிரேத பரிசோதனையின் நிமித்தமும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

# குண்டுவீச்சு நினைவுதினம்

நவாலியில் 1995 ஜூலை 9ம் திகதி இடம்பெற்ற புக்காரா விமானத்தாக்குதலில் மரணமடைந்தவர்களின் இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நவாலி சென் பீற்றர்ஸ் தேவாலயத்தில் கடந்த 9ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் மறை மாவட்ட முதல்வர் அருட்திரு. செல்வராசா அடிகள் தலைமையில் நவாலி பங்குத் தந்தை எரிக் றொசானின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் இறந்தவர்களின் உற்றார் உறவினர்களும் நூற்றுக்கணக்கான இந்து-கிறிஸ்தவ மக்களும் கலந்து கொண்டனர்.

இறந்தவர்களின் உருவப்படங்களுக்கு மாலை அணிவித்து அவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

# அதிபர்களுக்கு இடைக்கால அதிகரிப்பு

(திருமலை நிருபர்)

இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தோரது சம்பளம் இடைக்கால அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது. 1997 மே 13ல் வெளியான கல்விச் சேவைச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொதுநிர்வா- நிர்வாகச் சுற்றறிக்கை 2/97ன் படி ரி-16-5, ரி-16-4, ரி-16-3 ஆகிய சம்பள அலகுகள் முறையே முதலில், இரண்டாம், மூன்றாம் தர அதிபர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கல்வி, உயர்கல்வி அமைச்சின் செயலாளர் எம்.டீ.டீ. பீரிஸ், திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச் சம்பள அதிகரிப்பு ஜனவரி 97 தொடக்கம் வழங்கப்படவுள்ளது. அதன்படி ஆண்டொன்றுக்கு முதலாந்தர அதிபர்சேவையின் ஆரம்பச் சம்பளம் 117,960 ரூபாவாகவும் இரண்டாந்தர அதிபர்களது ஆரம்பச் சம்பளம் 90,420 ரூபாவாகவும் மூன்றாந்தர அதிபர்களது சம்பளம் 72,240 ரூபாவாகவும் அமையும்.

இலங்கை அதிபர் சேவையின் முறைப்படியான உள்வாங்கல் இடம்பெறும் வரையிலான இடைக்காலத் தீர்வாகவே இவ்வதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.


விளம்பரப் பகுதி

COMPUTER COURSES

DIPLOMA IN COMPUTER STUDIES
Basic Computer Concepts, Ms Dos, Ms Windows, Turbo Pascal, CA Clipper, Ms Word, Ms Excel
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 4,750/=

MICROSOFT OFFICE
Basic Computer Concepts, Ms Dos, Ms Windows, Ms Word, Ms Excel, Ms Powerpoint, Ms Access
காலம் : 3 மாதம் கட்டணம் : Rs 6,000/=

DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING
Information Technology, Ms Dos, Windows, Excel
Any one of the following Accounting Package
Accpac Plus Accounting, Quick Books, M.Y.O.B
காலம் : 2 மாதம் கட்டணம் : Rs 4,500/=
2nd & 4th August 97 முதல் ஆரம்பமாகின்றது

• VISUAL BASIC • VISUAL C++
• CA CLIPPER • VISUAL FOXPRO
• MS ACCESS • TURBO PASCAL
Duration : 2 Months Fee : Rs 4,500/=

INDIVIDUAL & GROUP CLASSES
வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட வகுப்புகள்
UNLIMITED PRACTICAL HOURS
INSTITUTE OF INFORMATION SYSTEMS
IIS புதிய சந்தைக்கு முன்பாக
4C, 1st Floor, Fussels Lane,
வெள்ளவத்தை Tel : 074 - 517390

தெய்வீக மருத்துவம்
சர்வதேச சமூக தெய்வீக சேவை
GOVT. Regd. No: HA/04/BT/219
வாழ்க்கையில் ஏற்படும் காதல் (ஆண்-பெண்) பிரச்சினை, திருமணம், கல்வி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணத்தடை, தீய சக்திகளின் தொல்லை, கிரக தோஷம், வேண்டியவர்களை சேர்க்க, வேண்டாதவர்களை அகற்ற– இது போன்ற தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் எதுவானாலும் உடனுக்குடன் நிவர்த்தியளிக்கப்படும். கம்பியூட்டர் வடிவமைப்பில் ஜாதகம், காண்ட வடிவமைப்பில் எதிர்கால வாழ்க்கைப்பலனை அறிந்து கொள்ள-மட்டக்களப்பு பிரபல "பாலுசோதிடரை (வைத்தியர்)" நேரில் சந்திக்கமுடியாதோர், வெளிநாட்டவர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். பொருட்களை தபாலில் (V.P.P) அனுப்பிவைப்போம். விரும்பிய குருதட்சனை (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றது. தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்:

| | |
|---|---|
| பாலு சோதிடர் S.A.M.P. | BALU SOTHIDAR- S.A.M.P. |
| தெய்வீக சக்தி நிலையம். | THEYVIGA SAKTHY CENTRE |
| கல்லடி அரசடிப்பிள்ளையார் வீதி. | BATTICALOA (P.O) |
| மட்டக்களப்பு. | SRI LANKA. |

"வாழ்விலிருளை நீக்கி ஒளியையேற்றுவோம்"
DISPEL DARKNESS IN LIFE AND LET LIGHT SHINE

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPHY)

மனோதத்துவ சிகிச்சை மூலம் அடிமனதில் பதித்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்குங்கள். உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களை.

இளம் சமுதாயதினர் மெலிந்து. கனவில் சக்தியிழந்து. ஞாபக மறதி. பயம். நடுக்கம். வெட்கம். சந்தேகம். ஏமாற்றம். பீதி. நித்திரயின்மை என்று தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தீய பழக்கங்கள் மனோதத்துவ சிகிச்சை அளித்து உடன் நிறுத்தி புத்துயிர் அளிக்கப்படும்.

SEXUAL DISORDERS

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும். 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில். தான்வீரியம் உள்ள ஆண்மகனாக்கி விட்டேன் என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.

வெளிநாட்டில் வசிப்போருக்கு

வெளிநாட்டில் இருப்பவர்கள் தங்களின் தாம்பத்திய குறைபாடுகளுக்கு விரிவான கடிதத் தொடர்பு கொண்டு மனோதத்துவ சிகிச்சையைப் பதிவு நாடாமூலம் பெற்றுச் சுகமாக்கலாம். (பதில் தவறாது பெற தபால் செலவுக்குப் பணம் அனுப்பவும்).

மனநிலை பாதிப்புக்கள். மன நோய்கள் "ஹிஸ்டீரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா. தலையிடி. வாதம் பயோரியா. வெள்ளைபோதல். நீரிழிவு. கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேற்று இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.

கொழும்பில் ஜூலை 20 முதல் 31 வரை

Dr. P. Arumugam. Abamed Tourist inn. Bang Building No:10. Reclamation Road. (Entrance Bankshall St., Opposite Ranjanas) Colombo 11. T.P. 436383. 436390 கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No. 078-71101. கொழும்பில் முன்கூட்டி பதிவு செய்யவும்.

ஓட்டமாவடி ஆகஸ்ட் 5,6 ம் தினங்களில்

Dr. முகைதீன் டிஸ்பென்செரி. ஓட்டமாவடி.

கல்முனையில் ஆகஸ்ட் 9,10,11,12, தினங்களில்

T.M.M. பாமசியிலும் T.P. 065/29329
மற்ற நாட்களில் Dr. P. Arumugam No. 33, Tissa Weerasingam Sq., Boundary Road, Batticaloa விலும் சந்திக்கலாம்.

திருமண மங்கள சேவை

திருமண வயதில் உள்ள ஆண்களினதும், பெண்களினதும் ஜாதகங்கள் எம்மிடமுண்டு, வயது, தகுதி, தொழில், குடும்பப்பாரம்பரியம்(ஜாதி) போன்ற அடிப்படையில் நீங்கள் விரும்பும் தரத்தில் முறைப்படி ஜாதகப்பொருத்தம் பார்த்து நிச்சயிக்க விரும்பும் பெற்றோர் தொடர்புகொள்ளவும்.

S.P.S. சேகரக் குருக்கள்
405, பசறை வீதி, விஹாரகொட–பதுளை

ரெறாசோ ஷிப்ஸ்
(TERRAZZO CHIPS)
★ கலர்பவுடர் (Pigments) (Holland, Germany)
★ வெள்ளை சீமெந்து (Asano)
ரூபா 9/- க்கு மேல்
றம்சன்ஸ்
443, பழைய சோனகத் தெரு.
கொழும்பு – 12.
தொலைபேசி – 431511, 434411

பழுது பார்த்தல்
வீடியோ கமெரா,
போட்டோ கமெரா
திருத்திக்கொடுக்கப்படும்
நியூ விக்ரேஸ்
New Victors
40 1/3, Galle Road,
Colombo-06.
(Hongkong bank அருகாமையில்)
T.P-594492

காண்டம்
முனிவர் அருளிய ஏடுகளில் அமைந்த காண்டம் எனும் நாடி ஜோதிடத்தில் உங்கள் பலன்களை
ரிஷி. S.மணி
மூலம் அறிய வாருங்கள்
வெளிநாட்டிலுள்ளவர்களும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு பார்க்கலாம்.
S. MANI
144 2/1, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு – 6.
T.P. 586218

'மந்திரயோகி' மாந்திரீக மருத்துவம்
APPROVED CHARITY அரசாங்கப் பதிவு இல. HA14/BT/176
'எல்லாப்புகழும் இறைவனுக்கே'
கர்ம-காலபலனினால், தீயசக்திகளினால், தீவினைகளினால் தீராத உடல்மனநோய்கள், காதல், திருமணம், தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வேறுகாரியத்தடைகளும், காதலர்கள் ஒன்றுசேர முடியாமை, கணவன் மனைவி குடும்பப்பிரச்சினைகள், வேண்டியவர்கள் வெறுத்தல், பிரிந்து செல்லல், வேறு பிரச்சினைகளும் ஏற்படலாம். இவைகளுக்கு இறைவனருளி முனிவர்கள் கையாண்ட கைகண்ட புராதன பாரம்பரிய மருந்து, மந்திர யந்திரவசியங்களினால் நிவாரணம் பெற்று இன்பமாக வாழ, தகாத உறவை, போதை வஸ்த்தை மறப்பிக்க, வேறு (மருத்துவ) காரியங்களுக்கு வரமுடியாதவர்கள், வெளிநாட்டவர்கள் மஹா சக்தி உபாசகர் "மந்திரயோகி" டாக்டர் சக்தியானந்தபாவாவிற்கு [(D.H.M.D.Ac) (இலங்கை) M.B.B.S.(H).S.M.P (இந்தியா)] முழுப்பெயர்களுடன் கோரிக்கைகளை எழுதி கடல்கடந்தும் உடன்வேலை செய்யும் அதி ஆகர்ஷணசக்தி வாய்ந்த இறைபரிகாரப்பொருட்களை தபாலில் பெற்று விருப்பங்களை உடன் நிறைவேற்றிக்கொள்கின்றார்கள். 12ரூபா 50சத முத்திரைகள் இரண்டும் விரும்பிய குருதட்சணையும் (மணியோடர்) அனுப்புபவர்களின் விடயங்கள் முதலில் கவனிக்கப்படுகின்றன. விஷ(பாம்பு) கடிக்கு மந்திரத்தினால் விஷமிறக்கி மருந்து கொடுத்து இலவசமாக



அவசரசிகிச்சை அளிக்கப்படுகின்றன.
நாடவேண்டிய பெயர், விலாசம்
YOGI.DR.SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTRE (INDIAN CLINIC)
(KALLADY) BATTICALOA (P.O), SRI LANKA.
குருசக்தி நிலையம், (பிள்ளையார் கோவில் வீதி), (வேலூர்), கல்லடி–மட்டக்களப்பு, இலங்கை.



படிப்பகம்

www.padippakam.com

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# யாருக்கு விரித்த வலை?

## திருப்பத்தில் நடந்த திடீர் தாக்குதல்!

தனது நீலநிற பஜிரோவில் திருமலையில் இருந்து இறக்கக்கண்டி நோக்கி புறப்பட்டார் எம்.ஏ.எச். மஹ்ரூப் எம்.பி.

எதிரிகளும் கிடையாது. எச்சரிக்கையும் கிடையாது. அதனால் ஒரே ஒரு பாதுகாவலர் மட்டும்தான் கூடச் சென்றார். மேலும் ஒரு குழந்தை உட்பட நான்குபேரும் பஜிரோவில் இருந்தனர்.

இறக்கக்கண்டியில் புலிகளால் கடத்தப்பட்ட முஸ்லிம் மீனவர்களின் குடும்பத்தினரைச் சந்தித்து ஆறுதல் சொல்லிவிட்டு திரும்புவதுதான் மஹ்ரூப் எம்.பி.யின் விஜயத்தின் நோக்கம்.

திருமலையில் இருந்து நிலாவெளி செல்லும் பாதையில் பஜிரோ விரைந்து கொண்டிருந்தது.

தெருவில் வேறு வாகனங்களோ மக்கள் நடமாட்டமோ இருக்கவில்லை. அடுத்து நடக்கப்போகும் விபரீதத்தை துக்கம் அனுஷ்டிப்பது போல் தெரு வெறிச்சோடிக் கிடந்தது.

நேரம் 10.20 மணி.

ஆறாம் கட்டை தண்ணீர் தாங்கியை பஜிரோ நெருங்கிச் சென்றது. அந்த தண்ணீர் தாங்கி மலைத்திட்டான பகுதியில் காவலரண் இருக்கிறது.

கடந்த வருடம் ஆறாம் கட்டை பொலிஸ் முகாம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டது. அதன்பின்னர் தற்போது இராணுவத்தினரும், பொலிசாரும் காவலரண் அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

தண்ணீர் தாங்கியில் இருந்து பார்த்தால் சுற்றுப்புறங்களை நன்கு அவதானிக்க முடியும். அதனால்தான் அங்கு பொயிண்ட் போடப்பட்டுள்ளனர்.

தண்ணீர்தாங்கி காவலரணில் இருந்து 1½ கிலோமீட்டர் தூரத்தின் முன்னால் தெருவில் ஏற்றமான ஒரு வளைவு வரும்.

அந்த வளைவு இருப்பதால் அதற்கு அப்பால் உள்ள நடமாட்டங்கள் தண்ணீர் தாங்கியில் இருந்து பார்த்தாலும் தெரியாது.

**அது ஒரு அபாய வளைவு. அந்த வளைவில் வைத்துத்தான் ஈ.பி.ஆர். எல்.எஃப். திருமலை மாவட்ட பொறுப்பாளர் ஜோர்ச்சும் அவரது குழுவினரும் 1989 இல் புலிகளால் கொல்லப்பட்டனர்.**

ஜோர்ச்சும் அவரது குழுவினரும் சென்ற வாகனம் அந்த வளைவில் திரும்பியபோதுதான் புலிகளால் தாக்கப்பட்டது.

அத் தாக்குதல் நடந்தபோது தண்ணீர் தாங்கியடியில் இந்தியப்படையினர் முகாமிட்டிருந்தனர். அவர்கள் சத்தம் கேட்டு விரைந்து செல்ல முன்னரே ஜோர்ச் குழுவினரை தாக்கிவிட்டு புலிகள் தப்பிச் சென்றிருந்தனர்.

அத் தாக்குதலின் பின்னர் அந்த வளைவை ஜோர்ச் வளைவு என்றும் சொல்வதுண்டு.

அதே வளைவில்தான் மஹ்ரூப் எம்.பி.யின் பஜிரோ வேகம் குறைந்து மெல்லத் திரும்பிய நொடியில் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களுக்கு உள்ளாகியது.

துப்பாக்கி வேட்டுக்கள் பஜிரோ சாரதி உட்பட உள்ளே இருந்தவர்கள் மீதும் சரமாரியாக பாய்ந்துள்ளன. அதன் பின்னர் பஜிரோவின் உள்ளே இருந்தவர்கள் வெளியே இழுத்துப் போடப்பட்டுள்ளனர்.

மஹ்ரூப் எம்.பி. பஜிரோமீதான தாக்குதலின்போதே கொல்லப்பட்டாரா அல்லது வெளியே இழுக்கப்பட்டு சுடப்பட்டு பலியானரா என்பது தெரியவில்லை.

**வாகனத்தின்மீது சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் பாய்ந்துள்ளன. 4 வயது குழந்தை வாகனத்தின் மீதான தாக்குதலின்போதுதான் பலியானதாகத் தெரிகிறது. பலியானவர்கள் வாளால் வெட்டப்பட்டதாக வெளியான செய்திகளில் உண்மையில்லை.**

உள்ளே ஆயுதங்களுடன் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்ற விபரம் தெரியாததால், பஜிரோவில் இருந்து பதில் தாக்குதல் நடத்தப்பட முடியாதளவுக்கு சரமாரியாக வேட்டுக்கள் பொழியப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்க முக்கிய தலைவருமான ஜோர்ச் பலியான அதே ஆறாம் கட்ட வளைவில் மற்றொரு விபரீதம் நடந்து முடிந்தது.

ஐந்து நிமிடங்களுக்குள் எல்லாமே முடிந்து போயின. இறக்கக்கண்டி நோக்கி புறப்பட்டார் மஹ்ரூப் எம்.பி. அங்கிருந்து ஏறக்குறைய ஆறுமைல் தூரத்தில் வைத்து பலியானார்.

சம்பவத்தை நேரில் கண்டவர்கள் எவருமில்லை. சம்பவம் நடைபெற்ற பகுதி குடிசன நெருக்கம் இல்லாத பகுதியாகும்.

சம்பவ இடத்துக்கு கிழக்குப் புறம் முன்னர் ஆத்திமோடு என்ற தமிழ்க் கிராமம் இருந்தது. தற்போது அக்கிராமம் அழிந்து போய் காடாகிக் கிடக்கிறது. மேற்குப்புறம் உள்ளது இலுப்பைக்குளம் என்னும் கிராமம். அங்கு கிட்டத்தட்ட 35 தமிழ்க் குடும்பங்களே அங்கொன்றும் இங்கொன்றுமாக குடியிருக்கின்றன.

மஹ்ரூப் எம்.பி. கொலை தொடர்பாக இதனை எழுதி முடிக்கும்வரை புலிகள் உரிமை கோரவுமில்லை. மறுக்கவும் இல்லை.

மஹ்ரூப் எம்.பி. கொலைக்கு புலிகள் காரணமாக இல்லையெனில் மறுக்காமல் இருக்க மாட்டார்கள். புலிகள் அல்லாமல் வேறு ஒரு சக்தி இக்காரியத்தை செய்திருந்தால் புலிகளை வீண் பழிக்கு உள்ளாக்கும் நோக்கமும், புலிகளை முஸ்லிம்களுக்கு எதிரானவர்களாக சித்தரிக்கும் எண்ணமும் அதில் இருக்கும். எனவே புலிகள் அதனை அனுமதித்துக் கொண்டு இருக்க ஒரு காரணமும் இல்லை.

**இறக்கக்கண்டியில் முஸ்லிம் மீனவர்கள் கடத்தப்பட்டதை அரசியல்வாதிகள் சிலர் முஸ்லிம்களுக்கு எதிரான செயலாக சித்தரிக்க முற்படுவது தவறான செயல் என்று புலிகள் கண்டித்துள்ளனர். இந்நிலையில் முஸ்லிம் எம்.பி. ஒருவர் கொல்லப்பட்டதில் தமக்கு சம்பந்தமில்லையென்றால், புலிகள் கோபப்பட்டு உடனடியாக மறுத்திருப்பர்.**

ஏனெனில் புலிகள் இதனைச் செய்யவில்லை என்றால், மஹ்ரூப் எம்.பி. கொலை புலிகளுக்கு எதிரான அரசியல் நோக்கம் கலந்ததும், இறக்கக்கண்டி சம்பவத்தை பயன்படுத்தி எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றிவிடும் தந்திரம் கொண்டதாகவுமே அர்த்தப்படும்.

**ஆகவே, சம்பவம் நடந்து மூன்று நாட்களாகிய பின்பும் புலிகள் மறுக்காதிருப்பது சந்தேகத்துக்கு உரியதுதான். ஒருவேளை இனிமேல் மறுத்தாலும்கூட அது உடனடி மறுப்பைப் போல அர்த்தம் உடையதாக இருக்கப்போவதில்லை.**

ஏனெனில், புலிகளின் ஒவ்வொரு நகர்வும் தலைமைப்பீடத்தின் வழிநடத்தலின் கீழ்தான் மேற்கொள்ளப்படுகிறது. எனவே தம்மால் செய்யப்பட்டதா இல்லையா? என்பதை ஆராயும் அவசியம் தலைமைப் பீடத்துக்கு கிடையாது. எனவே மறுப்பின் தாமதத்துக்கு அது காரணமல்ல.

ஆனால், மக்களிடம் பல கேள்விகள் உள்ளன. அவற்றை பின்வருமாறு வரிசைப் படுத்தலாம்.

**1. மஹ்ரூப் எம்.பி.யை தீர்த்துக் கட்ட புலிகளுக்கு என்ன அவசியம்? அரசியல் ரீதியாகவோ, ஏனைய வழிகளிலோ புலிகளுக்கு அவர் இடையூறானவரல்ல.**

**2. தண்ணீர் தாங்கி காவலரணில் இருந்த படையினர் ஏன் சத்தம் கேட்டுச் செல்லவில்லை?**

**3. மஹ்ரூப் எம்.பி. அப்பாதை வழியாக வருவார் என்பது புலிகளுக்கு முன்கூட்டியே தெரியச் சாத்தியமுண்டா?**

இக் கேள்விகளுக்கான விடைகளை சம்பவங்களில் இருந்து தேடிப் பார்க்கலாம்.

மஹ்ரூப் எம்.பி.மீது புலிகள் தனிப்பட்ட ரீதியில் கோபப்பட காரணம் எதுவுமில்லை. ஆனால் வடக்கு-கிழக்கில் உள்ள அரசியல்வாதிகள்மீது புலிகளின் குறி திரும்பியிருப்பதும், அதன் ஆரம்பம்தான் தங்கத்துரை மீதான தாக்குதல் என்பதும் முன்னரே நாம் கூறியதுதான்.

சமீபத்தில் கிழக்குக்கு பிரபா தன் குரலில் பேசி அனுப்பிவைத்த கசட்டில் அரசியல்வாதிகள் மீதான குறிவைப்புக்கு உத்தரவு இடப்பட்ட செய்தி சென்றவார முரசில் இடம்பெற்றிருந்தது.

**தமிழ்-முஸ்லிம்-சிங்கள என்ற பேதம் இதில் கிடையாது. போராட்டத்தை பலவீனப் படுத்த துணைபோகிறவர்கள் என்ற பொதுவான வரையறைக்கு உட்பட்டே குறிவைக்கப் படுகிறது.**

மஹ்ரூப்மீது தனிப்பட்ட முறையில் யாரும் குறைசொல்ல இயலாது. ஆனால் அவர் சார்ந்துள்ள கட்சி வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிரானதாகும். எனவே தாயகக் கோட்பாட்டுக்கு எதிரானவர்களின் பட்டியலில் ஒரு அரசியல்வாதி என்ற வகையில் அவர் பெயரும் சேர்க்கப்பட்டதா? என்று கேள்வி எழுகிறது.

புலிகளைத் தவிர வேறு கோணத்தில் சந்தேகம் திருப்புவோம். படைத்தரப்பில் இருந்து செய்யப்பட்டிருந்தால், அந்த விடயம் எப்படியும் வெளியே கசியவே செய்யும்.

இரகசிய சதி என்பது ஒருவரோ இருவரோ சம்பந்தப்பட்டால் மட்டுமே காதும் காதும் வைத்தமாதிரி முடியுமே தவிர, ஒரு குழு சம்பந்தப்பட்டால் நிச்சயம் கசியும்.

அது தவிர, ஐக்கிய தேசியக் கட்சி காலத்தில் சேர்க்கப்பட்டவர்களே படையினருக்குள் அதிகமாக உள்ளனர். இராணுவ நடவடிக்கைகள் தொடர்பாக அரசு கூறும் தகவல்களைவிட ஐக்கிய தேசியக் கட்சி மேலதிக தகவல்களை பெற்றுக்கொண்டே இருக்கிறது. அந்தளவுக்கு உள் தொடர்புகள் இருக்கவே செய்கின்றன.

மஹ்ரூப் கொலையில் பத்துக்கு மேற்பட்டோர் பங்கு கொண்டுள்ளனர். தவிர இது எங்கோ மூடிய பகுதியில் நடந்த சம்பவமும் இல்லை. தண்ணீர் தாங்கியடி படையினருக்கும் தகவல் கொடுத்துவிட்டே செய்திருக்க வேண்டும். அப்படிப் பார்த்தால் கிட்டத்தட்ட 50 பேருக்கு மேல் விஷயம் அறிந்த வட்டாரம் விரிந்துவிடுகிறது.


ஆக, இரகசியம் பரகசியமாகிவிடுகிறது. ஒருவருக்கு தெரிந்தால்தான் அது இரகசியம். இரண்டு பேருக்குமேல் தெரிந்தால் அது பரகசியம்.

சினிமாக்களில் வருவதுபோல சதிசெய்வது அத்தனை சுலபமல்ல. ஆனால் இயல்பாகவே அவ்வாறான சந்தேகங்கள் தோன்றிக்கொண்டிருப்பதே வழக்கமாகிவிட்டது.

இயக்கங்களில் இருப்பவர்களுக்கு இரகசியாகளை பாதுகாக்கும் உணர்வுபூர்வமான கடப்பாடு இருக்கிறது. அதனை பல்லாயிரம் பேர் கொண்ட படையினர் மட்டத்தில் எதிர் பார்க்க முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சியை கொலையுகக் கட்சியாக சித்தரிக்கும் துருப்புச்சீட்டை நம்பியிருக்கிறது பொதுஜன முன்னணி அரசு. இந்நிலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான நிலையைத் தோற்றுவிக்கும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு மேல்மட்ட உத்தரவுகளும் கிடைக்கப்போவதில்லை.

தண்ணீர் தாங்கியடியில் இருந்த படையினர் சம்பவ இடத்துக்கு செல்லாதது ஏன்? துப்பாக்கிச் சூடுகள் கேட்டவுடன் தமது நிலைகளின் பாதுகாப்பை பற்றித்தான் அவர்கள் யோசிப்பார்களே தவிர, உடனடியாகப் புறப்பட்டுச் செல்ல நினைக்க மாட்டார்கள்.



மஹ்ரூப் எம்.பி. சென்ற வாகனம் தாக்கப்பட்ட இடம் அம்புக்குறியிடப்பட்டுள்ளது.

முகாம் தாக்கப்படும்போதே அருகிலுள்ள முகாமிலிருந்து உடனடியாக படையினர் உதவிக்கு விரைவதில்லை.

தமது காவலரணை தாக்கப் போகிறார்களா அல்லது தங்களை வெளியே இழுக்க வலை விரிக்கிறார்களா என்று தெரியாத நிலையில் உடனே ஒரு முடிவுக்கு வரத் துணியார். தவிர தெரு வளைவு காரணமாக அங்கு நடைபெற்ற சம்பவம் அவர்கள் கண்ணில் படாமல், சத்தம் மட்டுமே கேட்டிருக்கிறது.

இதே இடத்தில் இந்தியப் படை இருந்தும்கூட ஜோர்ச் குழுவினரை தாக்க அந்த வளைவில் புலிகள் முன்பு பதுங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே படையினரோ அல்லது வேறு தரப்போ செய்திருக்கலாம் என்ற சந்தேகங்களுக்கு வலுவான அடிப்படைகள் இல்லாமல் போகின்றன.

**ஆனால், மஹ்ரூப்மீது திட்டமிட்டு குறி வைக்கப்பட்டதா? என்பதுதான் சந்தேகமாக இருக்கிறது.**

இறக்கக்கண்டி விடயத்தை அரசியல் இலாபத்துக்கு பயன்படுத்த வேண்டாம் என்று புலிகள் கூறியிருந்தனர்.

இறக்கக்கண்டி மக்களை சந்திக்க முக்கிய அரசியல்வாதிகளோ, படை அதிகாரிகளோ செல்லக்கூடும் என்று புலிகள் சில நாட்களாகவே காத்திருந்திருக்கலாம்.

மஹ்ரூப் சென்றது பஜிரோ வாகனத்தில். அதன் நிறம் நீலம். வழக்கமாக பஜிரோ வாகனத்தை சாதாரணமானவர்கள் திருமலையில் பாவிப்பதில்லை. எம்.பிகள், முக்கிய பிரமுகர்கள், அரச அதிகாரிகள், படை மற்றும் பொலிஸ் அதிகாரிகள்தான் பயன்படுத்துகின்றனர்.

**ஆனால் குறிப்பிட்ட நீல நிற பஜிரோக்களை திருமலையில் உள்ள படை அதிகாரிகள் சிலரே பயன்படுத்துகின்றனர் என்பது முக்கியமான தகவல்.**

படை அதிகாரிகள் கிளீன் ஷேவ் எடுத்திருப்பர். அநேகமாக மீசையோ, தாடியோ கிடையாது. மஹ்ரூப் எம்.பி.யையும் சட்டென்று நோக்கினால் ஒரு அதிகாரியின் தோரணை அவரிடம் காணப்படும்.

**தாக்குதல் நடத்தியவர்கள் வளைவின் மறுபுறம் நின்றுள்ளனர். அதனால் வாகனத்தை நன்கு அவதானிக்க போதிய வாய்ப்பில்லை. வளைவில் வாகனம் திரும்பியதும் நீல நிற பஜிரோவும், கிளீன் ஷேவில் இருந்த மஹ்ரூப், மற்றும் பின்புறம் கான்ஸ்டபிள் வைத்திருந்த துப்பாக்கி என்பனதான் தாக்கியவர்களின் கண்ணில் பட்டிருக்கும்.**

தாமதிக்க தருணம் இல்லாத அவசர சந்தர்ப்பத்தில் சட்டென்று செய்யப்பட்ட ஊகத்துடன் பஜிரோமீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம்.

ஒரு பொலிஸ்காரருடன் மஹ்ரூப் எம்.பி. மட்டும் வருகிறார் என்றால் வானத்தை மறித்து நிதானமாகவே சுட்டுத் தீர்த்திருப்பர். ஆனால் தாக்கியவர்களோ பதில் தாக்குதலை எதிர்பார்த்து பலராக நின்று தாக்கியதுடன், வாகனத்தின்மீது சரமாரியாக சுட்டுத் தள்ளியிருக்கிறார்கள்.

**தாக்குதல் நடத்தப்பட்ட முறையானது மஹ்ரூப் எம்.பியை. எதிர்நோக்கி வலை விரித்துக் காத்திருந்ததுபோலத் தெரியவில்லை.**

அதுமட்டுமல்லாமல் மஹ்ரூப் எம்.பி. இறக்கக்கண்டி செல்லும் விஷயம் முன்கூட்டியே பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட விஜயமும் அல்ல.

துப்பாக்கிப் பிரயோகத்தின் பின்னரே பலியானவர் மஹ்ரூப் எம்.பி. என்று தெரிந்திருக்கலாம். பின்னர் அதனை வடக்கு-கிழக்கு அரசியல்வாதிகளுக்கு எதிரான தாக்குதல்களின் கணக்கில் புலிகள் சேர்த்திருக்கலாம்.

இதேவேளை இறக்கக்கண்டி மற்றும் மூதூர் சம்பவங்கள் தொடர்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள்மீது புலிகளுக்கு கோபம் இருப்பதும் உண்மை.

குறிப்பிட்ட சம்பவங்களின் பின்னணிகளைப்பற்றி கூறாமல், அவற்றை முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளாகச் சித்தரிக்கின்றனர் என்பதுதான் புலிகளின் குற்றச்சாட்டு.

திருமலை கடற்பரப்பில் 28.06.97 அன்று கடற்புலிகள் சென்ற படகு விபத்துக்கு உள்ளாகியது. கடலில் குதித்து நீந்தி இறக்கக்கண்டியில் அவர்கள் கரை சேர்ந்தனர்.

தங்களுக்கு உதவி செய்யுமாறு அவர்கள் கரையில் நின்றவர்களிடம் கேட்டனர். அப்போது அவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டதுடன், படையினரிடமும் பிடித்து ஒப்படைக்கப்பட்டனர். **இச் சம்பவத்தில் இரண்டு பெண் கடற்புலிகளை கரையில் நின்றவர்கள் பிடித்துச் சென்றனர். அவர்கள் இராணுவத்தினரிடமும் ஒப்படைக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் கதியும் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.**

இதன் பின்னரே கடற்புலிகள் அப்பகுதிக்கு வந்து மீனவர்களை கடத்திச் சென்றனர். தமிழ்க் கிராமம் ஒன்றில் எங்கள் உறுப்பினர்கள் காட்டிக் கொடுக்கப்பட்டாலும் இப்படித்தான் செய்வோம். பெண் கடற்புலிகளை ஒப்படைக்க வேண்டும் என்று கடற்புலிகள் எச்சரித்துவிட்டுப் போனார்களாம்.

இதேபோல மூதூரில் இராணுவத்தைச் சேர்ந்த பாஸ்கரன் என்பவரை புலிகளின் பிஸ்டல் குறுப்பினர் சுட்டுக் கொன்றனர். இவர் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்.

பாஸ்கரனை சுட்டுக் கொன்ற பிஸ்டல் குழு உறுப்பினர்கள் தப்பிச் சென்றபோது அங்கு நின்றவர்களால் கற்களால் எறிந்து துரத்திச் சென்றனர். அந்த குழப்பத்தில் திசை தெரியாமல் மாட்டிக்கொண்ட பிஸ்டல் குழு உறுப்பினர் கற்களாலும், தடிகளாலும் கடுமையாக தாக்கப்பட்டார். அந்த உறுப்பினரிடம் பிஸ்டலும், கைக்குண்டும் இருந்தபோதும் தன்மீது தாக்கியவர்கள்மீது அவற்றை பயன்படுத்தவில்லை. ஏனைய பிஸ்டல் குழு உறுப்பினர்கள் வானை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடி தப்பிச்சென்றனர்.

**அடிபட்ட நிலையில் மயங்கிக் கிடந்த பிஸ்டல் குழு உறுப்பினர் பின்னர் இராணுவ சிப்பாய் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.**

இச் சம்பவங்கள் தொடர்பாக கிழக்கின் முஸ்லிம் அரசியல்வாதிகள் குறிப்பிட்ட பகுதிகளுக்கு சென்று அவ்வாறான நடவடிக்கைகள் தொடராமல் நிறுத்த முயற்சிக்கவில்லை என்பது புலிகளுக்கு அதிருப்தி இருக்கிறது.

**ஆனால், குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள ஒரு சாரார் செய்யும் தவறுகளுக்கு குறிப்பிட்ட பகுதியில் உள்ள அனைவரையும் பொறுப்பாகக் கருதுவது எப்படி நியாயமாகும்? என்று அப் பகுதிகளில் உள்ள மக்கள் கேட்பதும் நியாயம்தான்.**

கிழக்கில் தமிழ்-முஸ்லிம் உறவுகள் சீர்குலைவதை பல சக்திகள் ஆவலுடன் தூண்டிவிட முயலுகின்றன என்பது புலிகளுக்கும் தெரியாததல்ல.

அதற்கு சாதகமான நிலவரங்களை தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையில் அக்கறையுள்ள தரப்புக்கள் ஏற்படுத்தி விடக்கூடாது என்பதே பொதுவான அபிப்பிராயமாகும். ஏனெனில் இதனால் நஷ்டம் இரண்டு சமூகங்களுக்கும்தான். ■

நாரதர்

# அதிரடி அய்யாத்துரை



**கிழக்கின் தனித்துவக் கட்சித்** தலைவர் கடும் கோபத்தில் இருக்கிறாராம். கொள்கை பரப்பாளர் மூலம் 'ஹிஸ்'மீது மறைமுகத் தாக்குதல் அறிக்கை விடுத்தது தெரிந்த கதைதான். அதன்பின்னரும் சற்றும் கலங்காமல் தன் பாதையில் தொடர்ந்து செல்கிறாராம் 'ஹிஸ்.' இறக்கக்கண்டி விவகாரத்திலும் ரெண்டு எழுத்தாருடன் 'ஹிஸ்' பேசித்தான் விடுதலைக்கு உதவினாராம். தலைவரின் விசுவாசிகள் 'ஹிஸ்' மீது பனிப்போரைத் தொடர்கிறார்களாம்.

**அதிகாரத் தரப்பாருக்கான கருத்தரங்கு** பற்றி செய்தி போட்டவை ஒரு முக்கிய செய்தியைத் தவறவிட்டுப் போட்டினம். அதுதான் கருத்தரங்கின் நோக்கம் பிடிபடவில்லையோ? கருத்தரங்கில் உரையாற்றிய பாதுகாப்புக்கு துணைப் பொறுப்பானவர், "யுத்தத்தில் வென்றே தீருவோம். 80 வீதம் முடித்துவிட்டோம். இன்னமும் 20 வீதமே பாக்கியுண்டு" என்று கூற கருத்தொருமிப்போடு கரகோசம் எழுந்ததாம். வடக்கு-கிழக்கு இணைப்புக்கும் பலர் கடும் எதிர் நிலை எடுக்க, அதுபற்றி இப்போது பேசவேண்டியதில்லை, எண்டு சொல்லப்பட்டதாம். இனியென்ன- தீர்வு துள்ளிக்கொண்டு வருவதுதான் பாக்கி.(?)

**யாழ் குடாநாட்டில்** நடந்த சம்பவம் இது: ஆட்டையும் குட்டிகளையும் களவெடுத்துப் போட்டினம் எண்டு ஒருவர்மீது ஆட்டு உரிமையாளர் புகார் செய்தாராம். காக்கி உடையினர் விசாரித்தவையாம். ஆடும் குட்டிகளும் மீட்கப்பட்டன. களவெடுத்தவருக்கு ஆட்டுக் குட்டியொன்றை கொடுத்து சமரசமாகச் செல்லுமாறு கூறி பிரச்சனையை முடித்தனராம். இதென்ன நீதி எண்டுதான் எனக்கும் புரியேல்லை! உங்களுக்கு...?

**கொக்குவில் பகுதியில்** இருந்து ரெண்டு உடல்கள் யாழ் மருத்துவமனையில் கொடுக்கப்பட்டதாம். ரெண்டு எழுத்தாரின் பெண் உறுப்பினர்களின் உடல்களாம். துணிகள் இல்லாமல் இருந்த தோடு, தீக்காயங்களும் உடலில் காணப்பட்டனவாம்.

**'முரசு' மீது** கடும் கோபத்தில் இருக்கிறார் கூட்டான கட்சித் தலைவர். சமீபத்தில் அவரைச் சந்தித்தார் ஒருத்தர். பேசிக் கொண்டிருந்த போது 'முரசு' பற்றியும் கதை வந்ததாம். அதுவரை அமைதியாகப் பேசிக் கொண்டிருந்த மூத்த தலைவரின் முகம் சிவந்து போனதாம். "அதுவும் ஒரு பத்திரிகையோ, யார் அதைப் படிக்கிறது?" எண்டு பாய்ந்தாராம். மூத்த தலைவரை நினைக்க எனக்கு சரியான கவலையாகக் கிடக்கு. யார் படிக்கிறது எண்டு கேட்குமளவுக்கு வெளியுலகத் தொடர்பே இல்லாமல் இருக்கிறார் பார்த்தியளோ? இப்பதான் புரியுது, சனத்தின் மனநிலை அவைக்கு ஏன் புரியுதில்லை எண்டு. ஆனால் ஐயாவும் முரசு வாசகர் என்பது உள்ளிடத் தகவல். நிற்க: ஐயாவுக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்!

**மனித உரிமைகள்** மறுக்கப்பட்டால் மனித உரிமைப் பணிக் குழுவிடம் சென்று முறையிடச் சொன்னார்கள். இப்போது மனித உரிமைப் பணிக்குழு உறுப்பினர்களே பயந்து கொண்டிருக்கினம். கலைக்குமாறு உத்தரவு வந்த நாளில் இருந்தே கிழக்கில் இருந்த அதன் உறுப்பினர்கள் நடுக்கத்தில்தான் இருக்கினம். ஏற்கனவே சிருடையினருக்கும் அவைக்கும் எட்டாம் பொருத்தம். கண்ணிலும் காட்டக்கூடாது. குழு கலைக்கப்பட்ட பின்னர் தம்மீது கோபம் காட்டப்பட்டால் யாரிடம் முறையிடுவது? எண்டு தெரியாமல் தவிக்கினமாம்.

**திடுக்கிடும் தகவல்** என்பார்களே! அப்படி ஒரு தகவலை என் காதில் போட்டார் ஒரு நண்பர். கொழும்பில் உள்ள பிரபல விடுதி ஒன்றில் பணியாற்றுகிறவர் அவர். ஜூலை 5ம் திகதி இரவு சம்பந்தமானவர் குடும்ப சகிதமாக அந்த விடுதியில்தான் தங்கியிருந்தவராம். திருவானமலை அசம்பாவிதம் அவருக்கு போனில் தெரிவிக்கப்பட்டதாம். மறுநாள்தான் வெளிநாட்டுப் பயணம் சென்றாராம். பின்னர் ஏன் பாருங்கோ அயல்நாட்டில் இருந்து அறிந்து 'ஆழ்ந்த கவலையடைந்தார்' எண்டு செய்தி கொடுக்கப்பட்டது? எங்கேயோ உதைக்குதல்லோ?!

**ரெண்டு எழுத்துத் தலைவருக்கு** கொழும்பில் உள்ள நம் மக்கள் சூட்டியுள்ள சங்கேதப் பெயர் 'வன்னித் தம்பி'.

இந்த வாரம் ஒரு குட்டிக் கவிதை- **எழுதியவர்: பா.ரமேஷ்.**

**விசாரணை**

"ஆராய்ச்சி மணிக்கு
அரசன் வரவில்லை.
ஆலய மணிக்கும்
ஆண்டவன் வரவில்லை.
சாவு மணிக்கு மட்டும்
இங்கே கூட்டமாய் சிலர்!" ■



படிப்பகம்

www.padippakam.com

**அரசியல் தொடர்**

**அற்புதன் — எழுதுவது**

# புலிகள் நடத்திய ஜூலைத் தாக்குதல்கள்!

மட்டக்களப்பில் தாளங்குடாவில் 1988 செப்டம்பர் பத்தாம் திகதி சிவஜெயம் பலியானான்.

யார் இந்த சிவஜெயம்?

கவிஞர் காசி ஆனந்தனின் சொந்தச் சகோதரர்.

காசி ஆனந்தனின் குடும்பம் முழுவதுமே போராட்டத்தோடு தொடர்பாக இருந்தது. துயரங்களை அனுபவித்தது.

காசி ஆனந்தனை மட்டுமல்லாமல் அவரது சகோதரர்களான சிவஜெயம், சுதர்சன் ஆகியோரையும் பொலிசார் கைது செய்து சிறையில் வைத்திருந்தனர்.

சிவஜெயமும், சுதர்சனும் 18 மாத காலங்கள் சிறையில் இருந்தனர். காசி ஆனந்தனின் சகோதரி சிவமலரையும் விட்டுவைக்கவில்லை. 12 மாதங்கள் அவரும் சிறையில் இருந்தார்.

தனது பிள்ளைகள் அனைவருமே துன்பப்படுவது பொறுக்காமல் காசி ஆனந்தனின் தந்தை காத்தமுத்து மாரடைப்பால் மரணமானார்.

## துரோகிகள் ஒழிப்பு

சிவஜெயம் காசி ஆனந்தனைவிட தீவிரமானவன்.

மட்டக்களப்பு எம்.பி.யாக இருந்தவர் ராஜன் செல்வநாயகம். சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்.

ராஜன் செல்வநாயகம் ஒரு எட்டப்பர். தமிழீழப் போராட்டத்தை காட்டிக் கொடுக்கும் துரோகி என்று கூட்டணியினரால் சுட்டிக்காட்டப்பட்டார்.

ராஜன் செல்வநாயகத்தை சுட்டுக் கொல்ல இளைஞர்கள் பலர் திட்டமிட்டனர். தமிழ் மாணவர் பேரவையினரும் ராஜன் செல்வநாயகத்தை தீர்த்துக்கட்ட ஒரு குழுவினரை நியமித்தனர்.

துரோகிகள் ஒழிப்புத்தான் போராட்டத்தின் முதற்படி என்று இளைஞர்கள் நம்பினார்கள். எங்கள் மத்தியிலுள்ள களைகளை முதலில் பிடுங்கி எறிய வேண்டும் என்று கூட்டணியினரும் மேடைகளில் நின்று அறிவித்தனர்.

ராஜன் செல்வநாயகத்தை சுட்டுக் கொல்ல 1975ல் ஒரு முயற்சி நடந்தது. அந்த முயற்சியில் ஈடுபட்டவர்களில் ஒருவர் என்று சிவஜெயம் 75ல் கைது செய்யப்பட்டான்.

கொழும்பில் நாலாவது மாடியில் வைத்து சிவஜெயம் விசாரிக்கப்பட்டான்.

சிவஜெயத்தை விசாரித்தவர் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை.

அவனது கைகளை நீளமாக விரிக்கச் சொல்லி பாரமான புத்தகங்களை அந்தக் கைகளில் அடுக்கினார்கள். பாரம் தாங்காமல் சிவஜெயம் அவற்றைக் கீழே போட்டபோதெல்லாம் பஸ்தியாம்பிள்ளை அடித்து நொறுக்கினார்.

பின்னர் வெலிக்கடைச் சிறையில் அடைக்கப்பட்டான். காசி, ஆனந்தன், சுதர்சன், சிவஜெயம் ஆகியோர் சிறையில் ஒன்றாக அடைக்கப்பட்டிருந்தது அப்போதுதான்.

## தப்பிய புலி

1984 மார்ச்சில் சிவஜெயம் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொண்டபின்னர் 1986ல் நடைபெற்ற உருக்கமான சம்பவம் ஒன்று:

மட்டக்களப்பு ஆரையம்பதியில் ஒரு வீட்டுக்குள் இருந்து பேசிக்கொண்டிருக்கிறான் சிவஜெயம். அப்போதுதான் அச்செய்தி வருகிறது.

ஆரையம்பதி கிராமம் இலங்கை இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப் பட்டுவிட்டது.

சிவஜெயம் உடனே வீட்டை விட்டு புறப்பட ஆயத்தமாகிறான். வீட்டுக்காரர்கள் அவனை வெளியே செல்லவிடாமல் தடுக்கிறார்கள்.

"நாங்கள் வேறு வீடுகளுக்கு போகிறோம். நீ இங்கேயே ஒளிந்து இருந்து கொள் தம்பி." என்கிறார்கள். ஒரு வயதான நோயாளிப் பெண், "நான் உன்னோடு கூட இருக்கிறேன் தம்பி. நீ இரு. எங்கேயும் போகவேண்டாம். சுட்டுப் போடு வானுகள்" என்கிறார்.

"அம்மா நீ கட்டிலுக்கு மேலே படுத்துக்கொள். படுக்கை விரிப்பை தரையில் படுவதுபோல இழுத்துவிடு" என்று பதுங்கிக் கொள்கிறான். அவனிடம் ஒரு கைக்குண்டு மட்டும் இருந்தது.

## சுற்றி வளைப்பு

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான சிவஜெயம் தங்கியிருக்கும் இரகசிய இடம் பற்றி இந்தியப் படையினருக்கு தகவல் கிடைக்கிறது.

சிவஜெயத்தை கைது செய்ய இந்தியப் படை விரைந்தது. சிவஜெயம் சுற்றிவளைக்கப்படுகிறான். இனித் தப்பிக்கொள்ளுவதற்கு சந்தர்ப்பமே இல்லை என்று முடிவுக்கு வருகிறான்.

சயனைட் விழுங்கி பலியான சிவஜெயத்தின் உடலைத்தான் இந்தியப் படையினரால் கைப்பற்ற முடிந்தது.

இராணுவத்தினர் வந்துவிட்டனர். வீட்டுக்கதவை தள்ளி உள்ளே வருகின்றனர். கட்டிலில் கிடந்த பெண்ணைப் பார்த்துவிட்டு திரும்புகிறார்கள்.

அன்று அப் பெண் மட்டும் உதவவில்லை என்றால் அன்றே சிவஜெயத்தின் கதை முடிந்திருக்கும்.



பிரபாவுடன் கிட்டு

அன்று சுற்றிவளைப்பில் தப்பிக் கொண்ட சிவஜெயம் 88ல் இந்தியப் படை சுற்றிவளைப்பில் சிக்கிக் கொண்டான்.

தந்தை செல்வா காலத்தில் போராட்டத்தில் குதித்த சிவஜெயம் பிரபாகரன் தலைமையிலும் இயங்கினான். கிட்டத்தட்ட 20 வருட காலம் போராட்டத்தோடு இணைந்திருந்தான்.

பலியாக முன்னர் தன் நெருங்கிய உறவினர் ஒருவருக்கு சிவஜெயம் எழுதிய கடித்தின் இறுதியில் குறிப்பிட்டுள்ளது இதுதான்: "நாம் நிச்சயம் வெல்வோம்"

காசி ஆனந்தனும் அவர் மனைவி சரோஜினியும் தமது குழந்தைகளான அமுதநிலா, தேனல்வி ஆகியோருடன் 1983ல் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

# சிறையும் — சித்திரவதைகளும் ஒரு இரகசியக் கடிதம்!

தனது சகோதரர் சிவஜெயம் பலியான செய்தி கேட்டு காசி ஆனந்தன் எழுதிய கவிதை இது;

"நஞ்சை உண்டு
நாடு காத்தவனே
நெஞ்சம் எரிய
நிற்கிறேனடா

மண்ணுக்காய் நீ
மடிந்த சாவினை
எண்ணி மகிழ்கிறேன்
இருந்தும் அழுகின்றேன்"

காசி ஆனந்தனின் மற்றொரு சகோதரர் சுதர்சன் தற்போது ஜெர்மனியில் புலிகள் இயக்க ஆதரவாளராக இருக்கிறார்.

காசி ஆனந்தன் தற்போதும் தமிழ்நாட்டில் தங்கியிருக்கிறார். புலிகள் இயக்க ஆதரவாள்ராகவே இருக்கிறார்.

## ஜூலைத் தாக்குதல்கள்

1987 அக்டோபர் மாதம் முதல் 1988 செப்டம்பர் வரையான காலப்பகுதியில் இந்தியப் படையைச் சேர்ந்த 681 பேர் பலியாகினர். இத் தகவலை இந்திய அமைதிப்படை தளபதி கல்கத் கூறியிருந்தார். 1852 படையினர் காயமடைந்தனர். 18 பேரைக் காணவில்லை என்றும் தெரிவித்தார்.

அக் காலகட்டத்தில் அன்றைய இந்திய நாணய மதிப்பின்படி 130 கோடியே 17 இலட்சம் ரூபாய்கள் அமைதிப்படைக்காக செலவிடப்பட்டன.

புலிகளும் தமது தரப்பு இழப்பை வெளியிட்டனர்.



காசி ஆனந்தன்

அக்டோபர் 10, 1987 முதல் பத்து மாதங்கள் நடைபெற்ற போரில் புலிகள் தரப்பில் 299 புலிகள் பலியாகியிருந்தனர்.

எப்போதும் ஜூலை மாதத்தில் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமாக நடப்பது வழக்கம்.

1988 ஜூலை மாதத்தில் இந்தியப் படையினருக்கு எதிராக புலிகளின் அதிரடித் தாக்குதல்கள் தீவிரமாக நடத்தப்பட்டன.

135 இந்தியப் படையினர் 1988 ஜூலையில் புலிகளின் தாக்குதல்களால் பலியாகினர். 38 பேர் படுகாயமடைந்தனர்.

யாழ் மாவட்டத்தில் 11 படையினரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 10 படையினரும், மன்னார் மாவட்டத்தில் 17 படையினரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 57 படையினரும், திருமலை மாவட்டத்தில் 11 படையினரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 படையினரும், அம்பாறை மாவட்டத்தில் 27 படையினரும் இந்தியப் படையில் பலியாகினர்.

1988 ஜூலை மோதல்களில் புலிகள் தரப்பில் 18 பேர் பலியாகினர்.

அதே ஜூலையில் இந்தியப் படையினரால் 47 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

பத்துப் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டனர். கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தியப் படையினரின் ஷெல் தாக்குதல்கள் காரணமாக 4 ஆயிரம் தமிழர்கள் அகதிகளாயினர்.

## தமிழகத் தேர்தல்கள்

தமிழ்நாட்டில் சட்டப்பேரவைக்கான தேர்தல்கள் 1989 ஜனவரி 21ம் திகதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

அத் தேர்தல் அறிவிப்பைத் தொடர்ந்து நான்கு முனைப் போட்டி ஆரம்பமானது.

தி.மு.க., அ.தி.மு.க. (ஜெயலிதா), அ.தி.மு.க. (ஜானகி), இந்திரா காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தனித்தனியே போட்டியிட்டன.

தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக்கு வருவதையே புலிகள் விரும்பினார்கள். இந்தியப் படை திரும்பிவரவேண்டும் என்று கலைஞர் உறுதியாகக் கூறிவந்த நேரம் அது.

தமிழ்நாட்டில் துறைமுகத் தொகுதியில் கலைஞர் கருணாநிதி போட்டியிட்டார்.

தமிழ்நாட்டிலிருந்த புலிகள் இயக்கத்தினர் தி.மு.க.வுக்கு ஆதரவாக தேர்தல் பணிகளிலும் இரகசியமாக பங்கெடுத்துக் கொண்டனர்.

புலிகள் இயக்க வாகனங்களும் தி.மு.க. பிரசார வேலைகளுக்கு பயன்படுத்தப் பட்டன.

தமிழக தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே இந்திய அரசு ஒரு காரியம் செய்தது.

சென்னைச் சிறையில் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தடுத்துவைத்திருந்த கிட்டு உட்பட புலிகள் அனைவரையும் 9.10.88 அன்று விமானத்தில் ஏற்றி பலாலிக்கு அனுப்பியது.

இலங்கைக்கு அழைத்துச் சென்று அவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்றே இந்திய அரசு கூறியது.

ஆனால் நடந்ததோ வேறு. பலாலிக்கு கொண்டுவரப்பட்ட புலிகள் பருத்தித்துறை, காங்கேசன்துறை மற்றும் திருமலையில் உள்ள தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டனர்.

## கிட்டு விடுதலை

கிட்டுவை புலிகளுடன் சென்று சேர்ந்து கொள்ளுமாறு விடுதலை செய்தார்கள். கிட்டு வன்னிக் காட்டுக்கு சென்று புலிகளுடன் இணைந்துகொண்டார். கிட்டுவின் வலது கரம்போல் இருந்த ரஹீமைக்கூட கிட்டுவுடன் செல்ல அனுமதிக்கவில்லை.

தமிழகச் சிறைகளில் புலிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால், தமிழகத் தேர்தலில் அதனையும் ஒரு பெரிய பிரசாரமாக செய்து, தி.மு.க. அனுதாபம் தேடும் என்று கருதியே அங்கு சிறைகளில் இருந்த புலிகளை யாழ்ப்பாணத்திற்கு அனுப்ப முடிவு செய்யப் பட்டது.

கிட்டு விடுதலை செய்யப்பட்ட செய்தியை பெரியளவில் பிரசாரம் செய்தது இந்திய அரசு. அதன்மூலம் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட புலிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர் என்று தமிழக மக்கள் நினைக்கட்டும் என்று கருதினர்.

காங்கேசன்துறையில் இந்திய தடுப்பு முகாமில் வைக்கப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

மருத்துவமனையில் இருந்து ஒரு கடிதம் எழுதி இரகசியமாக வெளியே அனுப்பினார். அக் கடிதத்தில் அதிர்ச்சியூட்டும் தகவல்கள் பல இருந்தன.

அந்தக் கடிதம் இதுதான்:

மருத்துவமனை,
காங்கேசன் துறை ராணுவமுகாம்,
யாழ்ப்பாணம் 24-10-88

9.10.88 அன்று இந்திய மண்ணிலிருந்து நாடு கடத்தப்பட்ட எனது பயணம் இன்று வரை முடியவில்லை. எமது போராளிகளிடம் ஒப்படைப்போம் என உறுதி கூறி அதற்குப் பொறுப்பாக RAW, IB, 'Q'பிராஞ்ச் அதிகாரிகள் பலாலி வரை வந்தனர்.

சொன்ன சொற்களைக் காப்பாற்ற இந்தியா இம்முறையும் தவறிவிட்டது. விமானத்தில் எம்மை அழைத்து வரும் போதே ஆடு, மாடுகள் போல கை, கால்கள் கட்டப்பட்டு கொண்டுவரப்பட்டோம்.

பலாலி வரையும் விமானத்தில் வந்த பின்பு கைகள் பின்பக்கமாக கட்டப்பட்ட நிலையிலேயே கெலிகாப்டரில் பருத்தித்துறை முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டோம்:

அங்கு எமது விவரங்கள் அறியப்பட்டு அடைத்து வைக்கப்பட்டோம்.

பருத்தித்துறையில் நாங்கள் 78 பேர், காங்கேசன்துறையில் 7 பேர், மதுரையிலிருந்து வந்தவர்கள் திருகோணமலையிலுமாக நாம் தடுப்புக் காவலில் இடப்பட்டோம். நோயினால் நான் பாதிக்கப்பட்டதனால் மறுநாள் காங்கேசன் துறையிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டேன். இங்கு வந்ததினால் பல உண்மைகளை

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

தெளிவாகவும், ஆதாரபூர்வமாகவும் அறிந்து கொள்ள முடிந்தது.

காங்கேசன்துறை இராணுவத் தடுப்பு முகாம் இலங்கை அரசின் 'பூசா' முகாமிற்கு ஒத்ததாகும். இங்கு யாழ் மாவட்டத்தில் கைது செய்யப்பட்டு விடுதலைப் புலிகள் என சந்தேகப்படுபவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை இந்த முகாமில் மாத்திரம் 1400 பேருக்கும் அதிகமானோர் அடைக்கப்பட்டுள்ளனர். சிலரை விடுதலை செய்தாலும் பெரும்பாலானோர் கேள்விக்குறியுடன் தமது காலத்தைக் கழிக்கின்றனர். இதில் 75 பேருக்கு குறைவாகவே விடுதலைப் புலிகளும், அவ்வியக்க உதவியாளர்களும், மீதி அனைவரும் அப்பாவி பொதுமக்கள் ஆவர்.

இவற்றைவிட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் மூலை முடுக்குகளிலும் உள்ள இராணுவ முகாம்களில் கணக்கற்ற அப்பாவிகள் காரணமின்றி கைது செய்யப்பட்டு சித்திரவதைக் கொடுமைகளை அனுபவித்து வருகின்றனர்.

இலங்கை அரசின் "4 ஆம் மாடி" எவ்வாறு மோசமான சித்திரவதைக்குப் பேர் போனதோ அதை விடக் கொடுமைக்கு பேர் போனது 'மருதனாமடம்' இந்திய ராணுவமுகாம்.

மனித நாகரிகமில்லாத மிருகத்தனமான சித்திரவதைகளின் உச்சக் கட்டமாக அக்டோபர் 87 முதல் பெப்ரவரி 88 வரை மாத்திரம் 13 அப்பாவித் தமிழர்களை இம்முகாமில் அடித்துக்கொன்றுள்ளது இந்திய இராணுவம். அதற்கு பின் எத்தனை உயிர்கள் போனது என்பது இராணுவ ரகசியம்.

நாவற்குழி இராணுவ முகாமிலும் பல உயிர்கள் போயுள்ளது. காங்கேசன்துறை முகாமிலும் விசாரணை என்ற பேரில் கொடூரமான சித்திரவதைகள் நடைபெற்று வருகின்றன. தலைகீழாகக் கட்டி அடிப்பது முதல் மின்சார அதிர்ச்சி கொடுப்பது வரை அங்கு நடைபெற்று வருகிறது.

பரம், மண்டலேஸ், அன்பு, மன்சூர் உட்பட பலரை ஜீப்பில் கட்டி கல்லிலும், முள்ளிலும் இழுத்துச் சென்றுள்ளனர். மூட்டைப்பூச்சிகளுக்கு மருந்தடிக்க வேண்டும் எனக்கேட்ட ஜெயவிந்தன், குமார் இருவரையும் அடித்துள்ளது இந்திய இராணுவம்.

இந்திய இராணுவத்தினர் வந்தால் இங்கு அடைபட்டுக்கிடப்பவர்கள் 'குட் மார்னிங், ஹெப்பி' என்பன சொல்ல வேண்டும்.

'A' பிளாக் பகுதியில் 109 கைதிகள் உள்ளனர். சமீபத்தில் இங்கு வந்த மேஜர் லலித் நாத் என்பவருக்கு 'குட் மார்னிங்' சொல்லாததால் எல்லோரும் 150 தோப்புக் கரணம் போட்டனர். இவர்களது மிருகத்தனமான அடியில் தயாளன் உட்பட மேலும் சிலருக்கு மனநோய் பிடித்து தற்போது நானிருக்கும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பீற்றர், பாலசுந்தரம் போன்ற வேறு சிலரை தலை மட்டும் வெளியில் தெரியும்படி மண்ணில் புதைத்து தோளுக்கு மேலாக டாங்கி, டிரக் போன்றவற்றை ஏற்றிக் கொன்றுள்ளது இந்திய இராணுவம்.

சோதி நாதன் எனும் 55 வயது பெரியவரைக் கொண்டுவந்து அடி, அடி என்று அடித்து LTTE-யின் முக்கிய அரசியல் பிரமுகர் என வைத்துள்ளது. 80 வயதுக்கு மேற்பட்ட கிழவர் ஒருவரை கண்ணிவெடி வைத்ததாகக் கைது செய்து அடித்துள்ளது.

காங்கேசன்துறை முகாமில் மேஜர் நாயர், மேஜர் சர்மா, காப்டன் ராஜன், கோவிந்தன், சுகுமார் ஆகியோர் சித்திரவதைக்கு பேர் போனவர்கள். இங்குள்ள இந்திய ராணுவ அதிகாரிகள் எவ்வளவுக்கெவ்வளவு கைதிகளைச் சித்திரவதை செய்கிறார்களோ அல்லது பொதுமக்களைக் கொல்கிறார்களோ அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதை அவதானிக்க முடிகிறது.

பதவி உயர்வுக்காக ராணுவ அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்கள் சொல்லில் அடங்கா. இம் முகாம் உணவினை இங்குள்ள நாய்கள் கூட உண்ணா. அவ்வளவு மோசமாகவும், புழுக்கள் நெளிவதையுமே கொடுப்பார்கள்.

இங்கு தலை கீழாகக் கட்டித் தொங்க விட்டு அடிப்பது, ஆண்குறியில் மின்சாரம் பாய்ச்சி வதைப்பது, மல வாசலில் கொதி எண்ணையும், மிளகாய்த் தூளும் கலந்து ஊற்றுவது இரத்த காயங்களுக்கு உப்புத் தண்ணீரும், மிளகாய்த்தூளும் கலந்து ஊற்றுவது என்பது சர்வ சாதாரணம்.

தாளையடி என்னும் கிராமத்தில் அமைந்துள்ள இந்திய இராணுவ முகாமின், பொறுப்பாளர் அவ்வூரிலும் அதன் அயல் ஊர்களிலும் உள்ள பெண்களின் சகோதரர்களைப் பிடித்து, அப்பெண்கள் வந்தால்தான் விடுவேன் என்று கூறி அப்பெண்களை தமது இச்சைக்குப் பயன் படுத்துகின்றார்கள்.

இவற்றை விட தற்போது இந்திய இராணுவத்தினரால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ற காட்டிக்கொடுக்கும் கும்பல்களை ஆயுதபாணிகளாக யாழ்குடா நாட்டில் விட்டுள்ளனர்.

இந்தியாவிலிருக்கும் காங்கேசன் துறை தடை முகாமிலும் தலையாட்டுவதற்கு நின்ற ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரை ஆயுதங்களுடன் குடாநாட்டில் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களை வேட்டையாடுவதற்கு விட்டுள்ளார்கள்.

எது எவ்வாறு இருந்தாலும் மக்களின் ஆதரவு பரிபூரணமாக விடுதலைப்புலிகளின் பக்கமே உள்ளது. எமது புரட்சிகர போராட்டத்தை எந்தவொரு சக்தியாலும் அடக்க முடியாது என்பது வரலாற்று உண்மை

இப்படிக்கு,
சிறையில் வாடும் விடுதலைப்புலி.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

# தீர்வுப் பொதியை அமுலாக்க ஒருதலைப்பட்சமான முயற்சிகள்!

# புலிகளுடன் பேசாதவரை சாத்தியப்படாத அரசியல் தீர்வு!

அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான அரசாங்கத்தின் தீர்வுப் பொதி பற்றி விளக்கமளிக்கப்பட்டது. பின்னர் அரச எம்.பி.க்கள் ஏகோபித்த முறையில் தாம் தீர்வுப் பொதியை ஏற்றுக் கொள்வதாக தமது கரங்களை உயர்த்தி சம்மதம் வெளியிட்டனர், என்று அரசியல் தீர்வு குறித்து அயராது பேசி வரும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கடந்தவாரம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டின்போது தெரிவித்தார்.

அரசியல் தீர்வு என்பது யாருக்கு? என்பதே இன்று முக்கிய கேள்வியாகும். பொதுஜன ஐக்கிய முன்னணியினர் அரசியல் தீர்வொன்றை ஆதரிக்கலாம் அல்லது எதிர்க்கலாம்.

ஆனால் ஏதோ ஒரு விதத்தில் இலங்கையின் எதிர்கால விமோசனமென்பது ஒரு பூரணத்துவமான அரசியல் தீர்விலேயே தங்கியுள்ளது. அத் தீர்வுகூட வடக்கு-கிழக்கின் தமிழ் பேசும் மக்களையே முதலில் திருப்திப்படுத்தப்படவேண்டியதாகவுள்ளது. ஏனெனில் வடக்கு-கிழக்குப் பிரச்சினை என்பது அப்பிரதேச மக்கள் சார்ந்ததே தவிர ஏனைய பிரதேசத்தவர்கள் சார்ந்ததல்ல.

**கடந்த கால ஆட்சியாளர்கள் செய்த தவறுகள், இன்றைய ஆட்சியாளர்கள் செய்யும் தவறுகளால் வடக்கு-கிழக்குப் பிரச்சினையின் தாக்கம் முழுநாட்டினையும் பாதித்திருக்கலாம். ஆனால் அப்பிரச்சினைக்கான தீர்வென்பது வடக்கு-கிழக்கு வாழ் மக்களையும் அவர்கள் சார்ந்த அரசியல் சக்திகளையுமே திருப்திப்படுத்த வேண்டியது இன்றியமையாததாகின்றது.**

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வென்பது தாயகக் கோட்பாட்டை ஆதாரமாகக்கொண்ட ஒரு சுயாட்சி அமைப்பையே வேண்டி நிற்கின்றது.

இலங்கை சுதந்திரமடைந்தபின்னர் இனப்பிரச்சினை ஆரம்பமான காலத்திலேயே சமஷ்டி, சுயாட்சி போன்றவற்றின் அடிப்படையிலான அரசியல் தீர்வுகளே வலியுறுத்தப்பட்டன.

இத்தகைய தீர்வுகள் எட்டப்படத் தவறியதையடுத்தே தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இத்தனிநாட்டுக் கோரிக்கையை ஆரம்பத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முதன்மைப்படுத்தி மிகத் தீவிரமாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி பிரசாரங்களைச் செய்தது.

வடக்கு-கிழக்கின் இளைஞர்கள் சக்தியைக் கூட பிரமாண்டமான முறையில் இத்தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பாக அணிதிரளச் செய்வதில் தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவெற்றி கண்டது. அவ்வெற்றி 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலிலும் வடக்கு-கிழக்கின் மூலைமுடுக்குகளிலெல்லாம் எதிரொலித்தது.

ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த வேகத்திலும், அது குறித்துப் பிரசாரஞ் செய்த முறையிலிருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பின்னர் தளர்வடைந்ததே வடக்கு-கிழக்குப் பிரச்சினையைப் பல்வேறு பரிமாணங்களுக்கும் உட்பட வைத்தது.

அத்துடன் தனிநாட்டுக் கோரிக்கையென்பது, 1977ம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி தனது தேர்தல் வெற்றிக்காக முன்வைத்த தந்திரோபாயமான ஒரு பிரசாரமென்பதும் நாளடைவில் தெளிவாகியிருந்தது.

வடக்கு-கிழக்கின் மூலைமுடுக்குகளிலெல்லாம் தனிநாட்டுக் கோரிக்கைக்காகப் பிரசாரஞ் செய்துவிட்டு, கொழும்பில் பாராளுமன்ற எதிர்க்கட்சியாக இடம்பிடித்து, தமது அரசியலை நடத்தத் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைப்பட்டது.

ஆனால் வடக்கு-கிழக்கு மண் வாசனையிலேயே துவண்டு, அம்மண்ணிலேயே உருப்பெற்ற இளைஞர் சக்தி தனிநாட்டுக் கோரிக்கையிலிருந்து எவ்விதத்திலும் தடம் புரள முன்வரவில்லை. இதன் காரணமாக ஏற்பட்ட ஆயுதப் போராட்டமே இன்றுவரை முடிவொன்றைக் காணமுடியாத நிலையில் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

எனவே கொழும்பில் இன்று பல்வேறு தமிழ் அரசியல் கட்சிகளும் இருக்கலாம். அவை பல்வேறுபட்ட கருத்துக்களையும் கொண்டிருக்கலாம். ஆனால் வடக்கு-கிழக்கின் தாயகக் கோட்பாட்டை அவை நிராகரிக்கவில்லை. அக்கோட்பாடு தொடர்ந்து மிகப்பலமாகவே இருந்து வருவதையே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நிலைப்பாடு எடுத்தியம்புவதாக இருக்கின்றது.

**இந்நிலையில் வடக்கு-கிழக்கின் ஆதார சுருதியாக இருந்து வரும் தாயகக் கோட்பாட்டை மையமாகக் கொண்ட சுயாட்சிக்குப் பங்கமேற்படாத ஒரு தீர்வே அப்பிராந்தியத்துக்கு ஏற்புடையதாகும்.**

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் அரசியல் தீர்வுத்திட்டம் பற்றி ஜனாதிபதி சந்திரிகாவும், அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் விளக்கமளித்தனர் என்று செய்திகள் வெளியாகின

இக் கருத்தரங்குக்கு பிரசார சாதனங்களிலும் மிகுந்த முக்கியத்துவமளிக்கப்பட்டது.

தீர்வு யோசனை தொடர்பாக இன்னமும் இறுதி முடிவு எட்டப்படாத நிலையில் ஆளும் தரப்பு எம்.பிகள் மத்தியில் எந்த அடிப்படையில் பொதுக் கருத்து எட்டப்பட்டது என்பது புதிராக உள்ளது.

**தமிழ் பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகள் தொடர்பாக இக் கருத்தரங்கில் பேசப்பட்டதாகவோ, பொதுஜன முன்னணியிடம்கூட அவை தொடர்பாக திட்டவட்டமான முடிவு இருப்பதாகவோ தெரியவில்லை. இந்நிலையில் ஆளும் தரப்பு எம்.பிகளுக்கான கருத்தரங்கு, இனப்பிரச்சனை தீர்வு முயற்சிகளில் தனக்கு அக்கறை இருப்பதாக வெளியுலகம் முன்பாக சித்தரிக்க அரசு செய்த முயற்சியாகவே அமைந்துள்ளது.**

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின்போதும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர் தமது கட்சிக்குள் உடன்பாடு உண்டு என்றே தெரிவித்திருந்தார். ஆனாலும் ஒப்பந்தம் தொடர்பாகவும், இனப் பிரச்சனை தொடர்பாகவும் இன்றுவரை ஐ.தே.கட்சி உறுப்பினர்களிடம் தெளிவற்ற நிலையே காணப்படுகிறது

இனப்பிரச்சனை தீர்வுக்கான அடிப்படை விடயங்களில் பிரதான கட்சிகளிடம் திட்டவட்டமான நிலைப்பாடுகள் இல்லாதபோது • கட்சிகளுக்கிடையிலோ, கட்சிகளுக்குள்ளேயோ இணக்கம் நிலவுவது சாத்தியமற்ற ஒன்றாகவே அமைந்திருக்கிறது.



எனவே வடக்கு-கிழக்கு மக்களையும், அங்கு ஆயுதப்போராட்ட அமைப்பாக இருந்து வரும் எல்.ரி.ரி.ஈ.யையும் திருப்திப்படுத்தாத எந்தவொரு தீர்வும் வெற்றிபெறப்போவதில்லை என்பதற்கு இலங்கை-இந்திய ஒப்பந்தமும், அதனை நடைமுறைப்படுத்துவதில் கண்ட தோல்வியும் நல்ல உதாரணமாகும்.

அவ்வுதாரணத்தை ஒரு படிப்பினையாகக் கொண்ட நிலையிலேயே இன்றைய ஆட்சியாளர்கள் தமது அரசியல் தீர்வு குறித்த அணுகுமுறைகளை வடிவமைக்க வேண்டும்.

இதனைவிடுத்து ஒருசாராரை மட்டும் திருப்திப்படுத்தி தாம் போடும் தப்புக் கணக்குகளுக்கு மத்தியில் தீர்வொன்றைத் திணிக்க ஆட்சியாளர்கள் முன் வருவார்களேயானால் வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகளின் தோல்வி என்பது ஒரு தொடர் கதையாகவே இருந்துவிடும்.

விடுதலைப் புலிகளை இராணுவரீதியிலும், அரசியல் ரீதியிலும் தனிமைப்படுத்தும் முயற்சிகளில் அரசு ஆர்வம் காட்டிவருவதையே அவதானிக்க முடிகிறது.

**தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்: அவர்களுடன் பேசாது தீர்வொன்று சாத்தியப்படாது என்பதை அனைத்து அரசியல் சக்திகளுமே நன்குணர்ந்துள்ளன.**

புலிகளுடன் பேசினால் மட்டுமே வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் என்று ஆட்சிக்கு வந்தவர்களே இன்றைய பொது ஜனஐக்கிய முன்னணியினர். இந்த முன்னணி பல்வேறு அரசியல் கட்சிகளினதும் ஒரு கூட்டுச் சேர்க்கையாகும்.

எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிகூட புலிகளுடன் பேசுவதன் மூலமே இறுதியும், முடிவுமான தீர்வை எட்ட முடியும் என்று எப்போதுமே கூறிவருகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணிகூட அண்மையில், அதன் முக்கிய உறுப்பினர் அ.தங்கத்துரை சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து விடுத்துள்ள அறிக்கைகளில் கூட அரசியல் தீர்வுக்கு புலிகளின் பங்களிப்பு இன்றியமையாதது எனத் தெரிவித்துள்ளது.

இதேபோன்றே ஏனைய தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளும் புலிகளுடன் பேசவேண்டுமென்பதை ஏற்றிருக்கக் காணப்படுகின்றன.



இந்நிலையில் புலிகளுடனான பேச்சுக்குறித்து தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளுடன் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் காண முற்படும் இணக்கம்தான் யாது? என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

**இவ்வாறு அவர் கூறியிருப்பதன் மூலம் புலிகளுடன் பேசாது ஒரு தீர்வை அரசு முன்வைக்க முயலுகின்றது: அல்லது புலிகளை முற்றிலுமாகப் பலவீனப்படுத்தும் பட்சத்தில், வடக்கு-கிழக்கு மக்களைத் திருப்திப்படுத்தாத, அதே சமயம் தென்னிலங்கையர்களைத் திருப்தி செய்யும் அரசியல் தீர்வொன்றைக் கொண்டுவரவே அரசு தருணம் பார்த்திருக்கின்றதென்றே அர்த்தங்கொள்ள வேண்டியுள்ளது.**

இலங்கையில் எந்தவொரு கட்சியும் பதவிக்கு வரலாம். எத்தகையதொரு தீர்வையும் முன்வைக்க முனையலாம். ஆனால் அத்தீர்வு சம்பந்தமாக வடக்கு-கிழக்கின் ஆயுதப்போராட்ட சக்தியாக இருந்து வரும் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசாதவரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை என்பதே உறுதி.

ஏற்கனவே புரியாத ஒரு புதிராக தீர்வுப் பொதி என்ற விடயம் இருக்கின்றது. இது குறித்து தமிழ் கட்சிகளிடையேயும், தமிழ் மக்களிடையேயும் கூட தகுந்த தெளிவின்றியுள்ளது.

அத்தகையதொரு நிலையில் ஒரு பரந்துபட்ட சமாதான சகவாழ்வை நோக்கி தீர்வுப்பொதியை எவ்வளவு தூரம் பொதுஜன ஐக்கிய முன்னணியினால் கொண்டு செல்ல முடியும் என்பதே முக்கிய கேள்வியாக உள்ளது. ■

---

# பேச்சுக்கு அரசு தயார்தானா?

**பு**லிகளுடன் பேச ஆளும் தரப்பு தயார். ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளின் இணக்கம் தேவை என்று ஜி.எல்.பீரிஸ் சொன்னதாக செய்திகள் வெளியாகின.

உடனே புரளிகளும் கிளம்பின. சுவிற்ஸர்லாந்தில் சூரிச்சில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சு என்று ஆங்கில தினசரி ஒன்று செய்தி வெளியிட்டது.

போதாக்குறைக்கு ஜனாதிபதியும் வெளிநாடு சென்றார். பாதுகாப்புக் காரணங்களுக்காக ஜனாதிபதி எந்த நாட்டுக்கு செல்கிறார் என்ற தகவல் வெளியிடப்படவில்லை.

எந்த நாட்டுக்கு ஜனாதிபதி செல்கிறார் என்று சொல்லப்படாதது இரகசியப் பேச்சு என்ற புரளிக்கு சிறகு முளைக்கச் செய்துவிட்டது.

முன்னரும் இப்படித்தான். ஓய்வுக்காக ஜனாதிபதி இந்தியா செல்ல, புலிகளுடன் பேச்சு நடத்துவது பற்றி ஆராயச் சென்றுள்ளார் என்று வதந்திகள் பரவின. பேச்சுவார்த்தையே ஆரம்பித்துவிட்ட மாதிரி விமர்சனங்களும் எழுதப்பட்டன.

இந்தியாவின் நிலைப்பாடு என்ன, இலங்கை அரசின் இன்றைய தந்திரம், நோக்கம் என்ன என்பதுபற்றியெல்லாம் தெளிவான புரிதல் இல்லாமல் வெளியான வதந்தி அது.

இந்தியா சென்ற ஜனாதிபதி சமாதானத் திட்டத்தோடு திரும்பப் போகிறார் என்று எதிர்பார்ப்பு கிளம்பியபோது, முரசு மட்டும் முற்றிலும் மாறான கணிப்பு சொல்லியிருந்தது. மேலும் போரைத் தொடரும் உற்சாகத்தோடுதான் ஜனாதிபதி திரும்பி வரப் போகிறார் என்று கூறியிருந்தோம்.

இந்தியாவில் இருந்து ஜனாதிபதி திரும்பிய பின்னரே 'ஒப்பரேஷன் எடிபல' திட்டமிடப்பட்டது.

தற்போது ஜனாதிபதி இலண்டன் சென்றுள்ளார் என்று 'ஐலண்ட்' செய்தி வெளியிட்டிருக்கிறது. இதற்கு முன்னரும் தனிப்பட்ட ஓய்வுக்காக திடீர் இரகசியப் பயணங்களை ஜனாதிபதி மேற்கொண்டிருக்கிறார்.

இத்தகைய இரகசிய பயணங்களும், ஓய்வுக்காகக்கூட ஜனாதிபதி வெளிநாடு செல்ல வேண்டியிருப்பதும் இந்த நாட்டில் பாதுகாப்பு நிலவரங்கள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதை ஜனாதிபதியே புரிந்து வைத்திருப்பதைத்தான் காட்டுகின்றன.

கொழும்பில் கிரிக்கெட் போட்டிகள் நடப்பதும், கிரிக்கெட் மைதானத்தில் கன்டோஸ் பெண்களின் கவர்ச்சித் துள்ளலும் மேற்பூச்சுக்கள் மட்டும்தான். நாட்டின் உள்ளே தீ கனன்று கொண்டிருக்கிறது. தலைநகரில் மட்டுமல்ல நாட்டின் எப்பகுதியிலும் பாதுகாப்பை துணிந்து உத்தரவாதப்படுத்த படைத்தரப்பால்கூட முடியவில்லை என்பதே உண்மையாகும்.

ஜனாதிபதிகூட நிம்மதியாக ஓய்வைக் கழிக்க முடியாத வெடிகுண்டுத் தீவாக இலங்கை மாறியிருக்கிறது. கந்தகக் கிடங்கொன்றில் பணியாற்றிவிட்டு சுத்தமான காற்றை சுவாசிக்க வெளியே செல்லவதுபோலத்தான், ஜனாதிபதியும் கடும் பாதுகாப்பு மத்தியில் பணியாற்றிவிட்டு, ஓய்வு தேவைப்படும்போதெல்லாம் நாட்டைவிட்டு வெளியே செல்ல வேண்டியுள்ளது.

உண்மை நிலமை இதுதான். ஆனால் அரசோ தனது பிரசாரங்கள் மூலம் இலங்கையில் ஒரு சிறு பகுதி தவிர மற்றெங்கும் அமைதி தவழ்வதுபோலவும், விரைவில் அச்சிறுபகுதியிலும் வெற்றிக்கொடி நாட்டிவிடலாம் என்பதுபோலவும் கூறிவருகிறது. இது எத்தனை அபத்தமான பிரசாரம் என்பதை ஜனாதிபதியின் வெளிநாட்டு பயணம் உணர்த்துகிறது.

இதுதவிர ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணத்தில் வேறெந்த இரகசியமும் இல்லை. எதிர்த்தரப்பின் குறியில் உள்ள முக்கிய தலைவர் ஒருவரின் தனிப்பட்ட வெளிநாட்டுப் பயணத்தை இரகசியமாக வைத்திருப்பதும் வழக்கமான முறைதான்.

புலிகளுடன் பேசத் தயார் என்றும் ஏனைய கட்சிகள் இணக்கம் இல்லை என்றும் ஜி.எல்.பீரிஸ் கூறியிருந்தால் அதில் ஒன்றும் ஆச்சரியமல்ல.

சமாதானத்தை விரும்பும் அரசு என்ற 'இமேஜை' கட்டிக் காப்பதற்காக பந்தை ஏனைய கட்சிகளின் கோட்டுக்குள் அடித்துவிட்டிருக்கிறார் நீதியமைச்சர்.

ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட தென்னிலங்கையின் இடதுசாரிக்கட்சிகள் அனைத்துமே புலிகளுடன் பேசுவதற்கு தடையான கருத்துக்களை இன்றுவரை கூறவில்லை.

அரசு போரை நிறுத்திவிட்டு புலிகளுடன் பேசத் தொடங்கினால் அதனை வேடிக்கை பார்க்கத்தான் ஐ.தே.கட்சி ஆவலாக உள்ளது.

புலிகளுடன் பேச்சு நடத்தினால் மறுபடி அப் பேச்சுவார்த்தை முறியும் என்பது ஐ.தே. கட்சியின் அசைக்க முடியாத நம்பிக்கை.



பீரிஸ்

போரில் வெற்றி வந்தாலும் பின்னடைவு ஏற்பட்டாலும் போரில் உறுதியாக நின்ற அரசு என்று பொதுஜன முன்னணி மார்தட்டிக்கொள்ளும். அப்படிச் சொல்ல வாய்ப்பில்லாமல் புலிகளுடன் பேசி மூக்குடைபடட்டும் என்று விரும்புகிறது ஐ.தே.கட்சி.

ஆனால் பொதுஜன முன்னணி அப்படி ஒன்றும் விவேகம் இல்லாமல் வியூகம் வகுக்கப்போவதில்லை.

தனது கையில் இருப்பது என்ன? தம்மால் கொடுக்கக்கூடிய இறுதியான தீர்வின் கனம் என்ன என்றெல்லாம் அரசுக்கு தெரியும்.

கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் அரசின் தீர்வு யோசனையை பாராட்டவே தயங்குகின்றன. அவற்றைக்கூட திருப்திபடுத்த முடியாத யோசனைகளை புலிகள் முன்பாக வைத்தால் என்னாகும் என்பது அரசுக்கு தெரியாததல்ல.

புலிகள்தான் பேச்சை முறித்தார்கள் இல்லாவிட்டால் பேச்சு மூலம் பிரச்சனை தீர்ந்திருக்கும் என்கிறது அரச தரப்பு. கடந்த இரண்டரை வருடங்களாக ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்கக்கூடிய தீர்வைக்கூட முன்வைக்க முடியாத அரசால், அடித்துப் பேசக்கூடிய பலத்தோடு உள்ள புலிகள் ஏற்கக் கூடிய தீர்வை எப்படி முன்வைத்திருக்க முடியும்?

இனவாதிகளையும் திருப்திப்படுத்த வேண்டும். தமிழர்களுக்கு நாட்டின் ஒரு பகுதியை தாரைவார்த்துவிட்டார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகி, அடுத்த தேர்தலில் வாக்கு வங்கிகளையும் இழந்துவிடாதிருக்க வேண்டும். அதே சமயம் வெளியுலகின் முன்பாக தனது சமாதான இமேஜையும் காப்பாற்ற வேண்டும். இவைதான் இன்று அரசின் நோக்கங்களாக உள்ளன.

இந்த நோக்கத்தை நிறைவு செய்ய புலிகளுடன் பேசுவது உதவப்போவதில்லை. ஒன்றில் புலிகளை பலவீனப்படுத்த வேண்டும். அது முடியாவிட்டால்கூட புலிகளுடனான போரை தொடர்ந்து ஏதோ ஒரு வகையில் நடத்தியாக வேண்டும். இதுதான் அரசுக்குள்ள கட்டாயம்.

வன்னிப் படை நடவடிக்கை ஆரம்பித்த போது, யாழ் குடாநாடு போல அங்கும் புலிகளை சுலபமாக ஓரம் கட்டிவிடலாம். அதன் பின்னர் தற்போதைய தீர்வு யோசனையை சூழ்நிலைக்கு ஏற்ப திருத்தங்களுடன் சட்டவரைபாக முன்வைக்கலாம் என்று அரசு நினைத்தது.

அதனால் ஜூலை மாதத்தில் தீர்வு வரும் என்று நீதியமைச்சரும் கூறியிருந்தார். ஆனால் கள நிலவரம் அரசின் கணிப்பை பொய்யாக்கியுள்ளது.

இந்நிலையில் போரில் வெற்றிபெறுவதற்கான படைக்கல சக்தியையும், படைபலத்தையும் பெருக்கிக் கொள்ளும் முயற்சிகளில் அரசு இறங்கியிருக்கிறது.

வன்னியில் ஏற்பட்ட பின்னடைவுகள், இதுவரைகால யுத்த அனுபவம் போன்றவற்றின் பின்பும் போரை தொடர்வதிலேயே அரசு கரிசனம் காட்டுகிறது. இதற்கு முக்கிய காரணம், போரின் வெற்றியும், ஆளும் தரப்பின் அரசியல் அபிலாசைகளும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதுதான்.

இந்நிலையில் புலிகளுடன் பேசுவது பற்றி நினைக்வே அரசு தயாராக இல்லை. எனவே இரகசியப் பேச்சுக்களோ, பகிரங்கப் பேச்சுக்களோ சமீப காலத்தில் நடக்கப்போவதில்லை.

அரசு புலிகளுடன் பேசத் தயாராக இருக்கிறது என்றால், அதனால் இன்றைய தீர்வு யோசனைக்கு மேலான உயர்ந்த பட்ச தீர்வொன்றை வழங்க முடியும் என்ற முடிவுக்கு நாம் வந்தாகவேண்டும். ஆனால் அது சாத்தியமேயில்லை என்பது இன்றைய தீர்வு யோசனை படும் பாட்டைப் பார்த்தாலே தெரிந்துவிடும். வேறு ஆராய்ச்சிகள் தேவையில்லை.

19.07.97 அன்று அரசு விடுத்துள்ள அறிக்கை அதனை தெளிவுபடுத்துகிறது. "புலிகளுடன் பேசுவதை பற்றி இப்போதைக்கு யோசிக்கவே இடமில்லை" என்று கூறியுள்ளது அரசு.

நீதியமைச்சர் பீரிஸ் பந்தை ஏனைய தென்னிலங்கைக் கட்சிகளின் கோட்டுக்குள் அடித்துவிட நினைத்தார். புலிகளுடன் பேச அரசு தயார். தென்னிலங்கை கட்சிகள் இணங்க வேண்டும் என்றார்.

உடனே தென்னிலங்கை பத்திரிகைகள் சில பேச்சுப் புரளியைக் கிளப்பின. வெளியுலகில் இமேஜை பாதுகாக்க பீரிஸ் கூறிய கூற்றை வைத்து, உள்ளூரில் தனது இமேஜை உடைக்கப் பார்க்கிறார்கள் என்று அரசு ஆடிப்போய்விட்டது.

அதனால் மிகக் கறாராக தனது நிலைப்பாட்டை சொல்லிவிட்டது அரசு.

நீதியமைச்சர் கூறிய கருத்துக்கு முற்றிலும் மாறாக அரசின் அறிக்கை அமைந்துள்ளது. புலிகளுடன் பேச அரசே தயாரில்லை என்கிறபோது ஏனைய தென்னிலங்கை கட்சிகளை நோக்கி பீரிஸ் அடித்துவிட்ட பந்து அவரிடமே திரும்பி வந்துவிட்டது. வேறு வழியில்லாமல் அரசே 'சேம் சைட் கோல்' போடவேண்டியதாகிவிட்டது. ■



படிப்பகம்

www.padippakam.com

# கொள்ளை ராணி

## பாகம் 02



பூலான் தேவி 54

தருவது ரசிகன்

**கடந்த வாரம்**

**தனது கிராமத்துக்குச் சென்ற பூலான் தேவி குடும்பத்தினரைக் காண்கிறாள். திரும்பி வரும் போது மல்லாவின் உதவியுடன் கிராம அதிகாரியை சுட்டுக் கொன்று பழிதீர்க்கிறாள்.**

**இனி....**

கிராம அதிகாரியைச் சுட்டுக் கொன்ற பின்னர் மீண்டும் எட்டாவா கிராமத்திற்கே திரும்பிச் சென்றனர் மல்லாவும், பூலானும் வேராவும்.

எட்டாவா கிராமத்தை ஒட்டியதாக காட்டுப்பகுதிகள் இருந்தமையால். அங்கு பதுங்கியிருப்பது பாதுகாப்பாக இருந்தது.

கிராமத்துக்குள் இரவோடு இரவாகச் சென்று உணவு பெற்றுவருவான் வேரா. கிராமத்தில் உள்ள மிக நம்பிக்கையான சிலருக்கு மட்டுமே அவர்கள் காட்டில் இருக்கும் தகவல் தெரிந்திருந்தது. அவர்கள்தான் மூன்று பேருக்கும் தேவையான உதவிகளை இரகசியமாகச் செய்து கொண்டிருந்தனர்.

கிராமத்தில் இருந்து ஒரு நம்பிக்கையான ஆளை தங்களுக்கும் கிராமத்தில் உள்ள தங்கள் ஆதரவாளர்களுக்கும் இடையேயான தொடர்பாளராக நியமித்தான் மல்லா.

வேராவை அனுப்பி மாதுசிங்கின் காதலி குசுமா எங்கிருக்கிறாள், என்ன செய்கிறாள் என்ற விபரங்களை அறிய விரும்பினான் மல்லா.

இருவரையும் தனியேவிட்டுச் செல்ல தயங்கினான் வேரா. மல்லாதான் பிடிவாதமாக அனுப்பிவைத்தான்.

ஒரு கோஷ்டியோடு இருந்துவிட்டு இப்போது தாம் இருவர் மட்டுமே தனியாக, அதுவும் மனித நடமாட்டமே இல்லாத காட்டுக்குள் இருப்பதை நினைக்க பூலானுக்கு ஒரு மாதிரியாக இருந்தது.

"என்ன பலமான யோசனை? ஒரு பாராட்டு. ஒரு நன்றிகூட சொல்லக் கூடாதா?" என்று கேட்ட மல்லா, பூலானின் அருகில் அமர்ந்துகொண்டான்.

"எதற்கு?"

"எதற்கா? கிராம அதிகாரியைக் கொல்ல திட்டம் போட்டுத் தந்ததுக்கு!"

"நீங்கள் வேறு நான் வேறு என்று நினைத்தால்தானே நன்றி சொல்லவேண்டும். அதனால் மனசுக்குள்ளேயே சொல்லிவிட்டேன்."

"மனசுக்குள்ளேயா? எனக்கு எப்படிக் கேட்கும்?"

"கேட்கும். மனசுக்குள்ளேதான் நீங்கள் இருக்கிறீர்களே!" என்றாள். தன்னால் இப்படியெல்லாம் எப்படிப் பேசமுடிகிறது? என்று நினைக்க பூலானுக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

"அப்படியா சங்கதி?" என்றவன் பூலானின் நெஞ்சில் தன் காதை வைத்தபடி, "கேட்கிறது... கேட்கிறது...." என்றான்.

"என்ன?"

"நன்றி சொல்லி உன் மனது துடிப்பது கேட்கிறது." சொன்னவன் தன் முகம் திருப்பி அவள் நெஞ்சில் முகம் புதைத்தான். பூலான் சிலிர்த்து மூச்சை இழுத்துப் பிடித்துக் கொண்டாள்.

மல்லா, மெல்ல மெல்ல அவளை ஆராய ஆரம்பித்தான்.

சட்டைப் பொத்தான்களை மல்லா பிரிக்க பூலான் தடுக்கவில்லை. தன் கைகளை நீட்டி அவன் கழுத்தை வளைத்து அவன் முகத்தை தன் நெஞ்சில் அழுத்திப் புதைத்தபடி, "எனக்குப் பயமாக இருக்கிறது," என்றாள்.

"என்ன பயம்?" என்றான் முகத்தை இருபுறமும் அசைத்தபடி. "நாங்கள் எங்கள் ஆட்களுடன் சேரவேண்டும். இப்படியே இருந்தால் ஆபத்து."

மல்லா நிமிர்ந்து பூலானின் முகத்தை உற்று நோக்கினான். அவள் உதடுகள் லேசாகத் துடித்துக் கொண்டிருந்தன. ஈரலிப்பாய் இருந்தன. புல்லின் நுனியில் உள்ள பனித்துளி மாதிரி அவள் இதழின் மீது ஈரம் இருப்பதாய்ப்பட்டது மல்லாவுக்கு. தன் விரலால் அவள் கீழ் உதட்டை வருடினான் மல்லா. பூலான் மரத்தில் சாய்ந்து அமர்ந்திருந்தாள். மல்லா தன் இதழை வருட வருட, பூலான் நன்றாகச் சரிந்து கொண்டாள். அவள் மார்புகள் விம்மித் தணிந்தன. அவள் உணர்ச்சிகள் கட்டுமீறிக்கொண்டிருந்தன. மல்லா அவள் மேலுதட்டை வருடினான். கிண்ணத்தின் விளிம்பில்போல விரல்கள் வழுக்கிச் சென்றன. மேலும் கீழுமாய் விரல்களால் வருடிக்கொண்டே இருந்தான்.

பூலானுக்கு உடம்பு தகித்தது. அவன் விரலைத் தன் உதடுகளால் கவ்விக்கொண்டாள். பற்களின் இடையில் சிக்கிக்கொண்ட விரலை கடித்தாள். "விரல் துண்டாகப் போகிறது!" என்றான் மல்லா. மல்லாவின் கரமொன்று பூலானின் கழுத்து நரம்பை வருடியது. அப்படியே கோடு கிழித்து கீழே இறங்கியது. எல்லைகள் இல்லாமல் சுதந்திரமாக இறங்கத் தொடங்கியது.

"மல்லா... ராட்சதா..." என்று முனுமுணுத்தபடி மல்லாவின் தலைமுடியை கொத்தாகப் பிடித்து இழுத்தாள் பூலான்.

அன்றிரவு இருவருமே சாப்பிடவில்லை. சாப்பாடு தேவையாக இருக்கவில்லை. காலையில் பூலான் விழித்துப் பார்த்தபோது மல்லா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான்.

வேரா திரும்பிவர ஒரு மாதகாலமானது. அதுவரை பூலானும் மல்லாவும் தனியாகச் சென்று நாலைந்து கொள்ளைகளை நடத்தியிருந்தனர்.

அதனால் பணத்திற்கு குறையிருக்கவில்லை. போதுமான பணம் இருந்ததால் தங்களுக்கு உணவு கொடுத்து உதவிய ஆட்களுக்கு தாராளமாக பணம் கொடுக்க முடிந்தது.

கிராம ஆட்கள் மூலம் ஒரு சிறிய ரேடியோவும் வாங்கிக்கொண்டான் மல்லா. ரேடியோ இருந்ததால் தினமும் செய்தி கேட்க முடிந்தது. வெளியுலகில் நடக்கும் சம்பவங்களை அறிய முடிந்ததால் தனிமையாக இருப்பதில் உள்ள சலிப்பு இருவருக்குமே சற்றுக் குறைந்திருந்தது.

அப்போது அமிதாப் பச்சன் நடித்த 'ஷோலே' படத்தின் பாடல்கள் நன்கு பிரபலமாகி இருந்தன. ஷோலே படமும் கொள்ளைக் கோஷ்டி பற்றிய கதைதான்.

'ஷோலே' பாடல்கள் பூலானுக்கும் பிடித்திருந்தன. முன்பெல்லாம் பூலான் ரேடியோவில் பாடலே கேட்டதில்லை. அவள் கிராமத்தில் சில வீடுகளில் மட்டுமே ரேடியோ இருந்தது. பாட்டுப் பெட்டி என்று தம்பி சிவ நாராயணன் சொல்லுவான்.

இப்போதுதான் ரேடியோவை கையால் தொட்டுப் பார்க்கிறாள். காதருகே வைத்து பாட்டுக் கேட்கிறாள். இப்படி ஒரு ரேடியோ வாங்கி வீட்டுக்கு அனுப்பினால் நன்றாக இருக்கும் என்று நினைத்தாள். மல்லாவிடம் சொல்ல வெட்கமாக இருந்தது.

'ஷோலே' படப்பாடல்கள் பூலானுக்கு மனப்பாடம் ஆகிவிட்டன. முதலில் வாய்க்குள் மட்டுமே முணுமுணுத்தவள் பின்னர் மல்லாவுக்கு கேட்கக்கூடியதாகவே பாட ஆரம்பித்தாள். மல்லா அவள் மடியில் படுத்துக் கொண்டு அவள் பாடுவதை கண்மூடிக் கேட்டுக்கொண்டிருப்பான்.

இருவரும் ஒன்றாகவே காட்டுக்குள் இருந்த சுனையொன்றில் நீராடுவார்கள். மல்லாவுக்கு பூலான் முதுகு தேய்த்துவிடுவாள். மல்லா பூலானுக்கு முதுகு தேய்த்துவிடுவான். அத்தோடு நிறுத்தமாட்டான். கைகள் எங்கும் அலையும். தண்ணீரை வாரி வீசுவாள். அப்படியே அவளைத் தன் கைகளில் தூக்கியெடுத்து பொத்தென்று போடுவான் மல்லா.

முதலில் சலிப்பாக இருந்த தனிமை இப்போது சுகமாக இருந்தது. "இப்படியே இரண்டுபேரும் மட்டும் இந்தக் காட்டுக்குள்ளேயே இருந்துவிடலாம். யார் தொந்தரவும் கிடையாது." என்றாள் பூலான்.

"மிருகங்கள் தொல்லை தரும்" என்றான் மல்லா. "மனிதர்களைவிடவா இவை தொல்லை தரும்? இங்குள்ள மிருகங்களையெல்லாம் வெளியேவிட்டுவிட்டு மனிதர்களையெல்லாம் கொண்டுவந்து இங்கே வைத்துவிடலாம். கொடிய மிருகம் மனிதன்தான்!" என்ற பூலானை மல்லா ஆச்சரியத்துடன் அணைத்து இறுக்கிக் கொண்டான்.

"நன்றாகப் பேசுகிறாயடி."

"அனுபவமடா."

"டாவா?"

"நீ மட்டும் அடியே இடியே என்று பேசலாமா?"

"அடிக்கு அடியா?"

"வேறு வழியே இல்லை. அடிக்கு அடி கொடுத்தால்தான் எல்லோரும் வழிக்கு வருவீர்கள்!" சொல்லிவிட்டு நடந்துபோன பூலானின் பின் அழகுகள் மல்லாவை வதைத்தன. பூலானின் அழகு காட்டுப் புஷ்பம் போல மெருகேறிக்கொண்டிருப்பதாக மல்லாவுக்குத் தோன்றியது.

வேரா வந்து சேர்ந்தான். மாது சிங்கின் காதலி குசுமாவை அவன் சந்தித்திருந்தான். மாதுசிங்கின் மரணத்துக்கு காரணமானவர்களை பழிவாங்கத் துடித்துக் கொண்டிருக்கிறாள். மல்லாவின் கோஷ்டியில் தன்னையும் சேர்த்துக் கொள்ளுமாறும் விரைவில் முடிவோடு வந்து தன்னை அழைத்துச் செல்லுமாறும் வேராவிடம் சொல்லி அனுப்பியிருந்தாள் குசுமா.

வரும் வழியில் ஸ்ரீராமையும் கண்டிருந்தான் வேரா. பழையதையெல்லாம் மறந்துவிடும்படியும், மல்லா இல்லாமல் தன்னால் ஆட்களைக் கட்டுப்படுத்த முடியாது என்றும் ஸ்ரீராம் மன்றாட்டமாக சொல்லிவிட்டானாம்.

"ஸ்ரீராம் நாடகமாடியிருக்கிறான். பாம்பு விஷத்தை மறைத்துக் கொண்டு நம்மை ஏமாற்றப் பார்க்கிறது," என்றாள் பூலான்.

ஸ்ரீராமை நினைத்தாலே பூலானுக்கு பற்றிக்கொண்டு வந்தது. துஷ்ட மிருகங்களில் ஒன்று என்றே அவனையும் கருதினாள்.

மல்லா, ஸ்ரீராம் விடயத்தில் பூலானின் கருத்துக்கு மாறாகவே முடிவு செய்தான். ஒரு சந்தர்ப்பம் கொடுத்துப் பார்க்கலாம், என்று கருதினான். தன் முடிவுக்காக ஒரு நாள் வருந்தப்போவதை மல்லா அப்போது அறியவில்லை.

தன் கருத்தை மல்லா மீறிச் செயற்பட்டது பூலானுக்கு வருத்தம்தான். அதனால் காட்டில் இருந்து புறப்பட்டு ஸ்ரீராம் இருக்குமிடம் செல்லும்வரை மல்லாவுடன் சரியாகவே அவள் முகம் கொடுத்துப் பேசவில்லை.

மல்லா ஏதாவது கேட்டாலும் சிடுசிடுத்தாள். சில சமயம் மல்லாவுக்குச் சொல்ல வேண்டியதை வேராவுக்குச் சொல்வது போல முகத்தைத் திருப்பிக்கொண்டு சொல்லுவாள்.

ஸ்ரீராமும், லாலா ராமும் மூவரையும் வாயெல்லாம் பல்லாக நின்று வரவேற்றனர். மல்லாவைக் கண்டதும் அவன் ஆட்களின் முகங்களில் மலர்ச்சி தெரிந்தது. மாது சிங்கும், பாரத் சிங்கும் அவர்களிடையே இல்லையே என்பது மல்லாவுக்கும், பூலானுக்கும் கவலையாக இருந்தது.

லாலா ராமின் கண்கள் பூலானையே மொய்த்துக் கொண்டிருந்தன. பூலான் அவன் கண்களை நேராகச் சந்தித்தாள். உடனே அசட்டுத்தனமாய் இளித்த லாலா ராம், "பூலான், என் சகோதரி! மல்லாவை பத்திரமாய் எங்களிடம் ஒப்படைத்துவிட்டாய். நன்றி சகோதரி!" என்றான்.

பூலான் அவனை தன் மனதுக்குள் கெட்டவார்த்தைகளால் சபித்துக்கொண்டிருந்தாள். ஸ்ரீ ராம் பூலானைப் பார்த்து பல்லைக்காட்டினானே தவிர ஒன்றும் பேசவில்லை.

ஸ்ரீராமுடன் போய்ச் சேர்ந்துகொண்ட மறுநாளே மல்லா வேராவை அழைத்தான். மாது சிங்கின் காதலியான குசுமாவை அழைத்துவரும்படி அவனை அனுப்பிவைத்தான். அப்படியே குசுமாவுக்கும், பூலானுக்கும் புது உடைகள் வாங்கிவருமாறும் பணம் கொடுத்துவிட்டான்.

குசுமாவை அழைத்துவர வேராவை அனுப்ப முன்பாக பூலானிடம் ஒரு வார்த்தை கேட்டான்: "மாதுசிங்கின் காதலி பாவம் தானே! எங்களுடன் அழைத்து வைத்துக் கொள்ளுவோமா சொல்லு?"

"என்னிடம் எதற்குக் கேட்கிறீர்கள்? நான் சொல்வதை கேட்க யார் இருக்கிறார்கள்?" என்று சீறினாள் பூலான்.

"அப்படியானால் சரி, குசுமாவைக் கூட்டிவரச் சொல்லப்போவதில்லை!" என்றுவிட்டு செல்ல முயன்றவனை, "குசுமாவை அழைக்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை!" என்றாள் பூலான்.

குசுமாவின் வரவு தன் வாழ்க்கையிலும் புயலாக வீசும் என்று தெரிந்திருந்தால் பூலான் அவளை அழைத்துவர தன் சம்மதத்தை தெரிவித்திருக்க மாட்டாள்.

வேரா நாலு நாட்களில் குசுமாவுடன் திரும்பிவந்தான். குசுமாவின் உறவினனான உஜாகா என்பவனும் அவர்களுடன் வந்திருந்தான்.

குசுமாவைக் கண்டதும் பூலான் கூட தடுமாறித்தான் போனாள். குசுமா அத்தனை அழகாக இருந்தாள். இளமையாக இருந்தாள். அவள் இளமைக்கு திரைபோட முயன்று மார்புச் சேலை பரிதாபமாக தோற்றுப்போயிருந்தது. இவளுக்காக மாது சிங் மரணத்தை சந்திக்கத் துணிந்ததும் தகும்தான் என்று பூலான் நினைத்துக் கொண்டாள்.

மாது சிங்கை பறிகொடுத்த சோகத்துடன் ஒடிந்துபோன ஒரு பெண்ணாகவே குசுமாவை பூலான் கற்பனை செய்து வைத்திருந்தாள். குசுமாவின் கண்களில் சோகம் இல்லை. அவள் கண்கள் அங்குமிங்குமாய் அலைந்தன. அந்தக் கண்களில் ஒரு அழைப்பு இருந்தது. தாகம் இருந்தது. தாபம் இருந்தது. பளிசென்று கழுவி வைத்த பாத்திரம்போல அவள் உடம்பு செக்கச் செவேலென்று மின்னியது. ஒரு புஷ்பக் கூடைபோல இருந்தாள் அவள்.

குசுமா மல்லாவை விழுங்கிவிடுவது போல பார்த்துக் கொண்டு பேசிய பேச்சுத்தான் பூலானைக் கலவரப்படுத்தியது.

'இவளிடம் ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும்' என்று மனதில் ஆழமாய் குறித்துக் கொண்டாள் பூலான்.

அன்றிரவு குசுமா மல்லாவை தனிமையான ஒரு தருணத்தில் சந்திக்கச் செல்ல, பூலான் அவளை நிழல்போலத் தொடர்ந்தாள்.

**(தொடர்ந்து வரும்)**

# தொடர்கிறது 'நறுக்'

தாய்லாந்தில் உள்ள ஆண்கள் படு திண்டாட்டத்தில் இருக்கின்றனர். எல்லோரும் அல்ல; தப்புச் செய்யும் ஆண்கள் மட்டும்தான்.



அப்படி என்ன சமாச்சாரம்?

பெரிதாக ஒன்றுமில்லை, தங்களுக்கு துரோகம் செய்யும் கணவன்மார்மீது தாய்லாந்து நாட்டுப் பெண்கள் கடும் கோபத்தில் இருக்கிறார்கள். அதனால் 'நறுக் நறுக்' சமாச்சாரங்கள் பல நடந்துள்ளன.

முதன் முதலில் அமெரிக்காவில்தான் பாலிட் என்னும் பெண், நறுக் செய்து ஆள் ஒருவரை அவுட் பண்ணினாள். அது திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. அதன்பின்னர் நறுக் சமாச்சாரம் சர்வசாதாரணமான செய்தியாக பல நாடுகளில் நடந்து வருகிறது.

ஆனாலும் தாய்லாந்தில்தான் நறுக் சம்பவங்கள் அதிகம் நடப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இதனால் நறுக்கப் பட்டதை இணைத்து ஒப்பரேஷன் செய்யும் டாக்டர்களுக்கு தாய்லாந்தில் நல்ல சம்பாத்தியம்! ஆனால் ஒரு நிபந்தனை! நறுக்கப்பட்டு ஆறு மணிநேரத்துக்குள் நறுக்கப்பட்ட பகுதியையும் கையோடு சேகரித்துக்கொண்டு போனால்தான் சிகிச்சை வெற்றியளிக்குமாம்.

சமீபத்தில் ஒரு லொறிச் சாரதிக்கு ஏற்படவிருந்த பேரிழப்பை தாய்லாந்து டாக்டர்கள் தடுத்துவிட்டனர்.

அந்த லொறிச்சாரதி சபலமன்னன். லொறியில் 'லிஃப்ட்' கொடுப்பதாகக் கூறிக் கொண்டு பல பெண்களுடன் சகவாசம் வைத்துக் கொண்டாராம் ஆசாமி. இது மனைவிக்கு தெரியவந்தது. ஒருநாள் படுக்கையறையில் நைசாகப் பேச்சுக்கொடுத்தபடியே ஓங்கி ஒரு 'நறுக்!' சாரதி குனிந்து பார்த்தார். பயங்கரம். டாக்டரிடம் ஓடினார். எப்படியோ ஒட்ட வைத்துவிட்டனர்.

தாய்லாந்தில் நடந்த மற்றொரு நறுக் விவகாரத்தில், நறுக்கப்பட்ட பகுதியை டாய்லெட்டில் போட்டு தண்ணீர் ஊத்திவிட்டார் 'நறுக்' பண்ணிய மனைவி. பின்னர் 'ட்ரைனேஜ்' பைப்பை கிளின் பண்ணும் ஆட்களை அழைத்து, தேடி எடுத்ததாம் பொலிஸ். அதனை டாக்டரிடம் சேர்ப்பித்து சிகிச்சை செய்தனர்.

வேடிக்கச் சிரிப்பாக இருந்தாலும் உண்மையாகவே நடந்த சம்பவங்கள்தான் இவை. தப்புச் செய்தால் 'நறுக்.' சபலமன்னர்கள் தாய்லாந்தில் நடுநடுங்கிக் கொண்டிருக்கும் காரணம் இப்போது புரிகிறதா?

# தண்ணீராய் பாய்ந்த பணம்

ஜெயலலிதா-சசிகலா ஊழல் புராணம் தெரிந்ததுதான். இப்போது அதற்கு போட்டியாக மற்றொரு பெண்மணியின் பெயர் அடிபடுகிறது.

அவர் பெனாசிர் பூட்டோ. முன்னாள் பாகிஸ்தான் பிரதமர்.

பெனாசிர் தங்கியிருந்த பிரமாண்டமான பங்களாவில் நாய்களுக்கும், குதிரைகளுக்கும் கூட குளிரூட்டப்பட்ட அறைதான் வழங்கப் பட்டதாம். இவைகளுக்கு கொட்டப்பட்ட உணவுக்கே பெனாசிர் பதவிக் காலத்தில் கோடி ரூபாய்கள் செலவானதாம்.

பெனாசிரின் பங்களாவில் குடிப்பதற்கு பாவிக்கப்பட்ட மினரல் வோட்டருக்கு மட்டும் ஆனசெலவு எவ்வளவு தெரியுமா? நம்நாட்டு மதிப்பில் கிட்டத்தட்ட பத்துக்கோடி ரூபாய்கள். மயக்கம் போட்டு விழுந்து விடாதீர்கள்.

பெனாசிரின் கணவர் சர்த்தாரிதான் பெனாசிரை விட அதிகார முள்ளவராகத் திகழ்ந்தாராம். வெளிநாட்டில் இருந்து கோதுமை இறக்கியதில் பல நூறு கோடி ரூபாய்கள் சுருட்டப்பட்டது. கணவரால்தான் கெட்டார் பெனாசிர் என்கிறார்கள். இப்போது இருவர்மீதும் 35க்கு மேற்பட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.



எல்லாமே அபாண்டம் என்று பெனாசிர் சொல்வதை பாகிஸ்தானில் உள்ள பெரும்பாலான மக்கள் நம்பத் தயாராக இல்லை.

# "விழிப்புணர்ச்சி உள்ளவர்கள் தமிழர்கள்"

தமிழ்நாட்டுக்கு திக் விஜயம் செய்திருக்கிறார் பூலான் தேவி எம்.பி. தமிழகத்தில் நடைபெற்ற மீனவர் மாநாட்டில் பிரதான விருந்தாளி பூலான்தான். தமிழகப் பத்திரிகைகள் பூலானை பேட்டி கண்டு வெளியிட்டுள்ளன. பேட்டிகளில் அனுபவ முதிர்ச்சி பளிச் பளிச்.



**கே: முழுநேர அரசியல்வாதியாகிவிட்ட உங்களுடைய இலட்சியம் என்ன?**

பூ: சமுதாயப் பிரச்சனைகளுக்காகப் போராடுவது. அநீதி எங்கெங்கு நடைபெறுகிறதோ அங்கெல்லாம் சென்று நீதிக்காக குரல் கொடுப்பேன்.

**கே: மீனவ மாநாட்டுக்கு நீங்கள் வந்ததன் நோக்கம் என்ன?**

பூ: நானும் மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவள். மீனவ சமுதாயத்தினர் சுமார் ஆறு கோடிப்பேர் இருக்கின்றனர். பலநூறு ஆண்டுகாலமாக எங்களது சமுதாயம் பல்வேறு நிலைகளிலும் புறக்கணிக்கப் பட்டு வருகிறது. காட்டிலே வேட்டையாடுபவரையும், மலையிலே குடியிருக்கிறவரையும் இந்திய அரசு கவனித்து, தாராளமாக சலுகை கொடுக்கிறது. கடலிலே தினமும் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் எங்களுக்கும் முன்னுரிமையளித்து அதே சலுகைகள் வழங்க வேண்டும். தமிழகத்தில் இருந்து கிளம்பும் இக்குரலை டெல்லிக்கு எடுத்துச் செல்லவே நான் வந்திருக்கிறேன்.

**கே: பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா நாடாளுமன்றத்தில் இன்னும் ஏன் நிறைவேற்றப்படவில்லை?**

பூ: எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த பெண் எம்.பிகள் இதில் அக்கறை காட்டுகின்றனர். ஆனால் ஆதிக்க மனப்பான்மை உள்ள ஆண் எம்.பிக்கள் தான் இந்த மசோதாவை வேண்டுமென்றே கிடப்பில் போட்டு வைத்திருக்கிறார்கள்.

**கே: உங்கள் அரசியல் எதிரியான மாயாவதியின் ஆட்சியைப் பற்றி?**

பூ: அவரது ஆட்சியிலே பட்டப்பகலிலே படுகொலைகள் பொலிசாரின் ஒத்துழைப்புடன் நடந்துவருகின்றன. எங்களது கட்சிக்காரர்கள் கொலை செய்யப்படுகின்றனர். சட்டம் ஒழுங்கு செத்துவிட்டது. மாயாவதி அரசை டிஸ்மிஸ் செய்யக்கோரி எனது தலைவர் முலயாம் சிங் யாதவும் எங்கள் கட்சி எம்.பிகளும் நாடாளுமன்றம் முன்பாக மறியல் செய்யப்போகிறோம்.

**கே: தமிழ் நாட்டைப் பற்றி உங்கள் கருத்து?**

பூ: மற்ற மாநிலங்களைவிட அரசியல் விழிப்புணர்ச்சி அதிகம் உள்ளவர்கள் தமிழர்கள். ஆனால் பெரியார் பிறந்த இந்த மண்ணில் ஜாதிச் சண்டைகள் பெருகிவருவதுதான் எனக்குப் புரியவில்லை.

# அஃப்ரிடிக்கு எத்தனை வயது?

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி வீரர் அஃப்ரிடிக்கு இப்போது பதினெட்டு வயது என்று சொல்கிறார்கள். வயது அதிகமாக இருக்கலாம், குறைத்துச் சொல்கிறார்கள் என்ற சந்தேகம் கிளம்பியிருக்கிறது. இந்த சர்ச்சை தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினரும், சர்வதேச நடுவருமான ஜாவித் யூசுப் பேட்டியளித்துள்ளார். அவரது பேட்டியிலிருந்து:

"இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பாகிஸ்தான் 'ஏ' அணி இங்கிலாந்துக்கு எதிராக கராச்சியில் ஒரு போட்டியில் கலந்து கொண்டது. அதற்கு நான்தான் நடுவர். அந்தப் போட்டியில் அஃப்ரிடி ஆடினார். இதற்கு பின்புதான் தெரிந்து கொண்டேன் அஃப்ரிடியின் வயது பதினாறு என்பதை. (சிரிக்கிறார்)

சமீபத்தில் அஃப்ரிடி தனது வயதைக் குறிக்கும் சான்றிதழ்களைக் காட்டினார். அது உண்மையா பொய்யா என்பது தெரியாது. நான் உங்கள் கேள்வியை ஏற்றுக் கொள்கிறேன். கடந்த பத்து வருடமாக அஃப்ரிடி கிரிக்கெட் ஆடி வருகிறார். நான் நிச்சயம் நம்புகிறேன். ஒன்பது வயதில் அவர் தனது கிரிக்கெட் வாழ்க்கையை துவக்கி இருக்க முடியாது. அப்படியே துவங்கி இருந்தால்கூட இப்போது பத்தொன்பது வயதுக்கு மேல் இருக்கவேண்டும்." என்று கூறியிருக்கிறார் ஜாவித் யூசுப். கடந்த பதினாறு வருடங்களாக பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினராக இருக்கிறார் ஜாவித் யூசுப்.

பாகிஸ்தான் அணி 25 இலட்சம் கொடுத்து போட்டியில் ஜெயிக்க முயன்றது என்று மனோஜ் பிரபாகர் குற்றம் சாட்டியுள்ளார். இக் குற்றச்சாட்டு ஆதாரபூர்வமற்றது என்று நிராகரித்துள்ளார் ஜாவித் யூசுப்.



படிப்பகம்

www.padippakam.com

## கெட்டியாக ஒட்டிக்கோ




இது ஒரு புதுமையான சாதனை முயற்சி. காலியான பாத்திரத்தில் தண்ணீர் பிடிக்கலாம். இவர்களோ தங்களையே காலிப் பாத்திரத்தில் போட்டுவிட்டனர். குறுகிய பாத்திரத்துக்குள் ஆகக் கூடியது எத்தனைபேர் நிற்க முடியும்? இரண்டு, மூன்று.. இல்லையில்லை எட்டுப் பேர் ஒட்டி நிற்கிறார்கள் பாருங்கள். இதில் நான்கு பேர் பெண்கள். ஜெர்மனியில் இந்த சாதனை செய்யப்பட்டது. ஆனாலும் கின்னஸில் இதனை பதிவு செய்ய மறுத்துவிட்டார்கள் சாதனை படைக்க நினைப்பதுபாராட்ட வேண்டியதுதான். அதற்காக என்ன வேண்டுமானலும் செய்யலாமா என்ன. ■

## வலிக்காத உடல்

↓ புல்லரிக்கவைக்கும் காட்சி இது. கூரான ஸ்குரு டிரைவரை தன் உடலில் குத்திக் கொள்கிறார் பாருங்கள். துளைபோட்டுக் கொண்டு மறுபகுதியால் வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்க மெய்சிலிக்கிறதல்லவா.

லெபனான் நாட்டில் உள்ள சிடோன் நகரில் நடைபெற்ற மீலாதுநபி விழா ஊர்வலத்தில் கலந்துகொண்ட ஒரு முஸ்லிம் இளைஞர்தான் இப்படி தன் உடலை குத்திக்காட்டினார். ■



## அந்த நாள் தழும்புகள்





→ வியட்நாம் மக்களை பணிய வைக்கவும், வியட்நாம் போராளி களை மிரட்டவும் அமெரிக்கா குண்டுமழை பொழிந்தது.

1972 ஜூன் 8ம் திகதி வியட் நாம்மீது இரசாயனக் குண்டு வீசியது அமெரிக்கா. அப்போது உயிர்தப்பி ஓடியவர்களை படம் பிடித்தார் ஒரு நிருபர். அமெரிக்காவின் கொடும் போக்கை உலகறியச் செய்த படமாகவும் அது அமைந்தது. நிர்வாணமாக உயிரைக் காக்க ஓடிய சிறுமியின் கோலம் உலகின் முன்பாக அமெரிக்காவை தலைகுனியச் செய்தது.

அந்தப் புகைப்படத்தில் சிறுமியாக இருந்த பெண் இப்போது ஒரு குழந்தைக்குத் தாயாகி விட்டார். 25 ஆண்டுகள், உருண்டோடிய பின்பும் அவரது தோளிலும், முதுகிலும் இரசாயனக் குண்டின் தாக்கத்தால் ஏற்பட்ட தழும்புகள் மறையவில்லை. அதனை காண்பிக்கிறார் நேற்றைய சிறுமியான இன்றைய தாய்.

போர் ஓய்ந்தாலும் அது தந்த காயங்கள் உடலில் மட்டுமல்ல உள்ளத்திலும் மறையாது. அதிலும் கொடும் குண்டுவீச்சுக்களை வியட்நாமியர்கள் மறக்கவும் மாட்டார்கள். மன்னிக்கவும் மாட்டார்கள். ■

## சாப்பாட்டு மன்னன்

↓ குண்டாக இருப்பவர்கள் மளமளவென்று உண்டு தள்ளுவார்கள் என்று நினைப்பது தப்பு. மகா தப்பு. அமெரிக்காவில் உள்ள நியூயோர்க்கில் நடந்த உண்ணும் போட்டியில் 'கிளிக்' செய்யப்பட்ட படம் இது.

'ஹொட்டோக்' எனப்படும் உணவு வகையை அதிகமாகவும், வேகமாகவும் உண்டு முடிப்பவருக்கு சாப்பாட்டு மன்னர் விருது காத்திருந்தது. குண்டர்களும், மெல்லியருமாக பலர் களத்தில் குதித்தனர். இறுதிச்சுற்றில் தாக்குப் பிடித்த இரண்டு பேரில் அந்த பெரிய உருவ மனிதரை வென்றுவிட்டார் மெல்லிய பையன். பன்னிரண்டு நிமிடத்தில் இருபத்து நாலரை ஹொட்டோக்குகளை மளமளவென்று தின்றுதீர்த்தார். இறைச்சி, உருளைக்கிழங்கு, பொரித்த ஹொட்டோக்குகளையே உள்ளே தள்ளினாராம். சாப்பாட்டு மன்னர் பட்டம் வென்ற இந்த பையனின் பெயர்: ஹிரோஃபுமி நாக்காஜிமா. ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர். குண்டானவரால் 20 ஹாட்டாக்குகளுக்கு மேல் விழுங்க முடியவில்லையாம். இப்போது சொல்லுங்கள். உண்பதற்கும் உருவத்திற்கும் சம்பந்தம் உண்டாங்க?! ■



## தகவல் பெட்டி

## தப்பியது தம்பிரான் புண்ணியம்

↓ தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு என்பார்கள் அல்லவா. இந்த இளைஞருக்கு அந்தப் பழமொழி கச்சிதமாகப் பொருந்தும்.

ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர் இந்த இளைஞர். பெயர் நில் சீயர்சன். வயது 25.

தோட்டவேலை செய்து கொண்டிருந்தபோது சறுக்கி விழுந்துவிட்டார். பூஞ்சட்டி அருகே கிடந்த ஒரு மீட்டர் நீளமான கம்பிமீது விழுந்துவிட்டார்.

உடலில் குத்திய கம்பி கழுத்து வழியாக வெளியேவந்தது. கதை முடிந்தது என்றுதான் நினைத்தனர். ஆனால் இவருக்கு ஆயுள் கெட்டி. முக்கிய உறுப்புக்களை கம்பி பதம் பார்க்கவில்லை என்பதால் தீவிர சிகிச்சை மூலம் பிழைக்க வைத்தனர் டாக்டர்கள். தம்பிரான் புண்ணிம் என்பது இதுதானோ. ■



## 50–நோட் அவுட்

→ மனிதர்களுக்கு போட்டியாக குரங்குகள் எடுத்துக்கொண்ட குறூப் போட்டோ மாதிரித் தெரிகிறதா? அப்படியெல்லாம் மனிதர்களுடன் போட்டிக்கு நிற்குமளவுக்கு குரங்குகள் ஒன்றும் தாழ்ந்து போய் விடவில்லை. அவுஸ்திரேலியாவில் சிட்னி நகர உயிரியல் பூங்காவில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

என்ன விசேஷம் ஃபைஃபிக் என்னும் மூத்த சிம்பன்சிக்கு பிறந்த நாள். அதுவும் 50வது பிறந்தநாள். சூழ இருப்பது அதன் வாரிசுகள். 10 குழந்தைகளும், இரண்டு பேரப் பிள்ளைகளும் இருக்கின்றனவாம். சிட்னி பூங்காக்காரர்கள் ஃபைஃபிக்கின் பிறந்தநாளை அமர்க்களமாக கொண்டாடிவிட்டனர். ■



திரையுலக மறுபக்கம் 13
மித்ரவாசு

# ரயில் நடிகையை நாடிய இயக்குநர் நடிகைக்கு தேதி சொன்ன நடிகர்

கிராமவாசனை 'பா' இயக்குநர் அறிமுகப்படுத்திய நடிகையிடம் மீண்டும் வருவோம். ஆண்களே கூச்சப்பட்டு போகுமளவுக்கு இருந்தது அந்த 'ரயில்' 'ரா' நடிகையின் புறநடவடிக்கைகள்.

நடிகைக்கு மலையாளத்திலிருந்து தமிழுக்கு வந்த முட்டைக் கண் நடிகரோடு அன்பு, பாசம், காதல் எல்லாம் உண்டானது. இத்தனைக்கும் இருவரும் ஓரிரு படங்களுக்குமேல் சேர்ந்து நடித்ததில்லை.

இருவரையும் பற்றி பத்திரிகைகளில் கிசு கிசு வெளியானபோது இருவருமே தங்கள் உறவுகளை மறுத்தனர். 'நாங்கள் நல்ல நண்பர்கள் மட்டுமே' என்றனர். இதுபோலச் சொன்ன எத்தனையோ பேர்களை பத்திரிகை உலகம் பார்த்துவிட்டது.

நண்பர்கள் ஒருநாள் பலமான எதிர்ப்புக்கிடையே திருமணம் செய்து கொண்டனர். நடிகையின் தாயாரையும் மீறி, நடிகரின் சகோதரரையும் மீறி நடந்த கல்யாணம் அது. நடிகரின் சகோதரர் மகாகவியின் பெயரைக் கொண்ட 'ஜெய' நடிகையை மணந்து தோல்வி கண்டவர். மகளின் வருமானம் போய்விடுமே என்று தாயார் மகா கோபத்தில் இருந்தார்.

திருமணத்திற்கு பின்னரும் நடிகை புறவாழ்விலும் சரி, அக வாழ்விலும் சரி நாகரிகமாக நடந்துகொள்ளவில்லை.

நடிகையை ஒப்பந்தம் செய்த தயாரிப்பாளரோ இயக்குநரோ யார் நடிகையின் வீட்டுக்குச் சென்றாலும் முகம் சுளித்தபடி திரும்புவர். படுக்கையறைக் காட்சிகளை வரவேற்புக் கூடத்திலேயே நடத்திக் காட்டுவர் கணவனும் மனைவியும். இருவருமே அரைகுறை ஆடையில்தான் இருப்பர். எதுவுமே ஓவராகப் போனால் அடுத்து விபரீதம்தான் நடக்குமென்பர்.

## விபரீதம் ஆரம்பம்

இந்த 'ரயில்' நடிகையோடு இன்னொரு நடிகர்-இயக்குநருக்கு ஏற்கனவே நெருக்கமான நட்பு இருந்தது. அந்த நடிகரும் இயக்குநருமானவரின் மனைவியும் நடிகையாக இருந்து அவரது 'பாக்யம்' பெற்றவர்தான். மனைவி நடிகை திடீரென்று ஒருநாள் விஷமருந்தி (அது மறைக்கப்பட்டது) இறந்துபோனார்.

அதற்கு காரணம் இன்னொரு பூரணமான மும்பை நடிகை. மனைவி- இறந்த பின்னர் நடிகர்- இயக்குநர் பூரணமான நடிகையை மணந்துகொண்டார்.

பூரணமான நடிகையை அவர் மணந்துகொண்ட பின்னர் இடையில் இருவருக்கும் லேசான பூசல் இருந்தது. அதனால் மனைவியுடன் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்ட நடிகர்-இயக்குநர் நேராக 'முட்டைக் கண்' நடிகரும், மனைவியும் தங்கியிருந்த வீட்டிற்குப் போனார்.

அவர் சென்ற சமயம் முட்டைக் கண் நடிகர் வீட்டில் இல்லை. இப்படி நடிகர்-இயக்குநர் அடிக்கடி வந்துபோக, அது மு.க. நடிகருக்கு தெரிய, அவர் மனைவியைக் கண்டித்தார்.

ஒருநாள் நள்ளிரவு மு.க. நடிகர் வெளியே சென்றிருந்த நேரத்தில் நடிகர்- இயக்குநர் நடிகையிடம் வந்துவிட்டார். திரும்பப் புறப்படுகையில் மு.க. நடிகர் எதிர்பாராதவிதமாக வந்துவிட்டார். அதன் பின்னர் அங்கு நடந்த சம்பவத்தால் பக்கத்து வீட்டார்கள் தூக்கம் கலைந்து முகம் சுளித்தனர். இருவரும் கைகலப்புக்குச் செல்ல நடிகை வந்து தடுத்திருக்கிறார்.

## எச்சரிக்கை

அதன்பின்னர் முட்டைக் கண் நடிகரும், அவரது சகோதரரும் நடிகரின் வீட்டிற்கு சென்று நடிகரின் மனைவியிடம் நடந்ததைக்கூறி எச்சரித்துவிட்டு திரும்பினர். அதன்பின்னரும் நடிகர்-இயக்குநரின் படமொன்றில் 'ரயில்' நடிகையும் நடித்தார். இருவரது நெருக்கமும் கண்டு படப்பிடிப்புக் குழுவினருக்கே தாளவில்லை. இதற்குப் பின் நடிகை படப்பிடிப்புக்காக கேரளா சென்றார். நடிகர்- இயக்குநர் அங்கு நடந்த 'ஸ்டார் நைட்' ஒன்றில் கலந்துகொள்ளச் சென்றார். அதன்மூலம் இருவரும் சந்தித்துக் கொண்ட 'விபரங்கள்' கேரள பத்திரிகைகளில் வெளிவந்தன.

அடுத்து நடந்தது உச்சக்கட்டம். மைசூரில் நடந்த படப்பிடிப்பொன்றில் நடிகை முதன் முதலாக ஆறெழுத்து பெயர் கொண்ட 'விஜய'மான நடிகரோடு (ஏழு நடிகர்களில் ஒருவர்) ஜோடி சேர்ந்து நடித்தார். நடிகர் அப்போது திருமணமாகாதவர். 'காந்தம்' போல் இழுக்கப்பட்டு நடிகையிடம் அவர் சிக்கிக்கொண்டார். இந்த விவகாரங்கள் மு.க. நடிகருக்கு தெரியவந்தது.


## அடிதடி

படப்பிடிப்பு முடிந்து சென்னை திரும்பிய நடிகைக்கும் மு.க. நடிகருக்கும் இடையே அடிதடி மோதலாகிவிட்டது. முடிவில் இருவரும் பிரிந்தனர். பின்னர் மு.க. நடிகர் படங்களை இயக்கத் தொடங்கினார். சினிமா சாராத ஒரு பெண்ணை மணந்துகொண்டார். பின்னர் ரயில் நடிகைக்கும் 'விஜய'மான நடிகருக்கும் இடையே நெருக்கம் முற்றியது. நடிகையின் வீடே கதியென்று கிடந்தார்.

ஒருநாள் மது மாது மயக்கத்தில் ரயில் நடிகையிடம் 'உன்னையே மணந்து கொள்கிறேன்' என்று தேதிகூட குறிப்பிட்டுச் சொன்னார் நடிகர். மயக்கம் தெளிந்த பின்னர் நடிகையிடம் சொன்னதை மறந்துபோனார்.

நடிகையோ அந்தத் தேதியில் எல்லாம் தயார் செய்துவிட்டு அழைக்க 'தனக்கு எதுவும் தெரியாது' என்றுவிட்டார் நடிகர். அதன்பின்னர் அவர்களது மோதல் திரைப்பட விழாக்களிலும் எதிரொலித்தது.

இந்த விஷயம் ஆறுவதற்குள் நடிகர் வேறொரு பெண்ணை மணந்துகொண்டார். நடிகையும் வெளிநாட்டு மணமகனை மணந்து கொண்டு குடும்பம் குழந்தையென்று இருக்கிறார். இப்போதும் நடிக்கிறார்.





பாஸ்கர்ராஜ்-ரக்ஷா
படம்: காதல் பள்ளி



சங்கவி
படம்: அபூர்வ சகோதரிகள்

## மினி சினி

* கமலின் சொந்தப்படங்களுக்கு ஒளிப்பதிவு செய்யும் பி.சி.ஸ்ரீராம், கமலின் 'மருதநாயகம்' படத்திற்கு ஒளிப்பதிவு செய்யவில்லை. ஏன்? 'மருதநாயகம்' எடுக்கும் சமயத்தில் ஸ்ரீராம் ஆங்கிலப்படம் ஒன்றுக்கு ஒளிப்பதிவு செய்கிறார்.
* 'வி.ஐ.பி' படத்திற்கு பின்னர் பிரபுதேவாவுக்கு மூன்று புதிய படங்கள் ஒப்பந்தமாகி இருக்கின்றன. அவற்றில் சி. சுந்தர் முதன் முறையாகத் தயாரிக்கும் படமும் அடக்கம்.
* 'மைக்' மோகன் தயாரித்து நடிப்பதாக இருக்கும் படத்திற்கு 'பொன் விழா' என்று பெயரிட்டுள்ளார். இதற்கு முன் இவர் இப்படத்திற்கு 'மகேசன்', 'சந்தோசம்' என்று பெயரிட்டு மாற்றியவர்.
* குஷ்புவைக் கதாநாயகியாக வைத்துத் தமிழில் 'கோலங்கள்' படத்தை இயக்கிய ஐ.வி.சசி தற்போது குஷ்புவை கதாநாயகியாக வைத்து 'அனுமதி' என்ற மலையாளப்படத்தை இயக்கி வருகிறார்.
* விஜய்-சூர்யா இணைந்து நடிக்கும் 'நேருக்கு நேர்' படத்தைத் தயாரித்து வரும் மணிரத்னம், இது முடிவடைந்ததும் 'மின்சாரக் கனவு' ராஜீவ்மேனன் இயக்கும் படமொன்றைத் தயாரிக்கவுள்ளார்.
* 'சோலையம்மா' படம் மூலம் வில்லனாக அறிமுகமான கரிகாலன் 'இதயத்தைத் தருவாயா?' என்ற படம் மூலம் கதாநாயகனாக உயர்வு பெறுகிறார். இந்தப் படத்தில் மந்த்ரா கதாநாயகியாக நடிக்கிறார்.
* 'சுந்தர புருஷன்' வெற்றிக்குப் பின்னர் லிவிங்ஸ்டன் திரைக்கதை வசனம் எழுதி நடிப்பதாக இருந்த படம் 'உனக்கும் எனக்கும் கல்யாணம்'. இந்தப் படம் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது.
* தெலுங்கு நடிகர் நாகார்ஜுன் 'ரட்சகன்' படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். இவரைத் தொடர்ந்து விரைவில் சிரஞ்சீவி, வெங்கடேஷ் ஆகியோர் நேரடித் தமிழ்ப்படங்களில் நடிக்கவுள்ளனர்.
* மலையாளத்தில் நம்பவர் வன் கதாநாயகி என்ற அந்தஸ்தை மஞ்சு வாரியர் என்ற புதுமுக நடிகை பெற்றிருக்கிறார். இவர் பிரபுவுக்கு ஜோடியாக 'அன்புள்ள மன்னவா' என்ற படத்தில் நடிக்கிறார்.
* கார்த்திற்கு ஜோடியாக 'சிஷ்யா' படத்தில் அறிமுகமானவர் நக்மாவின் தங்கை ரோஷினி 'சிஷ்யா' எதிர்பார்த்த வெற்றியைத் தராததால் புதிய படவாய்ப்புக்கள் எதுவுமின்றி இருக்கிறார் ரோஷினி.

## மோகம்

தமிழ்ப் பட உலகம்மீது தெலுங்கு நடிகர்களுக்கு மோகம் பிறந்துள்ளது. 'ரட்சகன்' படம் மூலம் நாகார்ஜுனா வருகிறார். அவரைத் தொடர்ந்து மற்றொரு ஹீரோ வெங்கடேசும் ஒரு தமிழ்ப் படத்தில் நடிக்கப்போகிறார். சிரஞ்சீவியும் தமிழ்ப் படமொன்றில் நடிக்க விரும்புகிறாராம். தமிழ்பட நடிகர்கள் பாடு திண்டாட்டம்தான்.

## சிவாஜி நடிக்கும் புதிய படம்
### மற்றொரு நாயகன் நெப்போலியன்

'ஒன்ஸ்மோர்' படத்தின் பின்னர் சிவாஜி நடிக்கும் புதிய படம் 'என் ஆச ராசாவே.' 'தாதா சாகேப் பால்கே' விருது பெற்ற பின்னர் சிவாஜி நடிக்கும் முதல் படம் இது.

'நாட்டுப்புறப்பாட்டு', 'என் ராசாவின் மனசிலே', 'எட்டுப் பட்டி ராசா' ஆகிய படங்களை இயக்கிய கஸ்தூரிராஜா இதனை இயக்கப் போகிறார். சிவாஜியுடன் நெப்போலியன் நடிக்கிறார். தந்தையாக சிவாஜி, மகனாக நெப்போலியன் நடிக்கின்றனர். கிராமப்புறக் கதையான இப்படத்துக்கு இளையராஜா இசையமைக்கிறார்.

## ஆறுதல் ஈஸ்வரி

'நேசம்', 'உல்லாசம்' படங்களில் தொடர்ந்து நடித்ததால் அஜித்குமாருக்கும் மகேஸ்வரிக்கும் இடையே ஒட்டுதல் அதிகமானது தெரிந்த செய்தி. இதனால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இரண்டு பேர். ஒருவர் சக்கரவர்த்தி. இவர் மகேஸ்வரிக்கு தெலுங்கு படவுலகின் நெளிவு சுழிவுகளை கற்றுக்கொடுத்தவர். இருவரும் கட்டிக் கொள்ளப் போவதாகவும் செய்திகள் வந்தன. மாலை மாற்ற ரெடியாக இருந்தார் சக்கரவர்த்தி. மனதை மாற்றிக் கொண்டார் மகேஸ்வரி.

இன்னொருவர் ஹீரா. அஜித்குமாருக்கு நெளிவு சுழிவுகளை கற்றுத்தந்த குரு இவர்தான். அஜித் இப்போது ஹீரா பக்கமே திரும்புவதில்லை. பட வாய்ப்புக்களும் இல்லை. வெளியான படங்களும் தொடர் தோல்வி. அதனால் மகேஸ்வரிதான் ஆறுதல் கொடுத்து உற்சாகப்படுத்துகிறாராம்.



மம்தா குல்கர்னி

## கொண்டாட்டம்

ஊரெல்லாம் தூங்கும்போது விழித்திருப்பது போல, வேலை நிறுத்தம் காரணமாக தமிழ் சினிமா உலகம் உறங்கிப் கொண்டிருக்க, அர்ஜுன் மட்டும் ஜாலியாக இருக்கிறார்.

கே.எஸ். ரவிக்குமார் இயக்கத்தில் 'கொண்டாட்டம்' படத்தில் நடிப்பதற்காக மொரிஷியல் தீவுக்கு சென்றுவிட்டார் அர்ஜுன். கூடவே சென்றுள்ளவர் சிம்ரான். கொண்டாட்டம்தான்.

## மம்தா நீக்கம்

இயக்குநர் வாசு இயக்கும் இந்திப் படத்திலிருந்து மம்தா குல்கர்னி நீக்கப்பட்டுவிட்டார். மம்தாவுக்கும் வாசுவுக்கும் ஒத்துப்போகவில்லை.

மம்தா எப்போதுமே தகராறுகளில் முன்னணியில் நிற்பவர். இயக்குநர்களை தனக்கு பிடித்தால் மட்டும் சகல விதங்களிலும் ஒத்துழைப்பார். இல்லையென்றால் முரண்டு பிடிப்பார். இதனால் பல படங்களில் பாதியிலேயே தூக்கப்பட்ட அனுபவங்கள் உண்டு.

மம்தாவை கடத்தும் முயற்சி நடந்த பின்னர் இப்போது நாலைந்து அடியாட்களை தனக்கு பாதுகாப்பாக புதிதாக நியமித்துள்ளார். முன்புபோல நட்சத்திர விடுதிகளுக்கு செல்லாமல் தனது ஆண் நண்பர்களை வீட்டுக்கே அழைத்துக் கொள்கிறாராம். வீட்ல விசேஷம்.



## மூன்று பெயர்

கவிதா, நந்தினி, கவுசல்யா மூன்று பெயருக்கும் ஒருவரே சொந்தக்காரரர். அவர்தான் 'காலமெல்லாம் காதல் வாழ்க' படநாயகி கவுசல்யா.

சொந்தப் பெயர் கவிதா. கன்னடப் படங்களில் நடிக்கும் போது நந்தினி. தமிழ்ப் படவுலகில் கவுசல்யா.


www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

## வாரிசுக்கு பாராட்டு

பாக்யராஜ் இயக்கி நடிக்கும் படம் 'வேட்டிய மடிச்சுக் கட்டு'. கனடாவில் கடைசிக்கட்ட படப்பிடிப்பை நக்மாவின் துணையுடன் விறுவிறுப்பாக முடித்திருக்கிறார்.

படத்தில் பாக்யராஜின் மகன் சந்தனுவும் நடித்திருக்கிறான். குட்டிப்பையனின் நடிப்பை விழுந்துவிழுந்து பாராட்டுகிறார் பாக்யராஜ். 'இப்படி நடிப்பான் என்று நானே எதிர்பார்க்கவில்லை. இனிமேல் அடுத்தடுத்த படங்களிலும் நடிப்பான்' என்கிறார்.

## ராதாவும் வந்துவிட்டார்

அக்கா அம்பிகா பழைய உறவுகளை படு வேகமாகப் புதுப்பித்து வருகிறார்.இந்த விடயத்தில் கைதேர்ந்த அனுபவசாலியான அம்பிகா தன் முன்னாள் கதாநாயகர்களை விடாமல் துரத்தி வெற்றி கண்டுள்ளார். இதனால் பட வாய்ப்புக்களை தேடிக் கொண்டுள்ளார்.

இதனையறிந்த ராதாவும் மறுபடி நடிக்க வந்துவிட்டார். அக்காவைவிட நான் என்ன குறைச்சல். ஹீரோயினாகவே நடித்துக் காட்டுகிறேன் என்று முயற்சியில் இறங்கினார். 'ஏழாம் தம்புரான்' என்னும் மலையாளப் படத்தில் இரண்டு நாயகிகளில் ஒருவராக நடிக்க சான்ஸ் அடித்திருக்கிறது.

ராதாவின் முயற்சி தன் அனுபவத்தையும் வென்றுவிட்டதை நினைத்து அக்கா பெருமூச்சுவிடுகிறார்.

## தந்தை பெரியாராக நடிக்க ஆசை
## தாதா சாகேப் பால்கே சிவாஜி பேட்டி

'தாதா சாகேப் பால்கே' விருது பெற்றதில் சிவாஜிக்குள்ள சந்தோசத்தைவிட தமிழ்ப்பட உலகத்தினருக்கு மகாமகா சந்தோசம். வாழ்த்துக்களால் சிவாஜியை திக்குமுக்காடச் செய்துவிட்டனர். விருது பற்றி சிவாஜி என்ன நினைக்கிறார்?

தமிழக சஞ்சிகை ஜூனியர் விகடனுக்கு விருது பெற்றது பற்றி சிவாஜி கொடுத்துள்ள பேட்டி இது:

**கே: விருது தர தாமதமானதுக்கு என்ன காரணம்?**

சி: விருது தரணும்னு இங்கே நிறையப்பேரு சொன்னாங்க, எழுதினாங்க. ஆனால் டெல்லியில யாரும் சொல்லலையே. இங்கேர்ந்து போறவங்க சொன்னாத்தானே அது புரியம். எப்பவும் டெல்லிக்காறங்களுக்கு தமிழ்நாடுங்கறது ரொம்பத் தூரம். பம்பாய்தான் பக்கம். அதனாலதான் நாம கண்ணுலபட இவ்ளோ நாளாகியிருக்கு. விருது தராத வரைக்கும் வேணாம்னு சொல்வோம். தந்தா வாங்கிக்குவோம். இப்போ குடுத்துட்டாங்க... *I Thank all...*

**கே: எப்படி ஃபீல் பண்றீங்க?**

சி: ஹேப்பி... ஓ.கே. அவ்வளவுதான். துள்ளிக்குதிக்கிற வயசை எப்பவோ தாண்டிட்டேன். எனக்கு அவார்ட் என்னு டெல்லியிலேர்ந்து ராத்திரி போன் வந்தது. நான் சூரக்கோட்டைல இருந்தேன். 'அப்படியா'ன்னு கேட்டுட்டு, ராம்குமாருக்கு போன் பண்ணி, 'அவார்டு குடுத்திருக்காங்கனு உங்கம்மாகிட்ட சொல்லுடா'ன்னேன். அவ்வளவுதான் என் சந்தோசம்.

**கே: டைரக்ஷன் பண்ணணும்னு ஆசை வந்ததே இல்லையா?**

சி: இல்லே. அது ஒரு காப்டன் உத்தியோகம். நின்று எல்லோரையும் மேய்க்கத் தெரியணும். அது தெரிஞ்சா நான் அரசியலுக்குள்ளேயே இருந்திருப்பேனே. நான் ஒரு நல்ல பிளேயர். அதனால நடிப்போட நிறுத்திட்டேன்.

**கே: இலட்சியம்னு நினைக்கிற ரோல் ஏதாவது பாக்கி வைச்சிருக்கீங்களா?**

சி: நிறைய இருக்கு. தந்தை பெரியார் ரோல் பண்ணனும்னு ஆசை. பெரிசா தாடி வச்சு 'வெங்காயம்'னு திட்டி நடிக்கிற மாதிரி ஒரு வேஷம் செய்யணும். லவ்லியான காரெக்டர் அது. எனக்கு இன்னும் வயசிருக்கு. அதனால பெரியாரா நடிச்சிட்டுத்தான் போவேன். டோண்ட் ஒர்ரி.




அருண்குமார்-சங்கீதா
படம்: கங்கா கவுரி

## 'மூத்தத்தில் மூழ்கினேன்'

'ஆசைத் தம்பி' படம் முடிவடையும் கட்டத்தில் இக்கிறது. அப்பாசும்- அஞ்சு அரவிந்தும் பங்கு கொண்ட பாடல் காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது.

'ஐ லவ் யூ ஓவியா, முத்தத்தில் நான் மூழ்கினேன், உன் மூச்சில் நான் வாழ்கிறேன்...' என்று தொடங்கும் பாடல் காட்சியே படமாக்கப்பட்டது. இசை: ஆதித்யன்.

'ஆசைத் தம்பி' படத்தில் தனது நிபந்தனைகளை சற்று தளர்த்தி அப்பாசுடன் நெருக்கமாக நடித்து ஒத்துழைத்துள்ளாராம் அஞ்சு அரவிந்த்.

## பெயர் பொருத்தம்

'ரம்பா' என்றால் இந்திரன் சபையின் சுந்தர அழகிகளில் ஒருவர் என்பது தெரியும். ரம்பா என்றால் இன்னொரு அர்த்தமும் உண்டாம். ஆங்கில அகராதியில் தேடிக் கண்டுபிடித்துள்ளார் ஒரு தமிழக சினிமா நிருபர்.

கியூபா நாட்டில் ஒரு குலுக்கல் நடனம் உள்ளதாம். அதனை 'ரம்பா' என்றே அழைப்பார்களாம். பொருத்தமான அர்த்தம்தான். கியூபா என்றதும் கரும்புதான் நினைவுக்கு வரும். இனிமேல் கரும்போடு 'ரம்பா' நினைவும் வரப் போகிறதோ?

## பபிஷாலினி — விஜய்

பேபிஷாலினி முதன் முதலாக தமிழில் விஜய் ஜோடியாக நடிக்கிறார். மலையாளப் படவுலகின் ...ரபல இயக்குநர் பாசிலின் படம் 'அனியத்தி புறாவு'. தமிழில் 'தங்கைப் புறா' என்று அர்த்தம். ...லையாளத்தில் வெற்றிக் கொடி நாட்டிய அந்தப் படத்தை தமிழில் தயாரிக்கிறார்கள். விஜய் ...ன்மையான பாத்திரத்தில் நடிக்கிறார்.

ரஜினி ஜோடியாக நடிக்க விரும்பிய பேபிஷாலினி விஜய் ஜோடியாக நடிக்கப்போகிறார்.

தெலுங்கில் ஹிட்டான 'பெல்லி சந்தடி' படத்தை தமிழில் 'நினைத்தேன் வந்தாய்' என்ற பெயரில் ...க்கிறார்கள். விஜய் கதாநாயகன். விஜய் காட்டில் செம மழை. இதற்கிடையே விஜய்க்கு பெண்பார்க்க ...னைத்த அப்பா சந்திரசேகர் பெண்பார்க்கும் படலத்தை ஒத்திவைத்திருக்கிறார். பிஸியாக உள்ள ...னால் வேறு துறைகளில் பிஸியாக இருக்க முடியாதல்லவா, அதுதான் தற்காலிக ஒத்திவைப்பு.

| முகப்பில் | |
|---|---|
| ...ந்து | மகேஸ்வரி |

...ரவிந்த டி சில்வா



சக்தி-ஓவியா
படம்: மனசு

## அப்பா இந்து–அம்மா முஸ்லிம்

நடிகை நக்மாவின் அப்பா இந்து மதத்தைச் சேர்ந்தவர். அம்மா முஸ்லிம். காதலித்து கல்யாணம் பண்ணிக்கொண்டார்களாம்.

"எங்கள் வீட்டில் இந்து முறைப்படிதான் எல்லா சம்பிரதாயமும் நடிக்கிறது. தீபாவளி அன்று லட்சுமி பூஜை நடிக்கும். துர்க்கா பூஜையை விமரிசையாகக் கொண்டாடுவோம்" என்கிறார் நக்மா.

தன் தங்கை ரோஷினிக்கு போதிய வாய்ப்புக்கள் இல்லாதது குறித்தும் நக்மா கவலைப் படுகிறார். 'சிஷ்யா' படத்தின் தோல்வியால் ரோஷினி ஓரம்கட்டப்பட்டிருக்கிறார்.

## சங்கவிக்கு பிடித்தது

சங்கவிக்கு பத்து விஷயங்கள் ரொம்ப ரொம்பப் பிடிக்குமாம். அதில் ஒன்று தாயாரின் சமையல். பிடித்த பத்தில் முதலாவது என்ன? என்ற கேள்விக்கு உதட்டில் விரல்வைத்து மூச் காட்டுகிறாராம்.

தெலுங்குப் படமொன்றில் சங்கவியுடன் அவரது தாய்க்குலமும் நடித்தாராம். படம் அம்பேல். அத்தோடு நடிக்கும் ஆசைக்கு முழுக்குப் போட்டுவிட்டார் தாய்க்குலம்.

## கோட்டை விட்டார் நாசர்

'தேவதை' படத்தில் நடிப்பிலும், இயக்கத்திலும் அசத்தியிருக்கிறார் நாசர். கதாநாயகி கீர்த்தி ரெட்டியை எங்கிருந்துதான் கண்டுபிடித்தாரோ? அசல் தேவதைதான். எதிர்காலம் பிரகாசமாக இருக்கிறது கீர்த்தி ரெட்டிக்கு.

நாசரும், தலைவாசல் விஜய்யும் வெளுத்து வாங்குகிறார்கள். பிரமாண்டம் வீடியோவில் பார்க்கும்போதே அசத்துகிறது. திரையில் பார்த்தால் எப்படி இருக்கும்?! இளையராஜாவும் மனம் வைத்து இசையமைத்திருக்கிறார்.

நடிப்பு இருந்தும், பிரமாண்டம் இருந்தும், இசை இருந்தும், துபாய் நாட்டு செழிப்பிருந்தும் ஏதோ ஒன்றைக் காணவில்லையே அது என்ன? உருப்படியான கதை! கதைவிடயத்தில் கோட்டை விட்டுவிட்டார் நாசர்.

பழங்கால காட்சிகளுக்கு வசனங்கள் நாசரின் கைவண்ணம். "நீங்கள் பல்லாயிரம் பேர் இருக்கலாம். எண்ணிக்கையில் நாங்கள் நூறு பேராக இருக்கலாம். ஆனால் வீரர்கள்." இப்படி உயிரோட்டமான வசனங்கள் பளீர் பளீர்.

## 'உடைக்க முடியாது'

"என் மனைவியைப் பார்த்து அதிசயித்து அசடு வழியும் ஆண்கள் ஏராளம். அதற்காக அவளை பூட்டியா வைத்திருக்கிறேன்? ப்ரீயாகத்தானே உலவவிடுகிறேன்.

அதேபோலத்தான் என்னிடம் வந்து வழியும் நடிகைகளும் ஏராளம். ஆனால் நாங்கள் இருவரும் ஸ்டெடியாக இருப்போம். எங்கள் அன்பை யாராலும் உடைக்க முடியாது" என்கிறார் நடிகை அமலாவின் கணவர் நடிகர் நாகார்ஜுன்.

## அரசியலில் லதா

எம்.ஜி.ஆர். உடன் நடித்த நடிகைகளில் நெருக்கமாகப் பேசப்பட்ட நடிகைகளில் ஒருவர் லதா. பின்னர் இவர் எம்.ஜி.ஆருடன் முரண்பட்டு விலகிப்போனார். ரஜினிகாந்த்தை வளைத்துப் பிடிக்க முயற்சி செய்தார். ரஜினியும் லதாவை திருமணம் செய்ய நினைத்திருந்தார். பின்னர் எம்.ஜி.ஆர். ரஜனிக்கு புத்தி சொன்னதால் அந்த முயற்சி நின்றுபோனது.

இப்போது மீண்டும் நடிக்க ஆரம்பித்துள்ளார் லதா. சமீபத்தில் திருநாவுக்கரசு தலைமையிலான அ.தி.மு.க.(டி)வில் இணைந்துள்ளார். "எம்.ஜி.ஆர். எனக்கு முக்கிய பதவி தரவிரும்பினார். நான்தான் மறுத்தேன். ஜெயலலிதாவை வீழ்த்தவே அரசியலில் குதித்திருக்கிறேன்" என்று பந்தாவாகப் பேட்டி கொடுத்திருக்கிறார் லதா.

## காதோடு சொல்லுகிறோம்

சினிமாவில் நடிக்க தனது வாரிசுகளையும் இறக்கியுள்ள 'ம' நடிகையும், 'ல' நடிகையும் தோழிகளாம். இருவருமே முன்னர் மக்கள் மனம் கவர்ந்த 'திலக' நடிகருடன் நடித்து பிரபலமானவர்கள். சமீபத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் இருவரும் உற்சாகபானம் அருந்திக்கொண்டிருந்தனர். அதனைக் கண்ட ஒரு நிருபர் புகைப்படம் எடுக்க முயன்றாராம். கிளாசை தள்ளிவைத்துவிட்டு போஸ் கொடுத்தாராம் 'ல' நடிகை. 'ம' நடிகை மட்டும் போஸ் கொடுக்க மறுத்துவிட்டார்.

குமார நடிகர் ஆசையாக வெளிநாட்டு 'ஹோண்டா சிவிக்' கார் ஒன்றை வாங்கி வைத்திருந்தார். இப்போது அந்தக் கார் 'மா' என்ற எழுத்தில் பெயர் முடியும் முன்றெழுத்து நடிகையிடம் இருக்கிறது.

இசையில் வல்லவரின் சகோதரர் அவர். பாடுவார். பாடல் எழுதுவார். படங்களையும் இயக்குவார். இப்போது சும்மாதான் இருக் கிறார். மந்திர நடிகை அனுபவமுள்ள ஒருவரை தேடினாராம். கணக்கு வழக்குகளை மேற்பார்வை செய்யத்தான் தேடினார். இப்போது 'அமர' இயக்குநர்தான் மேற்பார்வையை கவனித்து வருகிறார்.

'சிம்' நடிகை இயக்குநர், தயாரிப்பாளர், நடிகர் என்று பாரபட்சம் இல்லாமல் 'நட்போடு' பழகுகிறாராம். அவரது வரவின் பின்னர் தாமும் பாரபட்சம் இல்லாமல் எல்லோருடனும் நட்பாக இருந்து தொலைக்க வேண்டியுள்ளது என்று புலம்புகிறார்கள் சில நடிகைகள்.

ஒரு மதத்தின் பெயர் கொண்ட நடிகை அவர் 'பா' இயக்குநரின் அன்புக்குப் பாத்திரமானவர். தொலைக்காட்சிகளிலும் பிரபலமானவர். சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் நடன தேவனை உருகிப் பாராட்டினாராம். அன்றே நடன நடிகரிடம் இருந்து அன்பான அழைப்பு வந்ததாம். ஓடோடிச் சென்றார் நடிகை. நேரில் 'நன்றி' சொல்லி அனுப்பினாராம் நடிகர். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஹீரோக்களை வளைத்துப்போடும் கொக்கி களாகவும் பயன்படுத்துகிறார் நடிகை. சூப்பர் ஹிட்டான ஐடியாதான்.

## வியப்பு

நடிகர் ஜெமினியின் மகளான இந்தி நடிகை ரேகாவுக்கு இப்போது 40 வயது. 'காமசூத்ரா','ஆஸ்தா' போன்ற படங்களில் கவர்ச்சியாக காதல் லீலைகளில் நடித்துள்ளார் ரேகா. ஏனைய இளம் நடிகைகள் கூட ரேகாவைப் பார்த்து மூக்கின்மேல் விரல் வைக்கின்றனர்.


படிப்பகம்

www.padippakam.com

# கர்ப்பிணிகளே கோபப்படாதீர்கள்!

**கர்ப்பம் தரித்தவுடன்....:**

கர்ப்பம் தரித்தவுடன் முதல் மூன்று மாதங்களுக்கு உடல் உறவு கொள்ளாமல் இருப்பது நல்லது. ஏனெனில் உடல் உறவு கொள்வதால் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புகள் அதிகம்.

கர்ப்பம் தரித்துவிட்டோம் என்ற உணர்வே பெண்களுக்கு வாந்தியை ஏற்படுத்திவிடுகிறது. உடலில் உள்ள 'புரோஜஸ்டிரான்' ஹார்மோன்களும் எச்சிஜி வேதிப்பொருள்களும் அதிக அளவில் உற்பத்தி ஆவதால் ஒவ்வாமை அதிகமாகி வாந்தி ஏற்படுகிறது. வாந்தி மூலம் உடலில் உள்ள நீர்ச்சத்து அதிகமாக வெளியேறுகிறது. வாந்தி அதிகமாக இருக்கும் நிலையில் நீர் இழப்பைத் தடுக்க மருத்துவமனையில் சேர்ந்து 'டிரிப்ஸ்' (குளுக்கோஸ்) ஏற்றிக் கொள்வது நல்லது.

**முதல் இரண்டு மாதங்கள்:**

கர்ப்பம் தரித்த முதல் இரண்டு மாதங்கள் மிக முக்கியமான காலகட்டமாகும். ஏனெனில் குழந்தையின் கை, கால் உட்பட அனைத்து உறுப்புக்களும் முதல் இரண்டு மாதங்களுக்குள் முழுமையாக வளர்ச்சி அடைகின்றன. இந்த இரண்டு மாதங்களில் மருத்துவரின் ஆலோசனையின்றி எந்த மாத்திரையையும் சாப்பிடக்கூடாது. மாத்திரைகளைச் சாப்பிடுவது குழந்தையின் உடல் உறுப்புக்களைப் பாதிக்கும். எக்ஸ்ரே எடுக்கவும் கூடாது.

கர்ப்பம் தரித்த முதல் இரண்டு மாதங்களில் காலையில் எழுந்தவுடன் வாந்தி உணர்வும் சோர்வும் இருக்கும். வயிறு காலியாக இருப்பதால் அமிலங்கள் அதிக அளவில் சுரந்து வாந்தி வரும். மாலையில் வாந்தி இருக்காது. எளிதாக ஜீரணிக்கக்கூடிய இட்லி, பருப்பு சாம்பார், மோர், இளநீர், சூப் ஆகியவற்றைச் சாப்பிட வேண்டும். தினமும் காலை இருவேளையும் மாலையில் இரு வேளையும் மொத்தம் 4 பெரிய டம்ளர் பால் குடிப்பது தாய்க்கும் குழந்தைக்கும் மிகவும் நல்லது. ஒரேஞ்ச் பழச்சாறில் குளுக்கோஸ் போட்டுச் சாப்பிடுவது குழந்தையின் வளர்ச்சிக்கு மிகவும் நல்லது.

முதல் இரண்டு மாதங்களுக்குப் பிறகு சோர்வு நீங்கி முகம் தெளிவாகிவிடும். மிகவும் கடினமான வேலைகளைக் கர்ப்பிணிப் பெண்கள் செய்யக்கூடாது. மதியம் 2 மணி நேரம் கட்டாயம் தூங்கி ஓய்வு எடுக்கவேண்டும். தூங்கும் போது தாயின் உடல் உறுப்புக்கள் அனைத்தும் ஓய்வு எடுக்கும் நிலையில் குழந்தைக்கு அதிக இரத்தம் போகும். இது குழந்தையின் வளர்ச்சிக்கு உதவும்.

**நேராக ஏன் படுத்துத் தூங்கக் கூடாது?**

கர்ப்பிணிப் பெண்கள் நேராகப்படுத்துத் தூங்கக்கூடாது. நேராகப் படுத்துத் தூங்குவதால் தாயின் இரத்தக் குழாய்களைக் கர்ப்பப்பை அழுத்துவதால் இதயத்துக்குச் செல்லும் இரத்த அளவு குறையும். இதனால் கருவில் உள்ள குழந்தைக்குச் செல்லும் இரத்தத்தின்



அளவும் குறையும். எனவே கர்ப்பிணிகள், இதயம் உள்ள இடப்புறமாக ஒருக்களித்துப் படுத்துத்தான் எப்போதும் தூங்க வேண்டும்.

**அயோடின் உப்பே நல்லது:**

கர்ப்பம் தரித்தவுடனாவது கல் உப்பைச் சமையலில் சேர்த்துக்கொள்வதைத் தவிர்க்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள கர்ப்பிணிப் பெண்கள் இவ்விஷயத்தில் அதிக அக்கறை கொள்ளவேண்டும். ஏனெனில் அயோடின் சத்து இல்லாவிட்டால் குழந்தை பிறந்தவுடன் அதற்குக் கழலை நோய்கள் வரவாய்ப்புகள் உண்டு. எனவே அன்றாடம் சமையலுக்கு அயோடின் கலந்த பாக்கெட் உப்பையே பயன்படுத்த வேண்டும்.

கர்ப்பம் ஊர்ஜிதமான உடனேயே இரத்தப் பிரிவு, இரத்த அழுத்தம், எடை, உயரம், சிறுநீரில் சர்க்கரை அளவு, சிறுநீரில் உப்பு ஆகிய பரிசோதனைகளைச் செய்ய வேண்டும். கர்ப்பம் ஊர்ஜிதமானவுடன் பெண்ணின் எடை 45 கிலோவும் உயரம் 150 செ.மீ.யும் இருந்தால் நல்லது. முதல் மூன்று மாதங்களில் அரை கிலோகிராம் அளவுக்கே எடை அதிகரிக்கும். 4-வது மாதத்திலிருந்து மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ வீதம் அதிகரிக்க வேண்டும். எடை அதிகரிக்காமல் போனாலோ அல்லது எடை 3 கிலோ அளவுக்கு அதிகரித்தாலோ பிரச்சனைகள் வரும். அதிக இரத்த அழுத்தம், சிறுநீரில் உப்பு, அதிக எடை காரணமாக கர்ப்பிணிப் பெண்களுக்குக் கை, கால்களில் வீக்கம் ஏற்படுகிறது. இதனால் கருவில் உள்ள குழந்தைக்குப் போதிய இரத்தம் கிடைக்காமல் அதன் வளர்ச்சி பாதிக்கப்படும். கை, கால்களில் வீக்கம் தெரிந்த உடனேயே மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

**ஏன் உணர்ச்சிவசப்படக் கூடாது?:**

கர்ப்பிணிகள் உணர்ச்சிவசப்படுவதோ, கோபப்படுவதோ நல்லது அல்ல. ஏனெனில் கோபப்படும்போது 'அன்ரினலின்' சுரப்பிகள் அதிகமாகச் சுரந்து, இரத்த அழுத்தம் அதிகமாகும். தாயின் இரத்தக் குழாய்கள் சுருங்கி கருவில் உள்ள குழந்தைக்குச் செல்லும் இரத்தத்தின் அளவு குறையும். குழந்தையின் வளர்ச்சி பாதிக்கப்படும்.

**இரத்தம் வெளியேறுவது நல்லது அல்ல:**

பிரசவ நேரம் நெருங்கும்போது இரத்தம் வெளியேறுவது குறித்து அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. வீட்டில் இருக்கும் போது இரத்தம் வெளியேறினால் உடனடியாக கர்ப்பிணியை மருத்துவமனையில் சேர்த்து விடுவதே நல்லது.

**இரத்தப் பிரிவு ஏன் முக்கியம்?:**

கருத்தரித்தவுடன் இரத்தப் பிரிவைக் கட்டாயம் சோதனை செய்துகொள்ள வேண்டும். தாயின் இரத்தப் பிரிவு (ஆர்.எச்) நெகட்டிவாக இருந்தால், கர்ப்ப காலத்தின் ஏழாவது மாதத்தில் ஒரு ஊசி போட்டுக்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்தவுடன் குழந்தையின் இரத்தப் பிரிவு பொசிட்டிவாக இருந்தால், தாயின் கருப்பையில் உள்ள எதிர் அணுக்களை அழிப்பதற்குக் குழந்தை பிறந்த 72 மணி நேரத்துக்குள் ஊசி போட வேண்டும். அப்படிப் போடாவிட்டால் அடுத்த கரு உருவாகும் போது அது தங்காமல் போய் விடும்.

**மூன்று ஆண்டுகள் வரை....:**

முதல் குழந்தைக்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு அடுத்த குழந்தையைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பதுதான் நல்லது. அப்போதுதான் முதல் குழந்தையை ஆரோக்கியமாக வளர்ப்பதோடு தாயும் தன் உடல் நலத்தைக் கவனித்துக்கொள்ள முடியும்.

**கருத்தரிப்பைத் தடுக்கும் முறைகள்:**

முதல் குழந்தை பிறந்தவுடன், மாத்திரைகள் சாப்பிடுவதன் மூலம் கருத்தரிப்பைத் தடுக்கலாம். மாத விலக்கான 5-ம் நாள் தொடங்கி தொடர்ந்து 22 நாள்கள் மறக்காமல் மாத்திரைகளைச் சாப்பிடுவதன் மூலம் கருத்தரிப்பைத் தடுக்கலாம்.

மாத்திரைகளைச் சாப்பிட மறந்துவிடக் கூடும் என்பதால் பெரும்பாலான பெண்கள் 'காப்பர்-டி' அணிந்துகொள்கின்றனர். ஆண்களுக்கான கருத்தடைச் சாதனத்தை விட காப்பர்-டி மிகுந்த பாதுகாப்பானது. காப்பர்-டியை ஒரு முறை அணிந்துகொண்டால் மூன்று ஆண்டுகளுக்குக் கவலை இல்லை.

**கருத்தடை அறுவைசிகிச்சை:**

குழந்தைகள் வளர்ந்த பிறகு கருத்தடை அறுவை சிகிச்சையை (டியூபக்டமி) பெண்கள் செய்து கொள்வது நல்லது.

குழந்தைப் பிறப்பைத் தடுக்க ஆண்களும் உதவ முடியும். 'வாஸக்டமி' அறுவை சிகிச்சையை ஆண்கள் செய்துகொண்டால் குழந்தைப் பிறப்பைத் தடுத்து விடலாம். விரைப் பையின் மேல்புறத்தில் மிகச் சிறிய வெட்டு ஏற்படுத்தி வாஸ் டெபரென்ஸ் நாளத்தின் ஒரு பகுதியைத் துண்டித்தலே வாஸக்டமி அறுவைசிகிச்சையாகும்.

அவசியம் ஏற்பட்டால், கருத்தடை செய்து கொண்ட பெண்களுக்கோ அல்லது அறுவை சிகிச்சை செய்துகொண்ட ஆண்களுக்கோ மீண்டும் அறுவை சிகிச்சை செய்து குழந்தை பிறக்கும் வாய்ப்பை ஏற்படுத்திவிடலாம்.

**மாதவிடாயிலிருந்து விடுதலை:**

பெண்களுக்கு 45 முதல் 47 வயதாகும் போது மாதவிடாய் நின்று விடும். 'முதுமை அடைந்துவிட்டோம்' என்ற உணர்வை அது ஏற்படுத்தும். அதே சமயம் 'மாதத் தொல்லை போச்சு' என்ற விடுதலை உணர்வும் தோன்றும்.

**அறிகுறிகள்:** கை-கால்-இடுப்பு வலி, அதிகச் சோர்வு, உடல் உஷ்ணமாக இருத்தல், தலையிலிருந்து கால் வரை வியர்த்தல் ஆகியவை மாதவிடாய் நிற்கப் போவதை முன்கூட்டியே அறிவிக்கும் அறிகுறிகள்.

மாதவிடாய் நிற்கும் காலத்தில் குடும்பத்தில் உள்ளவர்கள் ஆதரவாக நடந்து கொள்ள வேண்டும். சிரமமான வேலைகளைப் பெண்கள் செய்யக்கூடாது. மருத்துவரின் ஆலோசனையுடன் விட்டமின் மாத்திரைகளைச் சாப்பிட்டால் உற்சாகமாக இருக்கலாம். 50 வயதிலும் மாதவிடாய் நிற்காவிட்டால் மருத்துவரிடம் ஆலோசனை கலப்பது அவசியம்.

## குறைந்த வயதில் திருமணமா?

பெண்ணின் திருமண வயது 21 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது ஏன்? பெண்ணுக்கு 21 வயதுக்குள் திருமணம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்; பெண்ணும் திருமணத்துக்குச் சம்மதிக்கக்கூடாது. ஏனெனில் 21 வயதாகும்போதுதான் இடுப்பு எலும்புகள், சினைப் பை, கர்ப்பப் பை ஆகியவை முழுமையான வளர்ச்சி அடைந்து மகப்பேற்றுக்குத் தயாராகின்றன.



16 வயதிலோ அல்லது 18 வயதிலோ திருமணம் செய்தால் தாய்க்கு உள்ள ஊட்டச் சத்துக் குறைவு காரணமாகக் குழந்தையும் சரியாக வளராது. பிரசவத்தின்போது குழந்தையின் தலை வெளியே வராமல் சிசேரியன் செய்ய வேண்டி வரும். பிரசவத்தைத் தாங்கக் கூடிய அளவுக்கு மனப் பக்குவம் இருக்காது. சாதாரண வலியையே பிரசவ வலியாக நினைத்து அழுதுகொண்டே இருப்பார்கள். ஆனால் 21 வயதில் திருமணம் செய்துகொள்ளும் பெண்ணுக்கு எதையும் தாங்கும் மன வலிமையும் மனப் பக்குவமும் ஏற்பட்டுவிடும்.

**முதல் இரவை முன்னிட்டு....**

திருமணத் திகதியை முன்னிட்டு முதல் இரவுக்காக மாதவிடாயைத் தள்ளிப்போட மணமகள் மாத்திரை சாப்பிடுவது மிகவும் தவறு. மாத்திரை சாப்பிட்ட பின்பு மாதவிடாய் தள்ளிப் போகும். திருமணம் நடக்கும் அதே மாதவிடாய் மாத சுழற்சியிலேயே கருத்தரிக்கும் நிலையும் ஏற்பட்டால், கருவில் உருவாகும் குழந்தை ஊனமாகப் பிறக்கும் ஆபத்துக்கள் அதிகம். கருத்தரித்த 4-வது மாதத்தில் ஏற்படும் வேறு பிரச்சனைகள் காரணமாக ஸ்கேன் செய்யும்போது குழந்தைக்கு உள்ள ஊனம் தெரிய வந்து கருச்சிதைவு செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே திருமணத்தை முன்னிட்டு மாதவிடாயைத் தள்ளிப்போட மாத்திரை சாப்பிடக்கூடாது.

**தவறான முறையில் கருச்சிதைவு:**

அனுபவமற்ற மருத்துவர்கள் மூலம் கருச்சிதைவு செய்து கொள்வதும் ஆபத்தில் முடியும். அனுபவமற்ற மருத்துவர்கள் மூலம் முதல் குழந்தையைக் கருச்சிதைவு செய்யும் நிலையில் உதிரப்போக்கு அதிகமாகி நோய்த் தொற்று ஏற்பட்டு தொடர்ந்து குழந்தைப் பேறே இல்லாத நிலை ஏற்படவும் வாய்ப்புகள் உண்டு.

**திட்டமிடுதல் அவசியம்:**

திருமணமானவுடன் முதல் குழந்தையைப் பெற்றுக் கொள்வதை அதிக காலம் தள்ளிப் போடுவது நல்லது அல்ல. ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள நான்கைந்து மாதங்கள் தள்ளிப் போடுவது நல்லது. அதற்கு தற்காலிக கருத்தடைகளை ஆண்கள் பயன்படுத்தலாம்.

**கருத்தடை மாத்திரைகள் வேண்டாம்:**

குழந்தைப் பிறப்பைத் தள்ளிப் போட பெண் தொடர்ந்து மாத்திரை சாப்பிட்டால், அதுவே மாதவிடாய்ப் பிரச்சனைகளுக்குக் காரணமாக அமைந்து விடுவதும் உண்டு. தொடர்ந்து கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிட்டு, பின்னர் மாத்திரை சாப்பிடாமல் கருத்தரிக்கும் நிலையில் கர்ப்பப் பையில் கரு பதிவதற்குப் பதிலாகக் கருக்குழாயிலேயே பதிந்து வளர ஆரம்பித்துவிடும். இது ஆபத்தானது. இதற்கு 'Ectopic Gestation' என்று பெயர்.

**அறிகுறிகள்:**

இது போன்ற கருக்குழாயில் கரு வளரும் நிலையில், மாதவிடாய் தள்ளிப்போகும் நிலையிலேயே வயிற்று வலி கடுமையாக இருக்கும். அதுவும் ஒருபக்கம் மட்டும் வலி கடுமையாக இருக்கும். சிறு நீர்ப் பரிசோதனை மூலம் கர்ப்பம் ஊர்ஜிதமானவுடன், இது போன்ற நோயாளிகளின் கர்ப்பப் பையின் வாயிலை மருத்துவர்கள் தொட்ட உடனேயே அலறி மயக்கம் அடைந்து விடுவார்கள்.

**சிகிச்சை:**

லேப்ராஸ்கோப் மூலம் கருக்குழாயில் கரு பதிந்திருப்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டு, கருக்குழாயில் நேரடியாக ஊசி மருந்தைச் செலுத்தி கருவைச் சிதைத்துவிட வேண்டும்.

## லேடீஸ் ஸ்பெஷல்


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? புத்தளம் வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்.

செல்வி ச. சரஸ்வதி,
50, 5ம் ஒழுங்கை, அநுராதபுர வீதி, புத்தளம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக வாசகியர் சார்பில் வாழ்த்துகிறோம்.

உங்களுக்கும் பரிசு வரும். நம்பிக்கையோடு கூப்பன்களை அனுப்பிவையுங்கள்.

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**பட்டுச் சேலை பரிசுத் திட்டம்**

**மகளிர் மட்டும் மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** CB

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02-08-1997**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## மனப்பக்குவம் தேவையான பருவம்!

பெண்ணாகப் பிறந்து திருமணமாகி, தாய்மை அடைவதன் மூலமே வாழ்க்கை பரிபூரணமாகிறது.

பூப்பெய்தல், திருமணமாதல், மாதவிடாய் நின்று போதல் ஆகியவை ஒரு பெண்ணின் மூன்று இன்றியமையாத கட்டங்களாகும்.

பெண் குழந்தைகள் விஷயத்தில் 10 வயது முதலே பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் இந்த வயதில்தான் உடலில் உள்ள சுரப்பிகள் அதிகமாக வேலை செய்ய ஆரம்பிக்கும். குறிப்பாக பால் உணர்வு சுரப்பிகள் அதிகமாக வேலை செய்ய ஆரம்பிக்கும். அப்போது பெண்ணுக்கு மனப் பக்குவம் மிக மிக அவசியம்.

குழந்தை பூப்பெய்தப் போவதற்கான இயற்கையின் முன்னேற்பாடாக உடல் உறுப்புகள் வளர்ச்சி அடையத் தொடங்கும். பால் உறவு குறித்தும் இனவிருத்தி எவ்வாறு நடைபெறுகிறது என்பதையும் தாய் மறைக்காமல் குழந்தைக்குப் பக்குவமாகச் சொல்ல வேண்டும். மனம் போன போக்கில் செயல்படுவதால் ஏற்படும் விபரீத விளைவுகளையும் முன்கூட்டியே தாய் சொல்ல வேண்டும்.



தற்போது மகளின் படிப்பில் பெற்றோர் அதிக அக்கறை செலுத்துவது மிகவும் வரவேற்கத்தக்கது. எந்தவிதப் பாதிப்பும் இன்றி முழுமையான கல்வி அறிவு பெற்று மக்களுக்கு வளமான வாழ்க்கை அமைய 10 வயது ஆன உடனேயே பக்குவமாக அனைத்து விஷயங்களையும் தாய் சொல்லித் தருவது மிகவும் நல்லது.

ஏனெனில் சிறு வயதிலேயே இவ்வாறு மனப் பக்குவத்தை மென்மையாக ஏற்படுத்தி விட்டால் மேல் வகுப்பு படிக்கத் தொடங்கும் போது அவர்களே பொறுப்புள்ளவர்களாக மாறி தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ளும் அளவுக்கு உயர்ந்து விடுவார்கள்.

**மாதவிடாய்ப் பிரச்சனை:**

ஓடி விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தை 7-ம் வகுப்புப் படிக்கும்போது பூப்பெய்துகிறாள். பூப்பெய்துவதற்கு ஒரு மாதம் முன்பு முகத்தில் பருக்கள் வரும். இது சற்று அதிர்ச்சியாக இருக்கும். பூப்பெய்திய பிறகு பெரும்பாலும் மாதம் ஒரு முறை மாதவிடாய் வரும்.

சில பெண்களுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மாதவிடாய் வரும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வருவது போகப் போகச் சரியாகிவிடும். ஆனால் தொடர்ந்து இரண்டு மாதத்துக்கு ஒரு முறை வந்தால் மருத்துவரிடம் அழைத்துச் செல்லவேண்டும். பூப்பெய்திய பிறகு விட்டு விட்டு மாதவிடாய் வருவது 6 மாதத்துக்குத் தொடர்ந்தாலே மருத்துவ சிகிச்சை அவசியம்.

மாதவிடாய்க் காலத்தில் இடுப்பில் வலி இருக்கும். சிலருக்கு மாதவிடாய்க்கு முன்பும் பின்பும் இடுப்பில் வலி இருக்கும். வலி இருக்கும்போது வெந்நீரில் குளித்தால் சற்று நிவாரணம் கிடைக்கும். மாதவிடாய் நின்றவுடன் வலி போய்விடும். மாதவிடாய்க் காலத்தில் இடுப்பு உறுப்புகளில் இரத்த ஓட்டம் அதிகமாக இருப்பதால்தான் இடுப்பு வலி ஏற்படுகிறது.

மாதவிடாய் நின்ற பிறகும் இடுப்புவலி தொடர்ந்தால் அலட்சியப்படுத்தக்கூடாது. ஏனெனில் கர்ப்பப் பை, சினைப்பையில் கட்டி இருந்தால் வலி தொடருவதற்கான வாய்ப்புகள் உண்டு. 'ஸ்கேன்' செய்து உரிய சிகிச்சை பெறுவது அவசியம்.

**டாக்டர் ஏ. செந்தமிழ் செல்வி அவர்களின் ஆலோசனைகளும், குறிப்புக்களுமே இந்தவாரம் இங்கு தரப்பட்டுள்ளன.**


**தினமுரசு–அருள் ஜுவலர்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி**

**தினமுரசு– அருள் ஜீவலர்ஸ் பரிசுக் கூப்பன் இல 21**

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அருள் ஜுவலர்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்

www.padippakam.com

## உன் பாதங்களின் ஸ்பரிசத்துக்காய்

### என் வாசற்படிகள்...

காலாதி காலமாய்
பலராலே
மகோன்னதப்படுத்தப்பட்ட
காதற்கடலில்
நாமும் இரு முத்துக்கள்!
***
உன்னை நானும்
என்னை நீயுமாய்
அங்கேயே
கண்டெடுத்துக்கொண்டோம்!
***
தினந்தோறும்
உன் முகம் பார்த்து
என் அகம் மலர்ந்தது
ஒரு காலம்!
***
இன்றைக்கு நிகழ்ந்தது
காலவரையறையற்ற
பொருள் வயிற் பிரிவு!
***
இத்தனை தூரத்துக்கப்பாலும்
என் ஒவ்வொரு அசைவிலும்
உன்னோடு தொட்டுக்கொண்ட
முந்தைய நினைவுகளின்
ஒளித்தெறிப்பு!
***
கொஞ்சம் சும்மா இரேன்!
நான் நிம்மதியாய் இருப்பதற்காய்
எதற்காக...
அசரீரியாய்
வாமன அவதாரமாய்
என்மேலேயே நெடுகலும்
உதைத்துக்கொண்டிருக்கிறாய்?
செதில் குத்திய காவடிக்காரனாய்
என்னை அலைக்கழிக்கிறாய்?
ஓ......
நானும் உனக்கு இப்படித்தானோ?
***
புதிய இடத்தில்
நிலை எடுத்துக் கொண்டபின்,
உன் பாத ஸ்பரிசத்துக்காய்
ஏங்கிக்கொண்டிருக்கிறது
என் வாசற்படி.
***
தேனீர்க்குவளையுடன் மட்டுமே
என் இதழ்கள்
எத்தனை தடவை
ஒற்றிக்கொள்வது?
கற்பனைக்குதிரையில்
சந்தோச மாளிகைப்பயணம்
எத்தனை காலம்
சாத்தியமாகலாம்?
***
கண்ணீரை உள்ளே
புதைத்துக்கொண்டு
சந்தோசமாக வழியனுப்பினாயே.....!
அந்நினைவு ஒன்றே
பிரசுரத்துக்கு அனுப்பிய
கவிதையாய்
ஏன் திரும்பத்திரும்ப வருகிறது?
***
என்னுடைய ஒவ்வொரு அணுவிலும்
நீ தரையிறங்கிய பிறகு
இருந்த சந்தோசத்தையும்
இரவல் வாங்கி விட்டாய்-
உன் நண்பியின் உடைகளைப்போல்!
***
ஒன்றைப்புரிந்து கொள்!
பல்லுப்போன கிழவியாய்
ஆறுதல் சொல்லி வரும்
உன் கடிதங்களோடு மட்டும்
திருப்தியுறாது...
எனது தவிக்கும் ஆன்மா!
***

**ம.பா. மகாலிங்கசிவம்.**

## காதல் உளவு

நீ வரும் பாதை
எது என்று
இந்த
'ரேடார்' கருவியின்
தேடல்...!
***
தொலைவினையும்
துருவி நிற்கும்
இந்தத்
தொலை நோக்கியின்
எதிர்பார்ப்பு!
***
எந்தப் பாதையில்
எந்த இடத்தில்
எந்த நேரத்தில்-
நீ என்று
உனது
நேர அட்டவணை
எனது விரலிடுக்கில்!
***
என் பாதையில்
நீயென்றால்
உண்மையான ஒற்றனாக்கி
அங்கங்கள் ஒத்துழைக்க
கூர்மையாகிவிடும்-
எனது ஒலிவாங்கி!
***
உன்
காலடி ஓசையை-
மூச்சுக்காற்றொலியை
மட்டுமல்ல,
இதயத்துடிப்பையும்
பதிந்து கொள்ளும்!
***
உண்மையைச்
சொல்லப் போனால்,
உன்
விழிகளினால்
நேர்முகமாகப்
பரீட்சிக்கப்பட்டு
புன்னகைகளினால்
நியமனம் வழங்கப்பட்டவன்!
***
ஆம்-இன்று
நான்-ஒரு
உளவாளி...!

**கல்லாறு-சீயோதயன்,**
**இராகமை.**

## தேன் கிண்ணம்

## நிம்மதியைத் தேடி

ஓடி ஓடி
கால்கள் தேய்ந்தன
ஆனாலும்
ஓட வேண்டும்...!
**
கால்களால் முடியாதபோது
கைகளால்
தவழ்ந்து...
உருண்டு...
இன்னும் ஓட்டம் முடியவில்லை!
**
கின்னசில் பதியப்படாத
உலக சாதனை-
வருடக்கணக்கில்
ஓட்டம்...!
**
எங்கேயோ
ஓரிடம் ஒதுங்க
நிம்மதி தேடி
ஓடிக்கொண்டிருக்கிறோம்!
**

**ஜே. ஜஸ்டின்-வவுனியா.**

## இப்படியும் ஆசை

வளிமண்டலத்தில்
விழித்திருந்து
காதல் செய்து,

மேகத்தில்
வலம் வந்து,

வான வில்லில்
படுத்துறங்கி
கலர் கலராய்
கனவு கண்டு,

கானல் நீரை
பருகி,
தாகம் தீர்த்துக்கொண்டு,

உலக சாதனையில்
என்னையும் சேர்க்கும்வரை
சந்திர மண்டலத்தில்
பைத்தியகாரனாய்
ஓடி விளையாட
எனக்கும் ஆசை!

**றிப்காஸ்**
**றிஸ்மி-பொத்துவில்-03.**

## ஓ.... இதுவா?

இது என்ன....
இலை உதிர்பருவமா?
எதற்காக மரங்கள்
மொட்டையாய் நிற்கின்றன?
***
இது என்ன....
மாரி காலமா?
எதற்காக
வானம் கறுப்புடை அணிந்து
துக்கம் கொண்டாடுகின்றது?
***
இது என்ன....
மதியமா?
அதிகாலை தானே!
எதற்காகப் பறவைகள்
பாடமறுத்து
மௌன அஞ்சலி செய்கின்றன?
***
இது என்ன....
முதுமையா?
இனிமையான இளமைக்காலம் தானே!
எதற்காக விம்மி வெடிக்கின்றாய்?
***
என்னைப் போல்
எல்லோருக்கும்
எதிர்காலத்தைப் பற்றிய
கவலை வந்து விட்டதா?
***

**செல்வி ஜெயந்தினி இராசேந்திரம்-**
**வாரிக்குட்டியூர், வவுனியா.**

## யார் இவர்கள்?

ஊகித்துவிட்டு உங்கள் விடைகளைச் சரிபார்க்கச் செல்லுங்கள் பக்கம் 18.


2


படம் 1


4


3



5


6

## நாம் இட்டது......

பொட்டிட்டோம்...!
மட்டில்லா மகிழ்வுடன்
வெற்றியோடு வாவென்று
உடல் கீறி
இரத்தப் பொட்டிட்டோம்!
□•□
பூ இட்டோம்...!
வீழ்ந்து கிடக்கும்
உடலின் மீது
'மீண்டும் ஆயிரம்'
எழுக என்று
பூ இட்டோம்!
□•□
கோஷமிட்டோம்...!
கோடானு கோடி
ஆண்டுகளின் முன்
தோன்றியது நாம் என்று
உலகிற்கு
உரத்து கோஷமிட்டோம்!
□•□
சண்டையிட்டோம்...!
நீயா நானா
பெரியவன் என்று
எமக்குள் நாமே
கத்திகளைச் செருகி
சண்டையிட்டோம்!
□•□
முத்தமிட்டோம்...!
அகமும் புறமும்
'மறத்தமிழன்'
வாழ்வில் கண்டதென்று
வாளுக்கும் காதலிக்கும்
முத்தமிட்டோம்!
□•□
என்ன செய்து
என்ன பலன்...?
இன்று கண்ணீர்
விட்டோம்...!
ஏன் என்றால்...?

**சுபா வரன்-**
**கண்டி.**

## இந்த வாரம் உங்கள் பலன்

(27.07.1997 தொடக்கம் 02.08.1997 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| கர்க்கடகம் | - சூரியன், வெள்ளி. |
| சிம்மம் | - புதன், இராகு. |
| கன்னி | - செவ்வாய். |
| மகரம் | - வியாழன். |
| கும்பம் | - கேது. |
| மீனம் | - சனி. |

★ சந்திரன்- மேடம், இடபம், மிதுனம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார். ★

### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, பொருள் விரயம். | பகல் 11 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, கௌரவம். | மு.ப. 10 மணி |
| புதன்- பயனுள்ள செயல், முன்னேற்றம். | பி.ப. 3 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், காரிய சித்தி. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் நன்மை, அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி, பணவரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நன்மை, மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வீண் முயற்சி, மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப்பயணம், பணச் செலவு. | பகல் 11 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. 10 மணி |
| வெள்ளி- பிரயாண மிகுதி, கௌரவம். | பி.ப. 1 மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- ஆடம்பர வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பகல் 11 மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் மந்தம், பயனற்ற செயல். | மு.ப. 10 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், மன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், தொழில் கஷ்டம். | பி.ப. 3 மணி |
| சனி- காரியானுகூலம், பொருள் வரவு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் பிரச்சனை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, குடும்ப சுகம். | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் நன்மை, பெரியோர் நட்பு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மனக் கவலை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- முயற்சி பலிதம், மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- பணக் கஷ்டம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் விரயம், கௌரவக் குறைவு. | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சித் தடை, மனக் கலக்கம். | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| புதன்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பண வரவு. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் உதவி மனக் கிலேசம். | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், பெரியோர் உதவி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், உறவினர் நன்மை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 2 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, பண வரவு. | மு.ப. 10 மணி |
| வியாழன்- காரியசித்தி, பொருள் நஷ்டம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- வீண் மனஸ்தாபம், அந்நியர் பகை. | பகல் 12 மணி |
| சனி- பெரியோர் நட்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப. 3 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பண வரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன் - பயனுள்ள செயல், கௌரவம். | மு.ப. 10 மணி |
| வியாழன்- இனசன நன்மை, உயர்ந்த நிலை. | மு.ப. 9 மணி |
| வெள்ளி- தொழில் விருத்தி, பணக் கஷ்டம். | பி.ப. 2 மணி |
| சனி- வீண் முயற்சி, அந்நியர் பகை. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |
| திங்கள்- பிரயாண மிகுதி, பணச் செலவு. | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- தொழில் கஷ்டம், அந்நியர் சகவாசம். | பி.ப. 3 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், ஆடம்பர வாழ்க்கை. | பி.ப. 2 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- உறவினர் உதவி, பலவித பேறு. | பி.ப. 3 மணி |
| சனி- தொழில் மந்தம், பணச் செலவு. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, உயர்ந்த நிலை. | பகல் 12 மணி |
| செவ்வாய்- கடன்தொல்லை நீங்கும், சுபகாரிய நன்மை. | பி.ப. 2 மணி |
| புதன்- வீண் விரோதம், தொழில் மந்தம். | பகல் 11 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், கௌரவம். | பி.ப. 3 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் 12 மணி |
| சனி- புதிய முயற்சி, கடன் படல். | மு.ப. 11 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-3

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மன மகிழ்ச்சி, ஆடம்பர செலவு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- தொழில் நன்மை, பண வரவு. | மு.ப. 10 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- வெளியிடப் பயணம், அந்நியர் உதவி. | பகல் 12 மணி |
| வியாழன்- மனக் கலக்கம், இனசன நன்மை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 11 மணி |
| சனி- தொழில் சிறப்பு, அந்நியர் உதவி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. 3 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- முயற்சி பலிதம், உறவினர் நட்பு. | பி.ப. 1 மணி |
| புதன்- பயனுள்ள செயல், பண வரவு. | பகல் 12 மணி |
| வியாழன்- தொழில் கஷ்டம், காரியத் தடை. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- பெரியோர் நட்பு, மன மகிழ்ச்சி. | பி.ப. 3 மணி |
| சனி- வீண் முயற்சி, பணக் கஷ்டம். | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- மனக் கலக்கம், தேகசுகம் பாதிப்பு. | பி.ப. 2 மணி |
| திங்கள்- உயர்ந்த நிலை, மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. 1 மணி |
| புதன்- தொழில் நன்மை, பண வரவு. | பகல் 11 மணி |
| வியாழன்- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. 10 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| சனி- முயற்சி பலிதம், பண வரவு. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3


படிப்பகம்

www.padippakam.com



இச்சை கொண்ட பொருளெலாம்
இழந்துவிட்ட போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே!
-சுப்பிரமணிய பாரதியார்.



## பாப்பா முரசு சிறுகதை

# போலியான அந்தஸ்து

வாழ்க்கையில் பணம் மிக மிக அவசியமான ஒன்று. அதே போல் சமூகத்தில் மதிப்புடன் வாழ செல்வமும், அந்தஸ்தும் அவசியம்.

ஆனாலும் இந்தப் பணமும், அந்தஸ்தும் வாழ்க்கையில் எல்லா விஷயங்களையும் சீர்தூக்கி நிறுத்துமா?

பணத்தின் மூலம் இந்த உலகத்தில் நினைத்ததையெல்லாம் சாதிக்க முடியுமா? பணத்தைக் கொண்டு அணுகும் எல்லாச் செயல்களும் வெற்றியில் முடியுமா?

ஒரு நகரத்தில் மாபெரும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். அவரிடம் செல்வம் கொட்டிக் கிடந்தது. பெரும் மாளிகை, விரல் சொடுக்கினால் ஓடி வர வேலையாட்கள், கணக்கிலடங்கா நிலபுலன்கள், இரும்புப் பெட்டியில் கட்டுக்கட்டாகப் பணம், தங்க, வைர நகைகள் என எல்லாம் தேவைக்கு மேலாக இருந்தன.

அந்தச் செல்வந்தருக்குத் திடீரென மீன் வளர்க்கும் ஆசை பிறந்தது.

ஒரு மிகப்பெரிய செவ்வக வடிவக் கண்ணாடித் தொட்டி ஒன்றினை வாங்கினார். மேலைநாடுகளில் இருந்து அழகுக்காக வளர்க்கப்படும் மீன்களை நூற்றுக் கணக்காக வரவழைத்தார்.

பிறகு அந்தக் கண்ணாடித் தொட்டியை எல்லாரும் பார்ப்பதற்கு வசதியாக மாளிகையின் முன் கூடத்தில் வைத்துத் தண்ணீரை நிரப்பச் சொன்னார்.



வேலையாட்கள் தொட்டியில் தண்ணீரை நிரப்பிக்கொண்டிருந்தனர்.

திடீரென்று செல்வந்தருக்கு ஒரு யோசனை வரவே, வேலையாட்களிடம், "நிறுத்து! நிறுத்து! என் வீட்டில் வளரும் மீன்கள் தண்ணீரில் வளர்வதா? எல்லாரும் தண்ணீரில் தான் மீன்கள் வளர்க்கிறார்கள். என்னிடம் இருக்கும் செல்வத்திற்கு நான் தண்ணீரில் மீன்களை வளர்த்தால் என் அந்தஸ்து என்னாவது? நான் வளர்க்கும் மீன்கள் தண்ணீருக்குப் பதிலாக பாலில் தான் வளர வேண்டும்.

எனவே, தண்ணீருக்குப் பதிலாக தொட்டியில் பாலை நிரப்பி அதற்குள் மீன்களை விடுங்கள்," என்று உத்தரவிட்டார்.

வேலையாட்களும் மறுபேச்சின்றி தொட்டிக்குள் பாலை நிரப்பி அத்தனை மீன்களையும் தொட்டிக்குள் விட்டார்கள்.

அந்தோ பரிதாபம்! சில வினாடிகளில் மீன்கள் அனைத்தும் சுவாசிக்க முடியாமல் இறந்துவிட்டன.

அளவுக்கதிகமாகப் பணம் இருப்பதால் போலியான அந்தஸ்துடன் வாழ நினைத்தால் இப்படித்தான் ஆகும்!

## அதிசயம்-ஆனால் உண்மை!

**பத்து இலட்சம் டொலர் பெறுமதியான புத்தகம்**



டான்டே எழுதிய 'டிவைன்' என்ற நகைச்சுவைப் புத்தகத்தின் முதற்பதிப்பின் விலை பத்து இலட்சம் டொலர். இத்தாலிய சிற்பியான அன்டனியோ மொன்டன்டோவுக்குச் சொந்தமாக இருந்தது. பின்னர் லிகுரியக் கடலில் நேர்ந்த ஒரு கப்பல் விபத்தில் இப்புத்தகம் தொலைந்துவிட்டது. இப்புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் உலகப்புகழ்பெற்ற ஓவியரும், சிற்பியுமான மைக்கல் ஆஞ்சலோ தீட்டிய விளக்கப்படங்கள் இருந்தன.



**பொன் தேரை**

இது எழுப்பும் குரல் ஒலி குளிர்காலத்தில், சுத்தியலால் பாறையில் அடிப்பது போல இருக்கும். வேனில் காலத்தில் இது எழுப்பும் குரல் கண கணவென்று மணியோசை போலவும் கேட்கும்.



**வெற்று நாணயம்**

இது ரஷ்யாவின் ஸமர்கந்த் மாநிலத்தில் முன்னர் புழக்கத்தில் இருந்தது. இதன் இரு பக்கங்களிலும் எதுவும் எழுதப்படவில்லை.



**பார்ட்ரிஜ் இலந்தைப் பழம்**

இது தாவர உலகில் சயாமிய இரட்டையர் போல் இரு பூக்கள் பூக்கும். இந்த இரு பூக்களில் இருந்தும் ஒரு இலந்தைப் பழம்தான் உருவாகும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 4 | 2 | 8 | 5 | 7 | = | 27 |
| 2 | 8 | 5 | 7 | 1 | 4 | = | 27 |
| 4 | 2 | 8 | 5 | 7 | 1 | = | 27 |
| 5 | 7 | 1 | 4 | 2 | 8 | = | 27 |
| 7 | 1 | 4 | 2 | 8 | 5 | = | 27 |
| 8 | 5 | 7 | 1 | 4 | 2 | = | 27 |
| 27 | 27 | 27 | 27 | 27 | 27 | | |

**அகஸ்டஸ்**

ரோமாபுரிச் சக்கரவர்த்தி அகஸ்டஸ (கி.மு.63-கி.பி.14) தான் முதன் முதலாக சுயமாக முகச் சவரம் செய்து கொண்டவர்.



**இந்திரஜால எண்**

1,4,2,8,5,7 இந்த எண் வரிசையமைப்பை மேலும் கீழும் எப்படிக் கூட்டினாலும் 27 தான் கிடைக்கும்.

## வாரம் ஒரு நாடு

**ஸ்பெயின்**

**தலைநகர்** - மட்ரிட்
**பரப்பு** - 5,04,750 சதுரகிலோமீட்டர்
**மக்கள் தொகை** - 3.96 கோடி
**மொழி** - ஸ்பானிஷ், கட்டலான், காலிசியான்
**எழுத்தறிவு** - 97%
**சமயம்** - கிறிஸ்தவம்
**நாணயம்** - பெஸ்டா
**தனி நபர் வருமானம்** - 12,342 டொலர்



**அமைவிடம்:**

ஐரோப்பாக் கண்டத்தில் அமைந்துள்ளது. ஸ்பெயினுக்காகத்தான் கொலம்பஸ் 1492ல் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார்.

**வரலாறு:**

முற்காலத்தில் ஸ்பெயின் பெருங்குடியேற்ற நாடுகளை உடைய ஒரு பேரரசாகத் திகழ்ந்தது. 1588ல் இங்கிலாந்தின் மீது நடத்திய படையெடுப்பு தோல்வியில் முடிந்த பின் ஸ்பெயின் தன் உன்னத நிலையை இழந்தது. 1939 தளபதி ஃபிராங்கோவின் சர்வாதிகாரத்திற்கு உட்பட்டிருந்தது. 1975ல் ஃபிராங்கோவின் இறப்புக்குப் பின்னர் ஸ்பெயின் அரசியல் சட்டமுடைய நாடாயிற்று. பாராளுமன்றம் இரு அவைகள் கொண்டது.

**பொருளாதாரம்:**

இயந்திரப் பொருட்கள், உருக்கு, கப்பல் கட்டுதல் போன்றவை முக்கிய தொழில்கள். தானியங்கள், பழவகைகள் முக்கிய விவசாயப் பொருட்கள் ஆகும்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.08.1997.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 203
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 201

**பரிசுக்குரியவர்:**
செல்வி ஃபாத்திமா ஃபய்ஹா ஃபாரீஸ்,
கேம்பிரிட்ஜ் சர்வதேச பாடசாலை, மாத்தளை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| கே. மோகன்ராஜ், அசோகா வித்தியாலயம், கண்டி. | ஏ.எம். ஸாமிலா, பு/ எருக்கலம்பிட்டி மு.ம.வித்தியாலம், பாலாவி. |
| எச். பசீலா, அல்ஹுதா முஸ்லிம் வித்தியாலயம், ரிதிகம. | ஆர். செந்தூரன், தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| பி. கர்ணன், ஹலன்ஸ் கல்லூரி, ஹட்டன். | எஃப். ஜெபநேசன், பரி.யோவான் தமிழ் மகா வித்தியாலயம், இறக்குவானை. |
| பி. மகேந்திரன், ஸ்ரீ முத்துமாரி அம்மன் த.ம.வித்தியாலயம், கம்பளை. | ஃபாத்திமா நிஷ்மா நஜீம், ஒக்ஸ்ஃபோட் சர்வதேச பாடசாலை, பலாங்கொடை. |
| நிரோஷன் லிங்கம், ரணபிம ரோயல் கல்லூரி, கண்டி. | ஆர். ஆனந்தி ராம், தமிழ் மகா வித்தியாலயம், புசல்லாவ. |

## விடுகதைகளும் விடைகளும்

1. நீண்ட உடம்புக்காரன்: நெடுந்தூரப் பயணக்காரன்.
அவன் யார்?
2. இதயம் போல் துடிப்பான், துடிப்பு நின்றாலும் மறுபடி இயங்குவான்.
அவன் யார்?
3. சூடுபட்டவன், சுருக்கை நீக்குவான்.
அவன் யார்?
4. மழைக்கும், வெய்யிலுக்கும் அஞ்சாமல் நின்ற இடத்தில் நின்று கொண்டிருப்பான்.
அவன் யார்?
5. வந்தாலும் சிரமப்படுத்துவான்; வராமல் விட்டாலும் சிரமப்படுத்துவான்.
அவன் யார்?
6. இறக்கை மடக்காமல், பறக்கும் பறவை.
அது என்ன?
7. சின்ன வீட்டிற்குள் தற்கொலைப்படையினர் பலர்.
அது என்ன?
8. தலையைச் சீவினால் தாளில் நடப்பான்.
அவன் யார்?
9. சின்னப் பையனைத் தலையில் தட்டினால் தான் நிமிர்ந்து நிற்பான்.
அவன் யார்?
10. ஒலி கொடுத்தால், செவி திறக்கும்.
அது என்ன?

**விடைகள்**

1. ரயில் 2. கடிகாரம்
3. இஸ்திரிப்பெட்டி 4. சிலை
5. மழை 6. விமானம்
7. தீப்பெட்டி 8. பென்சில்
9. ஆணி 10. தொலைபேசி

தொகுப்பு: ஏ.அகல்யா.

## வெண்கலம் (BRONZE)

*** வெண்கலம் என்றால் என்ன?**

செம்பு, வெள்ளீயம் ஆகியவற்றின் கலவையே வெண்கலம் ஆகும். இதில் வேறு சில உலோகங்களும் சேர்க்கப்படுகின்றன.

*** வெண்கலம் ஏன் செம்பை விட உயர்வான மதிப்பைப் பெறுகின்றது?**



வெண்கலம் கடினமான உலோகம். அத்துடன் அதிக பளபளப்புத்தன்மை மற்றும் அதிக சிதைவடையாத்தன்மை கொண்டது. ஆனால் செம்பு இதற்கு எதிரான குணங்களைக் கொண்டது. எனவேதான் வெண்கலம், செம்பை விட உயர்வான மதிப்பைப் பெறுகின்றது.

*** மனிதர்கள் வெண்கலத்தை எப்போது பயன்படுத்த ஆரம்பித்தார்கள்?**

கி.மு. 3500 வருடங்களில் வெண்கலம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போதிருந்து மனிதர்கள் வெண்கலத்தைப் பயன்படுத்தத் தொடங்கினார்கள்.

*** வெண்கலத்தைக் கண்டுபிடிக்கும் முன்னர் பொருட்களைச் செய்ய எதனைப் பயன் படுத்தினார்கள்?**

வெண்கலத்தைக் கண்டு பிடிக்கும் முன்னர் மனிதர்கள் செம்பைக் கொண்டு பொருட்களைச் செய்தனர்.

*** வெண்கல காலம் எப்போது முடிவுக்கு வந்தது?**

தாய்லாந்து நாட்டில் கி.மு. 1500ம் ஆண்டில் இரும்பு கண்டுபிடிக்கப்பட்டது. இரும்பை மக்கள் பயன்படுத்த ஆரம்பித்தவுடன் வெண்கலத்தைப் பயன்படுத்துவது குறைந்தது. கி.மு. 1000ம் ஆண்டில் உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் வெண்கலத்திற்குப் பதிலாக இரும்பைப் பயன்படுத்த ஆரம்பித்துவிட்டனர்.

## கிரீட கொக்கு

பறக்கும் சக்தியுள்ள பறவைகளில் உயரமானவை கொக்குகள்தான். தற்போது 15 வகையான கொக்குகளே உலகில் உள்ளன. கொக்குகள் அதிகபட்சம் 30 ஆயிரம் அடி உயரத்தில் பறக்கவல்லவை. கொக்கு இனம் 6 கோடி ஆண்டுகளாக இருந்து வருவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

சந்தோஷம் வந்துவிட்டால் கொக்குகள் சோடியாகவும், கூட்டமாகவும் நடனம் ஆடும். வயதான கொக்குகள் நடனமாடாது.

ஆபிரிக்காவின் மேற்குப் பகுதியில் 'கிரீட கொக்கு' என்னும் ஒருவகைக் கொக்குகள் காணப்படுகின்றன. இதன் தலையில் கிரீட வடிவ இறகுகள் இருப்பதால் இதற்கு இந்தப் பெயர் வந்தது.

மற்றக் கொக்குகளைப் போல இதன் அலகுகள் நீளமாக இருப்பதில்லை. 2-3 அங்குல நீளமே இருக்கும்.

சிறு பூச்சிகள், புழுக்கள், விதைகள் தான் இவற்றின் முக்கிய உணவு. கொக்குகள் பெரும்பாலும் புதர்ப்பகுதிகளில்தான் கூடுகட்டி முட்டையிடும். ஆனால் கிரீட கொக்குகள் மரத்தில் கூடு கட்டி முட்டையிடுகின்றன.

கொக்குகளின் மூச்சுக்குழல் அவற்றின் மார்புப் பகுதியில் கயிறுபோல் சுற்றிக் கிடக்கும். ஆனால் கிரீடக் கொக்குகளுக்கு அப்படி இருப்பதில்லை.





படிப்பகம்

www.padippakam.com




# உடைந்த இரவு

க்ரைம் சக்கரவர்த்தி
ராஜேஸ்குமார்

## இதுவரை

தினேஷ்–மைத்ரேயி தம்பதிக்கு சிறந்த தம்பதி என்று விருது கிடைக்க இருக்கிறது. அத்தகவலை மைத்ரேயிடம் மகிழ்ச்சியுடன் சொல்கிறான் தினேஷ். மைத்ரேயிக்கும் பாஸ்கர் என்ற இளைஞனுக்கும் இடையே இரகசியத் தொடர்பு இருக்கிறது. தினேஷை கொல்ல பாஸ்கருடன் திட்டம் போடுகிறாள் மைத்ரேயி. அப்போது ஒரு ஃபோன் வருகிறது. ஃபோனில் ஒரு பெண்குரல் மைத்ரேயி– பாஸ்கர் தொடர்பை தெரிந்து வைத்து மிரட்டுகிறது. ஃபோனில் மிரட்டுவது யார் என்று தெரியாமல் மைத்ரேயியும், பாஸ்கரும் குழம்புகின்றனர்.

வேலை விடயமாக தினேஷ் டெல்லி போய்விட மீண்டும் மீண்டும் அதே பெண்குரல் பாஸ்கர் தொடர்பை மறந்து விடும்படி ஃபோனில் மிரட்டுகிறது. பாஸ்கரின் திட்டப்படி அந்தப் பெண் யாரென ஆராய தினேஷின் ஆபீஸ் செல்கிறாள் மைத்ரேயி.கம்பனிக்கு விசுவாசமாக நடக்கிற 11 பெண் ஊழியர்களின் பெயர் விபரங்களை எடுத்துக் கொண்டு வீடு திரும்புகிறாள். படுக்கையறையில் இரவு பாஸ்கருடன் இருக்கிறாள் மைத்ரேயி. அப்போது தொலைபேசி அழைக்கிறது. அதே பெண்– 24 மணி நேரத்தில் பாஸ்கர் தொடர்பை விடும்படி மிரட்டுகிறாள்.

பாஸ்கர், மைத்ரேயி குழம்புகின்றனர். அப்போது கேட்டுக்கு வெளியே ஒரு கார் வந்து நின்றிருந்தது.

## இனி...

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே ஹெட்லைட் வெளிச்சத்தோடு நிற்கும் காரைப் பார்த்ததும் மைத்ரேயியின் தண்டுவடம் உடனே குளிர்ந்து போயிற்று.



"இந்த நேரத்துக்கு யார்?"

"அதுவும் காரில்"

முதுகுக்குப் பின்னால் வந்து நின்ற பாஸ்கர் கலவரக் குரலில் கேட்டான்.

"மைத்ரேயி! யாரது....?"

"தெரியலையே.."

கார் ஹார்ன் மறுபடியும் பிளிறியது.

"போய்ப் பார்.."

"நீங்க...?"

"வழக்கம் போல நான் ஸ்டோர் ரூமுக்குள்ளே போய் ஒளிஞ்சுக்கிறேன். நீ வந்திருக்கிறது யார்னு பார்த்து ஹேண்டில் பண்ணிட்டு வா."

பாஸ்கர் பின் வாக்கில் போக மைத்ரேயி காம்பௌண்ட் கேட்டுக்கான சாவியை எடுத்துக் கொண்டு வாசல் கதவைத் திறந்தபடி வெளியே வந்தாள். போர்டிகோ டியூப்லைட்டுக்கு மின்சாரத்தைக் கொடுத்துவிட்டு நடந்து காம்பௌண்ட் கேட்டுக்கு வந்தாள்.

கேட்டுக்கு வெளியே நின்றிருந்தது ஒரு டாக்ஸி.

'டாக்ஸியில் வந்திருப்பது யார்?'

காம்பௌண்ட் கேட்டின் பூட்டுக்கு சாவியைக் கொடுப்பதற்கு முன்னால் பலமாய் குரல் கொடுத்தாள்.

"யாரு...?"

டாக்ஸியின் பின்பக்கக் கதவைத் திறந்து கொண்டு நரைத்த தலை எட்டிப் பார்த்தது.

"அம்மா மைத்ரேயி.... நான்தாம்மா வையாபுரி! கதவைத் திறம்மா...!"

வையாபுரி மாமா, கணவன் தினேஷுக்கு தாய்மாமன். மூன்று மாதத்துக்கொருதடவை சென்னைக்கு இப்படி திடீர் விஜயம் செய்வதுண்டு.

மைத்ரேயி உள்ளுக்குள் சலித்துக் கொண்டாள். 'இப்போது தானா இந்த மனுஷன் வரவேண்டும்?'

'வருகிற மனுஷன் உடனடியாய் கிளம்ப மாட்டாரே; ஒரு நாளாவது இருந்துட்டுத்தான் போவார்...?'

யோசனைகளோடு காம்பௌண்ட் கேட்டின் பூட்டுக்கு விடுதலை கொடுக்க டாக்ஸி உள்ளே வந்து நின்றது. டாக்ஸியிலிருந்து வையாபுரியும், அவருடைய மனைவி ஜெயம்மாவும் இறங்கினார்கள். டிரைவர் டிக்கியைத் திறந்து ஒரு பெரிய சூட்கேஸை எடுத்து கீழே வைத்து விட்டு நிற்க வையாபுரி பணத்தை எடுத்துக் கொடுத்தார்.

டாக்ஸி ரிவர்ஸில் போக வையாபுரி மைத்ரேயியிடம் ஒரு பெரிய புன்னகையோடு திரும்பினார்.

"நாளைக்கு இங்கே ஒரு கல்யாணம். வேண்டப்பட்ட சிநேகிதன் ஒருத்தன் பொண்ணுக்கு கல்யாணம் பண்றான். கண்டிப்பா வரணும்னு கம்பெல் பண்ணினான். தட்ட முடியலை...! கிளம்பற நேரத்துல இவளும் வர்றேன்னு சொல்லிட்டா.... மத்தியானம் ரெண்டு மணி பஸ்ஸுக்கு புறப்பட்டோம். எட்டு மணிக்கெல்லாம் மெட்ராஸ் வந்திருக்க வேண்டியவன் ரெண்டு மணி நேரம் லேட்." என்று சொல்லிக் கொண்டே பெட்டியைத் தூக்கிக் கொண்டவர் நெற்றியைச் சுருக்கியபடி கேட்டார்,

"என்னம்மா நீ வந்து கேட்டைத் தெறக்கிறே...? வாட்ச் மேன் என்ன ஆனான்?"

"வாட்ச்மேன் இன்னிக்கு லீவு."

"அப்படியா! நாளைக்கு வந்துடுவான் இல்லியா?"

"ம் வந்துடுவான்."

போர்டிகோ படியேறும்போது வையாபுரியின் மனைவி ஜெயம்மா கேட்டாள்,

"தினேஷ்! தூங்கிட்டானா...?"

"அவர் வீட்ல இல்லை...."

"கம்பெனியிலிருந்து இன்னும் வரலையா...?"

"அவர் ஊருக்கு போயிருக்கார்..."

"எந்த ஊருக்கு...?"

"டெல்லிக்கு..."

ஹாலுக்கு வந்தார்கள்.

"அப்படின்னா வீட்ல நீ மட்டும்தான் இருக்கியா?"

"ஆமா.."

"வேலைக்காரி..?"

"ராத்திரி நேரத்துல அவ வீட்ல தங்க மாட்டா."

சோபாவுக்கு சாய்ந்தார்கள்.

"பஸ்ஸுக்காரன் இன்னிக்கு கொன்னுட்டான்."

"ஏதாவது சாப்ட்றீங்களா....?"

"எதுவும் வேண்டாம்மா... பஸ்ஸை விட்டு இறங்கினதுமே சாப்பிட்டுத்தான் வர்றோம்... படுத்தா போதும்னு இருக்கு..."

"மாடியில் ரூம் இருக்கு... போய் படுத்துக்கோங்கோ.... காலையில பேசிக்கலாம்..." மைத்ரேயி சொன்னதும் வையாபுரி எழுந்தார்.

"தினேஷ் எப்ப டில்லிக்குப் போனான்?"

"இன்னிக்கு மத்தியானம்...."

"கம்பெனி விஷயமா போயிருக்கானா...?"

"ஆமா...."

"வர்றதுக்கு எப்படியும் ரெண்டுநாள் ஆயிடுமில்ல?"

"ம்... ஆயிடும்..."

"குடிக்க தண்ணி மாடி ரூம்ல இருக்காம்மா...?"

"இருக்கு...."

இருவரும் மாடிப்படிகளில் ஏறி மாடியறைக்குப் போக மைத்ரேயி ஸ்டோர் ரூமுக்கு வேக நடையில் போய் வெளியே நின்று குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்....!"

உள்ளே மௌனம்.

மறுபடியும் குரல் கொடுத்தாள்.

"பாஸ்கர்...."

பதில் வராமல் போகவே மைத்ரேயி உள்ளே எட்டிப் பார்த்தாள்.

அறையில் பாஸ்கர் இல்லை.

'எங்கே போனார்....?'

'வேறு ஏதாவது அறைக்குள் நுழைந்து கொண்டு விட்டாரோ...?'

பரபரவென்று நடந்து போய் பக்கத்து அறைகளுக்குள் எட்டிப் பார்த்தாள்; பாஸ்கரைக் காணோம்.

பங்களாவின் பின் பக்கத்துக்குப் போனாள்.

இருட்டில் வாழைமரங்கள் மண்டிய பகுதியில் பாஸ்கரன் தலையைப் பிடித்தபடி சாய்ந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

தவிப்போடு பக்கத்தில் ஓடினாள் மைத்ரேயி.

"பா... பாஸ்கர்.... என்னாச்சு.. உங்களுக்கு? ஏன் இப்படி வந்து உட்கார்ந்திருக்கீங்க....?"

"மை....த்....ரே...யி" தன் தலையிலிருந்து கையை எடுத்தான் பாஸ்கர். உள்ளங்கையில் ரத்தம். மைத்ரேயி திடுக்கிட்டாள்.

"பாஸ்கர்...! தலையில என்ன காயம்....?"

பாஸ்கர் வலியைப் பொறுத்துக் கொண்டு பேசினான்.

"நீ... காம்பௌண்ட் கேட்டை திறக்க போனபோது நான் ஸ்டோர் ரூம்ல ஒளிஞ்சுக்கிறதுக்காக உள்ளே வந்தேன்... அப்போ...."

"அப்போ...?"

"பங்களாவோட பின்பக்க ஜன்னல் கிட்டே யாரோ நின்னுட்டிருந்த மாதிரி இருந்தது."

"யா...யாரு...?"

"தெரியலை..."

"ஆணா.... பெண்ணா..?"

"அதுவும் தெரியலை... அந்த உருவத்தை ஒரு வினாடிதான் பார்த்தேன். சட்டுன்னு மறைஞ்சுட்டது. அது யார்னு பார்க்கிறதுக்காக பின் பக்கம் வந்தேன்.... உருவம் கண்ணுக்கு சிக்கலை. மெல்ல நடந்து போய் சுற்றும் முற்றும் பார்த்தேன். திடும்னு தலையில ஒரு அடி.. கண்களை இருட்டிக்கிட்டு வந்து அப்படியே உட்கார்ந்துட்டேன்."

"அ... அ.... அந்த.... உ.... உருவம்.."

"எந்தப் பக்கம் போச்சுன்னு தெரியலை. ஒரு வேளை சுவரேறி குதிச்சு போயிருக்கலாம்...."

"ரத்தம் இப்படி வழியுதே...! வாங்க... ஃபர்ஸ்ட் எய்ட் பண்ணி விடறேன்."

பாஸ்கர் கர்சிப்பால் ரத்த காயத்தை அழுத்திப் பிடித்துக் கொண்டே மெல்லிய குரலில் கேட்டான்,

"காரில் வந்தது யாரு மைத்ரேயி?"

"என் கணவரோட தாய்மாமன் வையாபுரி, தன் பெண்டாட்டியோட வந்திருக்கார். இங்கே யார்க்கோ கல்யாணமாம். நாளைக்கு வரைக்கும் இருப்பார் போலிருக்கு..."

"இப்போ அவங்க எங்கே....?"

"மாடிக்கு தூங்க போயிட்டாங்க. நீங்க உள்ளே வாங்க பாஸ்கர். காயத்துக்கு ஃபர்ஸ்ட் எய்ட் பண்ணி விடறேன்."

"அவங்க பார்த்துட போறாங்க..."

"அவங்க மாடிக்கு போயாச்சு.... பாஸ்கர். நீங்க உள்ளே வாங்க."

பாஸ்கர் எழுந்தான்.

"நீ முன்னாடி உள்ளே போ.... மைத்ரேயி... நான் பின்னாடி வர்றேன். நடக்கிற சம்பவங்களையெல்லாம் பார்த்தா பயமாயிருக்கு. ஒரு பொண்ணு ஃபோன்ல மிரட்டறா. பங்களாவுக்குப் பின்னாடி யாரோ வந்துட்டு போறாங்க...."

"பின்னாடி பக்கம் வந்தது திருடனாக் கூட இருக்கலாம் இல்லையா? மனசைப் போட்டு குழப்பிக்காம உள்ளே வாங்க பாஸ்கர்."

"உனக்கு இருக்கிற தைரியம் எனக்கு இல்லே மைத்ரேயி."

"பிரச்னைகளை தைரியமா ஃபேஸ் பண்ணினா அது பிரச்னைகளே இல்லை..."

இருவரும் உள்ளே வந்தார்கள்.

படுக்கையறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தி தாழிட்டுக் கொண்டார்கள்.

மைத்ரேயி அலமாரியில் இருந்த ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸை எடுத்து வைத்துக்கொண்டு பாஸ்கரின் தலைக் காயத்துக்கான முதலுதவியை ஆரம்பித்தாள்.

"காயம் அவ்வளவு பெரிதில்லை. ரத்தம் தான் அதிகமா போயிருக்கு...."

டெட்டால் நீரில் காயத்தைச் சுத்தப்படுத்தி பஞ்சில் டிங்க்சர் அயோடினை ஊற்றி காயத்தின் மேல் வைத்து பாண்டேஜ் துணியால் கட்டு ஒன்றைப் போட்டாள்.

பாஸ்கர் முனகினான்.

"மைத்ரேயி"

"ம்...."

"இங்கே இனி நான் தங்கறது சரியில்லை. அது உனக்கும் எனக்கும் ஆபத்தா முடியலாம். மொதல்ல உனக்கு டெலிஃபோன் பண்ணி மிரட்டிய அந்தப் பொண்ணு யார்ன்னு தெரிஞ்சுட்டா... அவளோட கதையை முடிக்கிறதுக்கு ஏற்பாடு பண்ணிடலாம்..."

பாஸ்கர் ஏதோ பேச வாயைத் திறந்த விநாடி...

அறைக்கு வெளியே நடைச்சத்தம் கேட்டது.

தொடர்ந்து....

கதவு தட்டப்படும் சத்தம்

"டொக்... டொக்..."

'........'

(தொடர்ந்து வரும்)



## பேனா நண்பர் அரங்கம்








பெயர்: எம். ரஸீத்,
வயது: 23
முகவரி: அக்கரவேலி, அங்குனாவில, முந்தல்.
பொழுதுபோக்கு: கிரிக்கெட், பேனா நட்பு.

பெயர்: எஸ். உதயகுமார்,
வயது: 24
முகவரி: அட்டப்பள்ளம், நிந்தவூர்-10.
பொழுதுபோக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: எம். அன்ஸார்,
வயது: 30
முகவரி: 98/1,பல்லேவல, கலேவல.
பொழுதுபோக்கு: வானொலி, ரீ.வி.

பெயர்: எம். பாண்டியன் பாரதி,
வயது: 39
முகவரி: NO.7, VERASAMY ROAD, SINGAPORE-207315.
பொழுதுபோக்கு: தொலைக்காட்சி.

பெயர்: வி. யோகலக்ஷ்மி,
வயது: 17
முகவரி: கெஸ்கீப்பன் டிவிஷன், மஸ்கெலியா.
பொழுது போக்கு: வானொலி, கதைப்புத்தகம்.

பெயர்: எம். பஸ்னி.
வயது: 22
முகவரி: 82, குருந்து கஹ எல, அக்குறணை.
பொழுது போக்கு: பத்திரிகை, நாவல் படித்தல்.

பெயர்: ஏ. றியால்டீன்,
வயது: 28
முகவரி: P.O.BOX-1432 CODE-92365, AL FIRDOUS, KUWAIT.
பொழுதுபோக்கு: நண்பர்தொடர்பு.

பெயர்: எம். ரபாய்தீன்,
வயது: 22
முகவரி: 10, வவுனியா வீதி, நிக்கவெவ, ஹொரவப்பொத்தான.
பொழுதுபோக்கு: வானொலி, நண்பர் தொடர்பு.

பெயர்: எஸ். யோகராஜ்,
வயது: 22
முகவரி: 164, கோல்புறாக், அக்கரப்பத்தன.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: ரி. ரமேஸ்குமார்,
வயது: 25
முகவரி: புனித மரியாள் கோயிலடி, பாலையூற்று, திருகோணமலை.
பொழுது போக்கு: ரீ.வி., உதைப்பந்து.

பெயர்: ஆர். சந்திரன்,
வயது: 24
முகவரி: 35, LARKFIELD AVE, KENTON, HARROW, MIDDX-HA3 8NQ, U.K.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எம். நிஸார்,
வயது: 22
முகவரி: 240 ஏ/3, கண்டி வீதி, கம்பளை.
பொழுது போக்கு: பேனா நட்பு.


படிப்பகம்

www.padippakam.com

**இதுவரை** சுமதி அமைதியான பெண். தமிழாசிரியரான தந்தை ஒரு நண்பர் போல அவளுடன் பரிவாக, இயல்பாக பாசம் காட்டினார். சுமதியை கணேசனுக்கு மணம் செய்து வைத்தார். சுமதி ஓர் அரசாங்க அதிகாரி. கணேசன் தமிழ்த் துறைப் பேராசிரியர். கணேசனுக்கு தாழ்வு மனப்பான்மை. சுமதியின் வேலை மீது, அழகு மீது, அறிவு மீது பொறாமை. அதனால் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஓரிரவு சுமதியை திர்வாணமாக அடித்து விரட்டுகிறான். பக்கத்து வீட்டு பங்கஜம் மாமியின் ஆடையணிந்து, பெரியவரின் உதவியால் ஸ்டேஷன் வந்துசேர்கிறாள்.

கணேஷனும் தேடிவருகிறான். கூட்ஸ் வேனுக்குள் நுழைந்து பதுங்கும் சுமதி அவன் சென்றதும், ரயிலில் ஏறிப்போகிறாள்.

உயிர்த்தோழி கல்பனாவிடம் வந்துசேர்கிறாள். பிறிட்டு அழுகிறாள். சுமதியை அமைதிப்படுத்துகிறாள் கல்பனா. கடைக்குச் சென்று புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்கிறாள்.

சுமதி பழையதை நினைக்கிறாள்.

கணேசனுக்கும் தனக்குமிடையே காதல் மலர்ந்த காலத்தை நினைத்துப் பார்க்கிறாள். **இனி...**

# கனவு மெய்ப்பட வேண்டும்

## அத்தியாயம் 21

**பிரபஞ்சன்**



அவன் தலை நிமிர்ந்து அவளைப் பார்த்தான்.

"எதற்கு வீண் செலவு செய்கிறாள் என்பதுதான் என் கோபம்.... அதற்குப் போய் பொலிஸ், கீலீஸ் எதற்கு?" என்றான் அவன் சாந்தமாய். இந்த சாந்தம் இயலாமை, அச்சம் காரணமாய் ஏற்பட்ட பொய்ச் சாந்தம்.

"எது வீண் செலவு? ஒரு நாளைக்குப் பத்துப் பாக்கெட் சிகரெட் வாங்கிப் பணத்தைச் செலவிடுகிறார்களா சுமதி? அல்லது தேவை இல்லாத பொருள்களை ஆடம்பரத்துக்கு வாங்கி வீட்டில் அடுக்கி வைக்கிறார்களா? என்ன வீண் செலவு? ஒரு மனுஷி புடவை வாங்கிக் கட்டிக் கொள்வது, புத்தகம் வாங்கிப் படிப்பதும் வீண் செலவு என்கிறீர்களே. நீங்கள் ஒரு பேராசிரியர் என்று நினைக்கவே எனக்குச் சங்கடமாகவும், அவமானமாகவும் இருக்கிறது. மற்ற எத்தொழிலில் இருப்பவர்களைக் காட்டிலும், போதிக்கிற தொழிலில் இருக்கிறவர்கள் அதிகம் படிக்க வேண்டும். நாள்தோறும் அறிவும், சிந்தனையும் வளர்ந்து கொண்டும் மாறிக் கொண்டும் இருக்கின்றன. அந்த வளர்ச்சியை அறிந்து, மாணவர்களுக்குச் சொல்வதை ஒரு கடமையாகக் கொள்ள வேண்டாமா? ஓர் ஆசிரியர் சும்மா ஒரு கௌரவத்துக்காக 'ஹிந்து' வாங்குகிறீர்கள். அதையாவது நீங்கள் படிக்கிறீர்களா? எனக்குப் பல பேராசிரியர்களைத் தெரியும். எம்.ஏ. எழுதுவதற்காகவும், அதற்கும் பிறகு எம்.பில், அல்லது டாக்டர் ஆய்வுக்கு எழுதுவதற்காகப் படித்த பாடப் புத்தகங்களுக்குப்பிறகு, புதிதாக வெளிவரும் எந்தப் புத்தகத்தையும் அவர்கள் படித்து நான் பார்த்ததில்லை. என்னைக் கேட்டால், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் தாங்கள் வாங்கும் சம்பளத்தில் ஐந்தில் ஒரு பங்கு புத்தகம் வாங்கிச் செலவிட வேண்டும் என்பேன். ஆனால் யார் இதைச்செய்கிறார்கள். மண் வெட்டிக் கூலி தின்னும் வாழ்க்கையைப் போலவே, உபாத்யாயர் வேலையும் ஆகிவிட்டது. இதைச் சொல்ல எனக்கென்ன யோக்யதை என்பீர்கள். நான் வாங்கும் சம்பளத்தில், பாதிக்குமேல், புத்தகம் வாங்கவும் ஏழை மாணவர்களுக்கு உதவவும் செலவிடுகிறேன். என் கணவர், என் வழிகளில், துணை இருப்பாரே இல்லாமல், என்னிடம் எந்தக் காலத்திலும் கணக்குக் கேட்டதில்லை. தவிரவும், சுமதி உங்களிடமா காசு கேட்கிறார்? அவர் சம்பாதிக்கிறார். அவர் செலவிடுகிறார். அதில் கணக்கு கேட்க உங்களுக்கு என்ன வேலை? உங்கள் வருவாயையும் உங்கள் மனைவி சம்பாத்தியத்தையும் ஒரு பொது இடத்தில் வைத்துவிட வேண்டும். உட்கார்ந்து பேசி, சேமிப்பு, வீட்டுச் செலவு போன்றவற்றுககு இவ்வளவு என்று ஒதுக்கி வைத்துவிட்டு, மீதியை நீங்கள் இரண்டு பேரும் உங்கள் தேவைக்கும், விருப்பத்துக்கும் ஏற்பச் செலவு செய்யவேண்டும். அதுதான் ஒரு நாகரிகமான குடும்பத்தின் இலட்சியம். இன்னும் ஒரு பச்சையான உண்மையைச் சொல்கிறேன். உங்களை விடவும் அதிகமாகச் சம்பாதிக்கிறார் சுமதி. ஆனால் அவர் செலவழிக்க உரிமை இல்லை என்று நீங்கள் சொல்கிறீர்கள்; உங்களுக்கு வெட்கமாய் இல்லை?"

சரமாரியாகக் கன்னத்தில் அடி வாங்கியவனைப் போலத் திடுக்கிட்டு விழித்தான் கணேசன்.

"ஆம்பிளை தானே குடும்பத்தின் தலைவன். அவன் ஒப்புதல் பெற்றுச் செலவு செய்வதுதானே முறை?"

"இது எந்த நாட்டுச் சட்டம்? யார் போட்ட சட்டம்? குடும்பத்தில் ஆணும் பெண்ணும் சரிநிகர்சமானம் தானே? ஆண் என்பதால் உங்களுக்கு என்ன கொம்பா முளைத்திருக்கிறது? ஆப்டர் ஆல், நீங்கள் ஆண்தானே கணேசன்!

உங்களை எதற்கு அவள் உத்தரவு கேட்டுச் செலவு செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?"

"இப்படிச் சொன்னால்? உங்களைப் போன்ற ஒன்றிரண்டு பேர் இருப்பதால்தான், நம் நாட்டுக் கலாசாரமே பாழாகிப் போய்விட்டது. பல்லாயிரம் ஆண்டுக் காலமாக இருந்து வரும் ஒழுக்கங்களைச் சிதைக்கிறீர்கள் நீங்கள்," என்று கோபமாக மொழிந்தான் அவன்.

அவள் சிரித்தாள்.

"எங்களை மாதிரி ஒன்றிரண்டு பேர் இருப்பதால்தான் பெண்குலம் இன்னும் சுத்தமாக முழுகிப் போகாமல் இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டு காலமாக இருந்து வரும் கசடுகளை கழுவிக் களைந்து கொண்டிருப்பதே எங்கள் தொழில். அதற்காக எங்களைப் போன்றவர்களை உங்களைப் போன்ற ஆண்கள் எந்தக் காலங்களிலும் இழிவாகத்தானே பேசி வந்திருக்கிறீர்கள். இன்னொரு பெண்ணை இழிவாகப் பேசும் ஒருவனின் ஒழுக்கம் குறித்தே நான் சந்தேகப்படுகிறேன்."

கணேசன் எழுந்து உள்ளே போனான்.

சுமதி மெல்ல வந்து அவள் அருகில் அமர்ந்தாள்.

"நீங்கள் போன பிறகு என்னை அவர் அடித்துத் துவைப்பார்."

"அவர் அடித்தால் நீங்கள் திருப்பி அடியுங்களேன்."

"ஐயோ. அது எப்படி முடியும்?"

"ஏன் முடியாது? அவருக்கு உங்களை அடிக்க முடிகிறது. அதே போலத் திருப்பி நீங்கள் அவரை அடிக்க என்ன தடை? அவர் தமிழில் பேசினால், நீங்கள் தமிழில் பேசுங்கள். ஆங்கிலத்தில் பேசினால் ஆங்கிலத்தில் பேசுங்கள். கையால் பேசினால் நீங்கள் கையால் பேசுவதுதானே முறை? பெண்கள் இன்னும் நூறு ஆண்டுகளுக்கு, அடிக்கும் கணவனைத் திருப்பி அடிக்கலாம் என்பதே என் எண்ணம். அதற்கேற்ற உடல் பலத்தை அவர்கள் பெறவேண்டும்.

தாங்க முடியாத நிலை வந்தால், அவனை விட்டு வெளியேறுங்கள். தைரியமாகக் கூண்டில் ஏறி, இந்தப் பேடி அடித்துத் துன்புறுத்துகிறான் என்று நீதிபதியிடம் சொல்லுங்கள். பதிலுக்குக் கணவன்மார்கள் பெண்கள் மீது எப்படிப் பழி சொல்வார்கள் தெரியுமா? நீங்கள் ஒரு ஒழுக்கம் கெட்டவர் என்றும் கூட அவர் சொல்வார். நிரூபிக்கவும் முயல்வார். அதற்கும் நம் பதில் என்னவாக இருக்கவேண்டும் தெரியுமா? 'என் கணவருக்கு ஆண்மை இல்லை!' என்பதாக இருக்க வேண்டும்.

"ஐயோ" என்றபடி தலையைக் கவிழ்ந்து கொண்டாள் சுமதி.

"ஏன்?"

"இது அசிங்கம் இல்லையா?"

"நம் பெண்கள் வீழ்ந்து போனது, இந்தக் குணத்தால்தான். எனக்கு என்னமோ 'பகைவனுக் கருள்வாய் நன் நெஞ்சே' என்பதில் நம்பிக்கை இல்லை. பகைவனுக்குக் கூட என்னால் அருள முடியும். கொடுமை செய்யும் கணவனை நான் அருள முடியாது. ஏன் நான் அதைச் செய்ய வேண்டும்? என் கழுத்தில் தாலி கட்டிவிட்டான் என்பதினாலேயே, அவன் எனக்குத் தண்டனை தர வேண்டுமா? சுமதி, நான் இன்று ஊருக்குத் திரும்புகிறேன். நீங்கள் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். நல்ல வேளை, நீங்கள் படித்து இருக்கிறீர்கள்! நல்ல உத்தியோகத்திலும் இருக்கிறீர்கள். அவரிடம் தெளிவாகச் சொல்லிவிடுங்கள். மீண்டும் உங்கள் மேல் கை வைத்தால் 'நான் வெளியேறி விடுவேன்' என்று சொல்லுங்கள். கணவன் இல்லாமல் ஒருத்தி வாழ முடியாதா என்ன? பெண்கள் ஏன் அப்படி நினைக்கிறார்கள்? அவர்கள் சுயமாக வாழ, பணி செய்ய, தாங்களே தங்கள் வாழ்க்கையை நடத்த முடியும் என்று கற்றுக் கொடுக்கப்படவில்லை. ஆணைச் சார்ந்தே பெண் இருக்க முடியும் என்றே அவர்கள் கற்றுக் கொடுக்கப் பட்டுள்ளார்கள். அதுதான் கோளாறுகளுக்கே அடிப்படைக் காரணம்!"

ஜெய்சி திரும்பிப் போய் மூன்று நாட்களாயின.

விபரீதமாக எதுவும் நடந்துவிடவில்லை. சுமதிக்குக் கூட கணேசன் திருந்தி விட்டானோ என்கிற எண்ணம் ஏற்பட்டது. ஒரு சிறு மாறுதலை அவள் அவனிடம் பார்க்க முடிந்தது. எப்போதும் மாலை ஆறு மணிக்கெல்லாம் சரியாக வீடு திரும்புகிறவன் இரவு பத்து மணிக்கும் பனிரெண்டு மணிக்கும் தான் வீடு திரும்பினான். எங்கோ சாப்பிட்டு விட்டு வீடு திரும்பினான். அமைதியாகப் படுத்துத் தூங்கினான். அவளுக்கு ஒரு வகையில் அது ஆறுதலாகக்கூட இருந்தது. 'நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன; மேல் விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி' என்றே அவள் நினைத்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டாள். இரவுகளில் நீண்ட நேரம் படித்தாள். அலுவலக பைல்களைப் படித்தாள். அதன் மீது குறிப்புக்கள் எழுதினாள்.

நர்ஸ் வசந்தியைக்கூட ஒரு மாலை சென்று பார்த்துவந்தாள். அவளையும் அழைத்துக்கொண்டு கடைகளுக்குப் போனாள். கழுத்துமணி, மணிகளால் ஆன ஜிமிக்கி ஆகியவைகளை வாங்கினாள்.

அதிகாரி நடேசன் ஒருநாள் டின்னருக்கு அழைத்திருந்தார் சுமதியை. அரசின் முக்கிய பெரிய பல் சக்கரங்களில் ஒன்றான நடேசனைப் பகைத்துக் கொள்வது அவ்வளவு உசிதமாகப்படவில்லை அவளுக்கு. ஆகவே சென்றிருந்தாள்.

நடேசனுக்கு மனைவியும் இரண்டு வளர்ந்த பெண்களும், பிள்ளையும் இருந்தார்கள்.

மொட்டை மாடியில் நாற்காலியும், டீபாயும் போட்டு, மது பாட்டில் ஒன்றைக் கொண்டு வந்து வைத்துவிட்டுத் தானும் அமர்ந்தாள் நடேசனின் மனைவி கீதா. மூன்று கண்ணாடி டம்ளர்களைக் கொண்டு வந்து வைத்தாள்.

மூன்றாவது டம்ளரில் விஸ்கியை ஊற்றப் போன கீதாவைத் தடுத்தாள் சுமதி.

"ஏன்?"

"எனக்குப் பழக்கமில்லை. சாரி."

"ஆச்சரியமாய் இருக்கு. ஒரு பெரிய அதிகாரி மது அருந்தாமல் இருப்பது."

"அதிகாரிகளுக்கு அது இலக்கணமா என்ன? நான் குடிப்பதைக் கீழானது என்று சொல்ல மாட்டேன். எனக்குப் பிடிப்பதில்லை அவ்வளவுதான்."

அவர்கள் அருந்துகிறார்கள். சுமதி ஆரஞ்சுச் சாறைப் பருகிக் கொண்டிருந்தாள்.

கீதா, "மன்னியுங்கள். நான் போகிறேன்" என்று போன பிறகு, நடேசன் சுமதியைப் பார்த்துக் கேட்டார்,

"சுமதி உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் பெரும் பிரச்சனை என்று கேள்விப்பட்டேனே...."

"அப்படி ஒன்றும் பெரிதாக இல்லை சார்,"

"என்னிடம் மறைக்காதீர்கள். எனக்கு எல்லாம் தெரியும்."

"யார் சொன்னார்?"

"நம் இலாகா முழுவதும் இதுதானே பேச்சு....."

அவள் மௌனமானாள். அவர் தொடர்ந்தார்,

"பிரச்சனை முற்றியது என்றால் என்னிடம் வந்து விடலாம்."

"ரொம்ப நன்றி சார்."

அவர் தயக்கத்துடன் சொன்னார்,

"நான் சொல்வது புரிகிறதா? நீங்கள் என்னுடன் வந்து விடலாம்," என்று சொன்னவர், என்னுடன் என்பதை அடிக்கோடு போடுபவரைப்போல அழுத்திச் சொன்னார்.

"சார்."

"இதிலென்ன தப்பு? யாருக்குத் தெரியும்? கீதாவை நான் சரி செய்து கொள்கிறேன். என்ன பதில் தருகிறாய்?"

அவர் மரியாதை குறைந்தது. சுமதிக்குத் தன் காலுக்குக் கீழ் உள்ள நிலம் நடுங்கியது தெரிந்தது.

அவள் எழுந்தாள்.

"மன்னியுங்கள் சார். நான் அப்படிப் பட்டவள் இல்லை," என்றபடி விடுவிடுவென்று படியிறங்கித் தெருவை நோக்கி நடந்தாள் சுமதி.

நடேசன், பானத்தின் கடைசிச் சொட்டையும் குடித்துவிட்டுப் பாட்டிலைப் போட்டு உடைத்தார்.

சுமதியின் மனம் எரிந்தது.

மனிதர்களின் முகங்களை எப்படித்தான் அளப்பது? மனசுக்குள் நிகழும் ரசாயன மாற்றங்களை முகம் வெளிப்படுத்தும் என்கிறார்கள். ஆனால் முகம் சிரிக்கிறது. சிநேகப் புன்னகை கொள்கிறது. அன்பாய் அழைப்பு விடுகிறது. உறவாடக் கூப்பிடுகிறது. தனிமை கிடைத்தால், ஆடையை அவிழ்த்துப் பார்க்க எண்ணுகிறது. காம விவகாரங்களுக்குத் துணைபோகச் சம்மதம் இல்லையென்றால், தவிக்கிறது. யாரெல்லாம் உடம்புக்கு அலைகிறார்களோ, அவர்களே ஒழுக்கம் பேசும் உத்தமர்களாகவும் இருக்க நேர்கிறது!

பெண் இங்கு எப்படித்தான் மானத்தோடும் கௌரவத்தோடும் வாழ முடியும்?

நொந்து போன மனசும், களைத்துப் போன உடம்புமாய் வீடு திரும்பினாள் சுமதி.

(தொடர்ந்து வரும்)

---

## காலக்காயங்கள்

**தி/இளையவன்**

**"நீ இளரெத்தம் துடிப்புகள் இருக்கும்தான்; காலத்தையும் பார்த்து நடக்கணும்"**



இழுபறி நிலையிலிருந்த காணிப் பிரச்சனைக்கு இன்னும் தீர்வைக் கண்டு கொள்ள முடியாத மனக் குழப்பத்துடன் திருமலை நகரசபையிலிருந்து தபாற்கந்தோர் வீதியினூடாகச் சென்று பின்னர், தந்தை செல்வா வீதிப் பக்கமாகத் திரும்பியதும் சந்திக்கு அருகாமையிலிருந்த பெரிய நிழல்வாகை மரத்திற்கு முன்னால், வீதியில் குறுக்காகப் போடப்பட்டிருந்த வீதித்தடையை (பம்பிங்) அவன் அவதானிக்கவில்லை. சுமார் அரை அடி உயரமான மேட்டுப் பகுதியில் சைக்கிளின் சக்கரங்கள் ஏறியிறங்கியதும் அவன் சற்று தடுமாறிப் போனான்.

எதிரே வேகமாக வந்து கொண்டிருந்த ஆர்மி டிரக்கில் சைக்கிள் அகப்படக்கூடாது என்ற வேகத்தில் ஒருவாறாக ஹெண்டிலை வெட்டித் திருப்பி தப்பிக் கொண்டதும் தடுமாறிய சைக்கிள், நிழலில் தொடராக நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோக்களில் ஒன்றின் சயிட் கண்ணாடியில் பட்டுவிட்டது.

"ஏன்டா இப்படி கண்மண் தெரியாமல் ஓடுறீங்க...?" திட்டிக்கொண்டே ஆட்டோசாரதி அக்கண்ணாடியை சரிப்படுத்தினான். இவ்வளவு அவதிகளுக்கும் மத்தியில் அவன் சைக்கிள் டியூப் வெடித்துவிட்டது.

"மணியண்ணே...! டியூப் வெடிச்சுப்போச்சு. கொஞ்சம் அவசரமாகப் போகணும். போட்டுத் தர முடியுமான்ணே?"

"எடமோனே! எதுக்குடா இப்படி அவசரம்? நீ அவசரப்படுறதால வந்தவைகளை நானும் கவனிச்சேனே....!"

"............................"

"தம்பி வீணா நாம சாவைத் தேடிக் கொள்ளக்கூடாது. நீ இளரெத்தம்; துடிப்புக்கள் அதிகமாக இருக்கும்தான். கொஞ்சம் காலத்தையும் பார்த்து நடந்துக்கணும்."

பேசிக்கொண்டே அவனது சைக்கிளைத் தூக்கி ஏற்கனவே தொங்கிக்கொண்டிருந்த இரண்டு சங்கிலிகளிலும் மாட்டிவிட, அது மெதுவாக ஆடிக்கொண்டிருந்தது. பின் சக்கரத்தைக் கழற்றி வேறாக எடுத்துக் கொண்டார்.

"தம்பி! உன்னை எனக்கு நல்லாவே தெரியும். ஏதோ கிடைக்கறதைக் கொண்டு என் குடும்பத்தை நான் கவனிப்பது போலத்தான் உன்நிலையும். நான் பொஞ்சாதி, பிள்ளைகளென்று பார்க்கிறதை விட உனக்கு தாய் தகப்பன், சகோதரங்கள் நிறையப்பேர் இருக்காங்க. இவங்களுக்கெல்லாம் உழைச்சுக் கொடுக்கவேண்டிய பொறுப்பு உனக்கு. அதனாலதான் சொல்றன் ரொம்ப நிதானமா நடந்துக்கோ!"

கழற்றிய பின் சக்கரத்திலிருந்த டயரைப் பிரித்து டியூப்பை வெளியே இழுத்து நிதானமாகப் பரிசோதித்தவர், "நல்லாத்தான் வெடிச்சுப் போச்சு. ஒரு அங்குல நீளமிருக்கும். பெச் போட சற்று நேரமாகும். சூடெல்லாம் காட்டினால்தான் பெச் நிக்கும். தூர நீ வரும் போதே கவனிச்சேன். முன்னாடி கறுப்பு பூனையும் குறுக்கிட்டது. எதற்கும் பார்த்து நடந்துக்கோ தம்பி."

"பூனை அதுபாட்டுல போயிருக்கும் நாம என்ன செய்யிறது...?"

"பார்த்தியா இந்த அலட்சியப் போக்குத் தானே கூடாதெங்கிறது. அதுவும் கறுப்பு பூனை குறுக்கறுத்தால் கெட்ட சம்பவம் நடக்குமென்பார்கள். நீ எங்கே இதெல்லாம் நம்பிக்கை கொள்ளப்போறே?"

"அண்ணே! உங்க கடைக்கென்று வரும்போது தானே குறுக்கறுத்தது? பூனையும் கடைக்குள்ளாலேதான் ஓடிரிச்சி. அப்போ கடைக்கு வரக்கூடாதென்று அர்த்தமா....?"

"எடேய்! இந்த கிண்டல் தானே கூடாது. நான் ஒன்று சொன்னா நீயொன்று சொல்றே. இந்தக்கால பெடியள் எல்லாம் இப்படித்தான். எதுலயும் நம்பிக்கை இல்லாம திரியுதுகள். இத கவனி தம்பி! வாழ்க்கையில நிதானம் தேவை. நாட்டில சாவுகள் மலிஞ்சு போச்சு. நாம இல்லாமற் போனா நம்ம குடும்பம் வீணா அனாதையாகிப்போயிடும். உன்ட தகப்பன் என்னோட தூரத்து உறவு என்பதாலும் நான் உனக்கு புத்தி சொல்ல வேண்டிய கடமை உண்டு. எதிர்கால வாழ்க்கையை நல்லா சிந்திச்சு நடந்துக்கோ. வேகமாகச் செயற்படுறதால பெரிசா எதையும் சாதிச்சிட முடியாது. சகுனம் பார்க்கிறதும், நிதானமாக நடந்து கொள்றதும் நமக்குத்தான் நல்லது. இதுக்கும் மேலே சொல்ல வேண்டியதில்லை. புத்தியாகவே நடந்துக்கோ. சைக்கிளை நின்று எடுத்துக் கொண்டு போகப் போறியா அல்லது...."

"அண்ணே எனக்கு வேலையிருக்கு. நீங்க பெச்போட்டு வைங்க கொஞ்ச நேரம் கழிச்சுவந்து சைக்கிளை எடுத்துக் கொள்கிறேன்."

தனது வளவுக்குள்ளே வந்தவன் அருகேயிருந்த மா மரநிழலில்வைத்து வியர்வையினால் நனைந்திருந்த சேர்ட்டைக் கழற்றிக் கையிலெடுக்கவும் பாரிய வெடிச்சத்தம் அந்தப்பிராந்தியத்தையே சற்று அதிரச் செய்யவும் சரியாக இருந்தது. தூர, வானில் கருமேகக்கூட்டங்கள் பயங்கரமாகக் காட்சியளித்தன.

சற்றுத் தயக்கத்துடன் வீதிக்கு வந்து எட்டிப்பார்த்தான். ஆட்டோக்களும், துவிச்சக்கர வண்டிகளும் வேக வேகமாக பாதுகாப்பான இடங்களை நோக்கி ஒழுங்கற்ற வகையில் ஓடிக்கொண்டிருந்தன. அருகாமையில் வந்த சைக்கிள்காரரிடம்,

"என்னண்ணே வெடிச்சத்தம்....? எங்கே?"

"தம்பி! சந்தி மணி சைக்கிள் கடை முன்னாடி குண்டு வெடிச்சுப்போச்சு. பாவம், மணியண்ணனும் அந்தாள் கடையும் இடமே தெரியாதளவு சிதைந்து போச்சு." வார்த்தைகளைக் கேட்டதும் அவன் அதிர்ச்சியினால் சிலையானான்.



படிப்பகம்

www.padippakam.com

நடிகர் கமல்ஹாசன் எழுதிய முதலாவது சிறுகதை இது. ஜூன் 93ல் சிறுகதைக் கதிரில் வெளியானது.



# ஒட்டுதல்

## கமல்ஹாசன்

எனது இடது கையில் ஒரு கொப்புளம். எப்படி சுட்டுக் கொண்டேன் என்று எனக்குத் தெரியவில்லை. சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் கொதிக்கக் கொதிக்க காப்பி சாப்பிடுவாராம். நாக்கு தாங்கும் சூடு கைதாங்காதாம். அதற்காக டம்ளரை ஒரு துணியால் சுற்றிப் பிடித்துக் கொண்டுதான் குடிப்பாராம். எனக்கும் காப்பி கொதிக்கக் கொதிக்கத் தான் பிடிக்கும். இடது கை கொப்புளத்திற்கு, ஒரு வேளை அது காரணமாக இருக்கலாம். இனிமேல் ராஜாஜி ஸ்டைல்தான்.

கொப்புளம்– அது மகா சாதுவான– எனக்கு எந்தவிதமான உபாதையும் தராத ஒரு மெழுகுக் குமிழி. அதை தகர்த்து நாசமாக்க வேண்டும் என்று என் கை குறுகுறுக்கிறது. என் கழுத்துச் செயினில் தொங்கும் 'பின்'னால் குத்தலாம். உள்ளேயிருந்து நீர் வெளிவரும். கொப்புளம் சுருங்கும். இப்படி என்னைப் பார்த்து ஏளனமாய் பளப்பளக்காது. ஆங்கிலப் பத்திரிகையில் அட்டைப் படத்தில் வரும் இந்திய நடிகைகளின் கன்னம் போல் மினுமினுக்காது.

'பின்'னால் குத்தினால் தப்பு என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். அவர் பேச்சைக் கேட்காமல் இப்பொழுது அவசரப்பட்டு உடைத்து விட்டால் 'செப்டிக்' ஆகலாம். பின்னால் டாக்டரிடம் ஓட வேண்டும். என்னமோ அவர் கையிலிருந்த கொப்புளத்தை உடைத்து விட்டது போல் புருவத்தைச் சுருக்குவார். கண்ணை உருட்டிப் பெருமூச்சு விட்டு, நான் செய்தது ஒரு குழந்தைத்தனமான விஷயம் போல் ஆக்கி விடுவார். சரி, கொப்புளத்தை உடைக்கக் கூடாது என்று எனக்குள் ஒரு கட்டளை.

மனோகர் என்னை ஒரு பார்ட்டிக்குக் கூப்பிட்டிருக்கிறார். யாரோ ஒரு சிந்திக்காரனின் பிறந்த நாளாம்.

"நீ வர மாட்டேன்னு சொல்லுவேன்னு தெரியும். இருந்தாலும், ஏன் கூப்பிட்டேன்னா, உன்னோடே ஃபேவரிட் ஆளு ஒண்ணு பார்ட்டிக்கு வருது."

"யார்?"

"கெஸ் பண்ணு."

"யாருன்னு சொல்லுங்க."

மனோகர் வாயால் பல வாத்திய இசை ஒலிகளை சினிமாப் பாணியில் எழுப்பிவிட்டு பார்ட்டிக்கு வரப்போகும் ஆளின் பெயரைச் சொன்னார். ரங்கராட்டினம் சுற்றியது போல் என் வயிற்றுக்குள் ஒரு சந்தோஷமான கிளுகிளுப்பு வட்டமடித்தது.

"பூ. இவ்வளவுதானா? ஈவினிங் சினிமாவுக்கு டிக்கெட் கிடைக்கலேன்னா வரேன்"– என் சந்தோஷத்தைக் காட்டிக் கொள்ளவில்லை.

மனோகருக்கு தெரியக்கூடாது. மனோகருக்கு அந்த நடிகனைப் பிடிக்காது. அவனை நான் ரசிப்பது பிடிக்கவே பிடிக்காது. 'அவனுக்கு பொட்டை மாதிரி மழுமழுன்னு மூஞ்சி' என்பார். அவருக்கு நடிகர் என்றால் பி.யூ. சின்னப்பாதான். சின்ன வயதில் மனதில் பதிந்துவிட்டது. மாற்றிக் கொள்ள மறுக்கிறார்.

இப்படித்தான் ஒரு நாள், அவன் நடித்த சினிமாவைப் பார்த்துவிட்டு வந்து கொண்டிருக்கும் வழியில் எங்களுக்குள் வாக்குவாதம் முற்றிப் போய் எங்கள் படுக்கையறை வரை சண்டை வளர்ந்தது.

"ஏதேது அவனைப் பார்த்தா பின்னாலேயே மோப்பம் பிடிச்சிண்டு போயிடுவே போலிருக்கே. கொன்னுப்புடுவேன் நாயே."– மனோகர் சீறி விழ–

"என்ன பெரிசா பெண்டாட்டியை மிரட்டற மாதிரி மிரட்டிறீங்க?" என நான் சொல்ல, என்னைக் கன்னத்தில் அறையாத குறை. ஆனாலும் மனோகர் காசு விரயமாவதை விரும்ப மாட்டார். எனக்கு மாதச் சம்பளம் கொடுத்துவிட்டு, காய்ச்சல் வந்தவன் சாப்பிடுவதுபோல் என் உடலை உபயோகித்துவிட்டு பெண்டாட்டி தாசனாய் அவர் (பெரிய) வீட்டிற்கு ஓடினார். அதற்குப் பிறகு இன்றுதான் அவனைப் பற்றிய பேச்சு.

"ஆறரை மணிக்கு வந்து பிக்கப் பண்ணிக்கிறேன். ரெடியாயிரு!" காதலில்லாமல் முதலாளி தொனியில் சொல்லிவிட்டுப் போனார்.

பார்ட்டிக்கு கருப்புப் புடவை கட்டிக் கொள்ள வேண்டும். ஹைதராபாத்தில் வாங்கிய கருப்பு வெல்வெட் (சிங்கப்பூர்) ஹேண்ட்பேக். கருப்புத்தான் அவனுக்குப் பிடிக்கும் என்று என்னிடம் ஃபோனில் சொன்னான். அவனுக்கு அன்று ஃபோன் செய்துவிட்டு அதிர்ஷ்டவசமாக அவனே ஃபோனை எடுத்ததும் அசடு வழிந்து விட்டேன். அரைமணி நேரத்தில் எப்படி நெருங்கி விட்டோம்; எப்படியெல்லாம் கிறுக்குத்தனமாகப் பேசினோம்.

இரண்டு பேரும் டெலிஃபோனில் முத்தம் கொடுத்துக் கொண்டோம். டெலிஃபோனில் முத்தத்தின் சத்தம் பல்லியின் சத்தம் போல் கேட்டது.

இந்த வளர்ச்சியில்லாத, முதிர்ச்சியில்லாத காதல் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

மனோகர் அப்படியில்லை. ரொம்ப நிதானமாய் பிஹேவ் பண்ணுவார். பாவம், வயசாகலையா!

பார்ட்டிக்குப் புறப்பட வேண்டும். ஆனால் அவன் ஞாபகம் வந்தவுடன் படக்கென்று குப்புறப் படுத்துக்கொண்டு கனவில் அவனைவைத்து என்னைக் கற்பழிக்கச் செய்ய வேண்டும் போல் தோன்றும்.

மனோகருக்குத் தெரிந்தால் அவமானம் தாங்கமாட்டார்! உனக்கு மாசம் மூவாயிரம். ப்ளஸ் போனஸ், என் ரத்தம், இதெல்லாம் கொட்டி அழறது எதுக்கு? ஊர்பயலுங்க மேயறதுக்கா?

ஒரு வேளை விவாக சுகம் போதுமென்று தீர்மானித்து என்னை பளிச்சென்று ரத்து செய்தாலும் செய்து விடுவார். ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காதலுக்காக வருமானத்தைக் கெடுத்துக்கொள்ளக்கூடாது.

பார்ட்டி.

"ஹலோ மனோகர்."

"ஹலோ, மீட் மை ஃபிரண்ட் கல்பனா. திஸ் ஈஸ் மகாதேவன். இண்டஸ்டிரியலிஸ்ட்.



என்ன மகாதேவ் அப்படி பார்க்கிறீங்க? அது சினிமா ஸ்டார்ன்னு மிஸ்டேக் பண்ணிண்டிங்களா?" மறைமுகமாக, பாராட்டை நான் ரசிக்கிறேனா என்று என் முகத்தைப் பார்த்தார்.

சம்பாஷணைகள்.... சம்பாஷணைகள்.... சம்பாஷணைகள்...

"ஹலோ"

"ஹலோ"

"ஹலோ"

"மீட் மை ஃபிரண்ட்..."

"திஸ்....ஈஸ்...."

நல்லவேளை, எனக்கு இடது கையில் கொப்புளம். என் கண்கள் அந்த நடிகனைத் தேடுகின்றன. யாரையும் கேட்க முடியாது. அவனைப்பற்றி கேட்க முடியாது. எல்லோரும் (மனோகர் உட்பட) ஜெயிலுக்குப் போகும் பயமில்லாமல் சீமைச் சாராயம் குடித்துக் கொண்டிருந்தார்கள்.

என் கண்கள் கழுகாய்ப் பறந்தன. அடிவயிற்றுக்குள் பட்டாம் பூச்சி படபடக்க கண்டுபிடித்தேன் அவனை, ஒரு கிழவியுடன் பேசிக் கொண்டிருந்தான். அவன் உயரமாக, ரோஜாப்பூ நிறத்துடன், பச்சை முகவாய்க் கட்டையுடன்; அத்தனை கூட்டத்துக்கு நடுவேயும் பளீரென்று....

என்னை அவனுக்கு அடையாளம் தெரியாது. ஃபோனில் என் குரலைக் கேட்டதுதான். கெட்டிக்காரதனமாக அசடு வழியாமல் 'அப்ரோச்' பண்ண வேண்டும்.

என் காது நுனி சூடாகியது. கொஞ்சம் அரித்தது. இதயம் எல்லோருக்கும் கேட்கும்படி அடித்துக் கொண்டிருந்தது. மறுபடியும் அடிவயிற்றில் பட்டாம்பூச்சி சிறகடித்தது.

கெட்டிக்காரத்தனமாக "ஹலோ திஸ் ஈஸ் மிஸ் 73455" என்றேன். படுபாவி ஸ்திரிலோலன், ஒரு வினாடி புருவம் சுளித்துவிட்டு பல டெலிஃபோன் நம்பர்களுக்கிடையில் என் நம்பரை ஞாபகப்படுத்திக் கொண்டு, அழகாக சிரித்துக் கொண்டு அந்தக் கிழவியை அம்போ என்று விட்டு விட்டு எனக்கு "ஹலோ" சொன்னான்.

டெலிஃபோனில் கிட்டத்தட்ட குடும்பமே நடத்தி விட்ட போதிலும் உறவுகளை மீண்டும் சம்பிரதாயமான சம்பாஷணைகளால் கிசுகிசுத்து ஊர்ஜிதப்படுத்திக் கொண்டோம். (மனோகர் கண்ணில் படாமல்) இருட்டில் நகர்ந்து கொண்டு பேசினோம்.

பார்ட்டியில் சகோதரப் பாசம் நதியாக ஓடியது. எல்லோருக்கும் கண்கள் சிவப்பு; எங்கள் இருவரைத் தவிர; மனோகர் என்னையும், தன்னையும் மறந்து, வழுக்கி விழுந்த ஒரு ஐஸ் கட்டியை அவர் விஸ்கியில் போட டேபிளுக்கடியில் குனிந்திருந்தார்.

நாங்கள் இருவரும் அந்த வீட்டு மாடி பால்கனியில் ஒரு தொட்டியில் வளர்ந்திருந்த குட்டி மரத்துக்குப் பின்னால், அரை இருட்டில், ஒருவர் கைய்ய மற்றொருவர் பிசைந்து கொண்டு இருந்தோம். நல்ல வேளை, இடது கையில் கொப்புளம்.

"உன்னோட கொஞ்சம் நேரம் தனியா இருக்கணும்!" உடலால் என்னை அழுத்தினான்.

"பிளீஸ்... மனோகருக்குத் தெரிந்தால் என் உயிரையே வாங்கிவிடுவார் பிளீஸ்." வலது கையால் அவன் கன்னத்தைத் தடவினான்.

"அவரென்ன உனக்குப் புருஷனா..? உம் அப்புறமென்ன!" பெரிசா என்னமோ அதிகாரமாக மிரட்டினான். எனக்குப் பிடித்திருந்தது.

மெதுவாக– மிக மிக ஜாக்கிரதையாக நழுவினோம். ஒரு வேளை திரும்பி வர முடியாமல் போய் நாளை மனோகர் கேட்டால், 'நீங்கள் குடித்து திக்கு திசை தெரியாமல் இருந்தீர்கள். நானே தனியா வீட்டுக்குப் போயிட்டேன்' என்று பெண்டாட்டி போல் பொய்க்கோபம் காட்டிச் சமாளித்து விடலாம்.

அவனது அயல்நாட்டுக் காரில் ஏறினோம். அவன், கார் ஸ்டியரிங்கிலும், என் உடம்பிலும் ஒரே நேரத்தில் ஒரே உரிமையுடன் கைவைத்துக் கொண்டே காரைச் செலுத்தினான்.

இருட்டான ஒரு போட் கிளப் சந்தில் வண்டியை நிறுத்தினான். மிக சாவகாசமாக இஞ்சினை நிறுத்திவிட்டு என் பக்கம் திரும்பி என்னை சற்று நேரம் உற்றுப் பார்த்தான்.

எனக்குள்ள பலஹீனத்தை என் கண்கள் அந்த நடிகனுக்கு வெளிப்படையாகக் காட்டியிருக்க வேண்டும். அவன் புரிந்ததாய் புன்னகை செய்தான். அவன் பேச ஆரம்பித்த பொழுது அவன் குரல் பிசிரடித்தது. எவ்வளவு எக்ஸைட்மெண்ட் அவனுக்குள் இருந்திருக்க வேண்டும் என்பது தெரிந்தது.

"ஐ லவ் யூ கல்பனா!" சினமா டயலாக் மாதிரி பொய் சொன்னான், ஆனால் உண்மையில் என்னை இறுக அணைத்துக் கொண்டான். என் அடிவயிற்றுக்குள் மீண்டும் பட்டாம் பூச்சிகள்.

உணர்ச்சியோடு அவன் பேர் சொல்லி அவன் கோட் அணிந்த முதுகைத் தடவினேன்.

என் கொப்புளம் அவன் கோட்டில் அடிபட்டு உடைந்தது.

சில்லென்ற ஈரத்தை வைத்துத் தான் கொப்புளம் உடைந்ததைக் கண்டு பிடிக்க முடிந்தது. வலியில் என் உட்ல் சற்றே விறைப்பாகியது.

"என்ன கல்பனா?"

"ஒண்ணுமில்லே. இப்படி கார்லே அசௌகரியமா உட்கார்ந்தா கஷ்டம் தான்." ஈரத்தை அவன் முதுகிலேயே துடைத்தேன். இப்போது வலியே இல்லை.

"கல்பனா எனக்கு நீ வேணும்! என்ன சொல்றே? ஸே எஸ் ஆர் நோ ப்ளீஸ்!"

அந்த நடிகன் எனக்கு அவகாசம் கொடுத்தான். யோசித்தேன். எனக்கும் அவன் வேண்டும். ஆனால் எவ்வளவு அழகாக இருக்கிறான். ரோஜாப்பூ மாதிரி, இல்லை இல்லை... கிட்டப் பார்த்தால் மஞ்சளாக இருக்கிறான்.

பச்சை முகவாய்க் கட்டை, நல்ல உடல் கட்டு, அகலம், உயரம்... இல்லை... இல்லை... காலில் நான்கு அங்குல ஹீல்ஸ் இருந்தாலும் சின்னப் பையன் போல அழகா இருக்கிறான்.

'எஸ் ஆர் நோ...' என்னை நானே கேட்டுக் கொண்டேன். மனோகர் கிடக்கிறார். அவரிடம் தொந்தரவு இல்லை. அவரைப் பற்றிச் கிஞ்சித்தும் பயம் இல்லை. அவரை எப்படிச் சமாளிப்பது என்று எனக்குத் தெரியும். உறுத்துவது என் மனசாட்சி தான்.

இவ்வளவு அழகான பையனை எப்படி...? மனசு கேட்கிறது. இல்லை, உடல் கேட்கிறது. தவிர, டாக்டர் பலமுறை அழுத்தி திட்டவட்டமாக என்னிடம் சொல்லியிருக்கிறார் என்தொழு நோய் ஒட்டுவாரொட்டி இல்லையென்று.... அப்படியானால் மனோகருக்கு வந்திருக்க வேண்டும். பின் அவர் மனைவி, அவர் குழந்தை.... சே!... சே... இந்த நடிகனுக்கு– என் ப்ரியநேசனுக்கு– ஒரு ஆபத்தும் வராது.

நான் மெல்ல முன்னேறி அவனை ஆரத் தழுவினேன். ■

---

இங்கு வந்தும் பார்க்கும் கோணங்களையும் கேட்கும் லகரங்களையும் ஆண்கள் கைவிடவில்லை.....

# காத்திருந்த காதல்

அன்று பிரவீணாவின் தெருவிற்கு சாத்தி தபால் கொண்டு போனான். 'போஸ்ற்மன்'னைப் பார்த்ததும் அவள் ஓடிவந்தாள். ஆனால் சாத்தி அவளது கையில் கடிதத்தைக் கொடுக்கவில்லை. நேரம் போதாமையினால் வழமையாகப் போடுவதுபோல் அங்கிருந்த பெட்டிக்குள் போட்டுவிட்டுப் போய்விட்டான். பிரவீணாவிற்கு ஏமாற்றமாயிருந்தது. இருந்தும் சகித்துக் கொண்டு திரும்பிவிட்டாள்.

மறுநாளும் அவர்களுக்குக் கடிதம் வந்திருந்தது. அன்று வாசலிலே நின்ற பிரவீணா கடிதங்களை வாங்க 'கேற்ற'டிக்கு ஓடினாள். ஏனோ தெரியவில்லை. அன்றைக்கும் அவன் அவளின் கைகளில் கடிதங்களைக் கொடுக்கவில்லை. அப்பொழுது அவளுக்குக் கடுமையான கோபம் வந்துவிட்டது.

"நான் தான் நேரிலே வருகிறேனே, கையிலே தந்தால் என்ன குறைந்தா போய் விடுவீர்?" என்று சூடாகக் கேட்டாள்.

எதையுமே இலகுவாக எடுப்பது சாத்தியின் விசேடகுணம். எதற்குமே அவன் பதட்டப்படமாட்டான். பிரவீணா அப்படிக் கேட்டதும் சைக்கிளிலே நின்றபடி காலொன்றை நிலத்தில் ஊன்றிக்கொண்டு, சிரித்தபடியே நின்றான்.

"இங்கென்ன செந்தில்–கவுண்டன் படமா காட்டுகிறார்கள், சிரித்துக்கொண்டு நிற்பதற்கு?" மறுபடியும் பொரிந்தாள் அவள்.

இனியும் இங்கு நிற்பது நல்லதல்ல என்று எண்ணிய சாத்தி இடத்தைவிட்டு நகர்ந்துவிட்டான். நகரும்போது "அடுத்த தடவை கையில் தருகிறேன்" என்று சொல்லிச் சிரித்துக்கொண்டுதான் நகர்ந்தான்.

அடுத்தமுறை சாத்தி அங்கு தபால் கொண்டு போனான். இந்தத் தடவை அவன் கடிதங்களைப் பெட்டிக்குள் போடவில்லை. 'பெல்' அடித்து அவளை வரவழைத்து கையிலே கொடுத்து, "இப்போது திருப்தி தானே?" என்று கேட்டுவிட்டுப் போனான். இது அவளுக்குப் பிடித்திருந்தது.

தனது சொல்லுக்குக் கட்டுப்பட்டு விட்டானே என்று பூரிப்பாகவும் இருந்தது. அத்துடன் சில நாட்கள் பார்த்திருந்தாலும் அவனது கவர்ச்சியான சிரிப்பு, நிதானம் இவைகள் அவளின் மனதில் சட்டென ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

சாத்தியின் அசாதாரண உயரம், வான்படை நேர்முகப் பர்ட்சையில்–மொழிப் பிரச்சனையால் திரும்பிவந்த உடம்பு, நிறம் இவைகளையெல்லாம் கண்டு பிரவீணா அவன் பக்கம் சாய்ந்து விட்டாள்.

'சீறிப் பாய்பவர்கள் எல்லாம் சீக்கிரத்தில் அடங்கிப்போவார்கள்.' என்று சொல்லுவதுண்டு. அப்படித்தான் அவளும் அடங்கிப் போனாள்.

மறுமுறை சாத்தி அங்கு கடிதங்கள் கொண்டு போனபோது அவளும் அவனுக்கு ஒரு கடிதம் கொடுத்தாள்.

'தினமும் எங்களுக்கு கடிதம் தரும் உங்களுக்கு ஒரு கடிதம்' என்று தொடங்கி தான் பேசியதற்கு வருந்துவதாகவும் தன்னை மன்னிக்கவேணும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தக் கடிதம் சாத்திக்கும் அவளின் மேல் ஒரு ஈடுபாட்டைத் தோற்றுவித்தது உண்மை. நாளாக நாளாக தபால்கள் இல்லாமலேயே சாத்தி அந்தத் தெருவிற்குப் போகத் தொடங்கினான். இப்படியே படிப்படியாக வளர்ந்த அவர்களது காதல் ஒருவரையொருவர் பிரிக்க முடியாதளவிற்குப் பிணைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தான் எங்கும் பிரச்சனைகள், துப்பாக்கிச் சமர்கள், எதிலும் தலையீடுகள் என்ற எமது நாட்டுப் போரினால், பிரவீணாவின் தகப்பனாருக்கு சுதந்திரமாக அங்கு கடமையாற்ற முடியாமல் போயிற்று.

நாளடைவில் அவர் குடும்பத்துடன் அவுஸ்திரேலியாவிற்கு வந்து குடியேறினார். இதனால் பிரவீணா ஒருத்தியே மிகவும் பாதிக்கப்பட்டாள். அவளுக்கு சாத்தியைப் பிரிவது சாதாரணமாய் இருக்கவில்லை. இருந்தும் அப்போது அவளிருந்த நிலையில் பிரிந்துதான் ஆகவேண்டும் என்று சாத்திமிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டாள்.



களுவாஞ்சிக்குடி யோகன் – அவுஸ்திரேலியா

புறப்படும்போதே ஒரு உறுதியான முடிவுடன் தான் புறப்பட்டாள். தனக்குத் திருமணமென்று நிகழ்ந்தால் அது சாத்தி ஒருவனுடன்தான் என்ற திடமான எண்ணம் பிரவீணாவிற்கு இருந்துகொண்டே வந்தது. அதனால் இங்கு வந்தும் கடிதங்கள், ரெலிஃபோன்கள் மூலம் தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டன.

பிரவீணாவின் தொடர்புகள் பற்றி ஏற்கனவே அரசல் புரசலாக அறிந்துவைத்திருந்த அவளது தாய்க்கு இங்கு வந்ததும் அது ஊர்ஜிதமாகத் தெரியவேண்டி வந்தது. அதை அவளின் தாய், தந்தையாருக்குத் தெரியப்படுத்தியிருக்கவேண்டும். கண்டிப்பான தந்தை ஒரு இரவு வந்து சத்தம் போட்டார்.

"ஒரு என்ஜினியருக்கு மாப்பிள்ளையா வர இவனுக்கென்ன தகுதி இருக்கிறது, போயும் போயும் கேவலம் ஒரு 'போஸ்ட் மென்னா' உனக்குக் கிடச்சான்?" என்று அவளை அறைக்குள்ளே பதுக்கி அடி ஆரவாரங்களும் அரங்கேறின. அவள் அழுதாளே தவிர முடிவில் எந்தவித மாற்றமும் செய்யவில்லை.

"நான் உங்களுக்குக் கடிதம் அனுப்புகிறேன். தற்சமயம் நீங்கள் எனக்குப் பதில் எழுதாதீர்கள்!" என்று சாத்திக்கு அறிவித்துவிட்டு பொறுமை காக்கத் தொடங்கினாள் பிரவீணா.

காலங்கள் சிறிது கரைந்தோடியது. அப்போது பிரவீணாவின் தந்தை அவளுக்கு மாப்பிள்ளை பார்க்கத் தொடங்கினார். 'டொக்டர், என்ஜினியர், எக்கவுண்டன்' இந்த வட்டத்திற்குள்ளேயே மாப்பிள்ளை தேடினார்கள். அப்படிப் பலர் அவளைப் பார்க்க வந்தார்கள்.

இங்கு வந்தும் பார்க்கும் கோணங்களையும், கேட்கும் லகரங்களையும் ஆண்கள் கைவிடவேயில்லை. சீர்வரிசை, அவளின் தோற்றம், பொருத்தம் இவைகளினால் பல வரன்கள் தட்டுப்பட்டுப் போனது. ஒருபுறம் இது அவளுக்குச் சாதகமாகவே அமைந்தது.

திடீரென ஒருநாள் அவளின் தாய் அவளிடம் வந்து சாத்தியைப் பற்றிய விபரங்களைக் கேட்டாள்.

அவளை ஆச்சரியமும், சந்தோஷமும் ஆட்கொண்டுவிட்டது. பிரவீணாவிற்குத் தெரியும். தகப்பனின் கட்டளையில்லாமல் எந்தக் காரியத்தையும் செய்யத் துணியாத தாயார் இப்படி வந்து விசாரித்ததும் அது தந்தையின் விசாரணைதான் என்று தெரிந்துகொண்டாள்.

தனது பொறுமைக்குக் காலம் தந்த பரிசு என்று நினைத்தவள் அமைதியாகச் சாத்தியைப் பற்றிய விபரங்களை எடுத்துச் சொன்னாள்.

"தகுதி என்பது பதவியிலில்லை, ஆயுள் முழுவதும் ஒரு பெண்ணை கண்கலங்காமல் எவன் காப்பாற்றுகிறானோ அவனுக்குக் குடும்பத்தில் நுழைவதற்குத் தகுதி இருக்கிறது. இப்படி ஒரு குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குச் சாத்தியால் முடியும். சாத்தி மேற்கொண்டு படிக்க வசதியில்லாததனால் தான் இடையிலே படிப்பை நிறுத்தியவர், உங்களின் தகுதி உயர்ந்த பதவிதான் என்றால் சாத்திக்கு வயது இருக்கிறது. படிப்பதற்கு ஊக்கம் இருக்கிறது இங்கு வந்து சில வருடங்களுக்குள் நீங்கள் எதிர்பார்க்கும் உயர்ந்த பதவியை அவர் அடைந்துவிடுவார்....." இவைகளையும் பிரவீணா தனது தாய்க்குத் தெளிவுபடுத்தினாள்.

மகளின் நம்பிக்கையையும் துணிவையும் கண்ட தாய்க்குப் பெருமையாகவே இருந்தது. இருந்தும் ஓசைப்படாமல் அப்போது வெளியேறிப் போனாள். தனது எண்ணம் நிறைவேறிவிடும் என்ற ஆதங்கத்தில் சாதகமான முடிவுக்காகக் காத்திருந்தாள் பிரவீணா. ●



படிப்பகம்

# முத்தும் ஒளியும்

பொற்கிண்ணத்திலே கள்
ஊற்றிக் கொடுத்தவளும் கள்!

"கிண்ணத்திலும் கள்-உன்
வண்ணத்திலும் கள்.
எண்ணத்திலும் ஊற்றினாயே கள்-உன்
கன்னத்திலும் அருந்தலாமோ கள்?"

பளீரென்று மின்னலடித்தது
போலிருந்தது
கள்ளியவள் கண்ணடித்து
புன்னகைத்தபோது!

"பருகத்தான் கள் சுவைக்கும்
பார்த்தாலே நீ சுவைப்பாய்
உருகித்தான் போனேனடி
ஊனுருகி நின்றேனடி!"

மெல்லிடையை தொட்டு
மெல்ல அவன் கை வளைக்க
கள்ளியவள் மறுத்தாளில்லை
பள்ளியறை கதை தொடங்க தடுத்தாளில்லை.

இதழ்மீதில் ஆடவிட்டாள்
கடல் மீதில் படகுபோல
உடல்மீதில் ஆடவிட்டாள்
இதழ்மீதில் இதழ் ஓடவிட்டாள்.

செவ்வாழை கால்கள் பின்ன
செவ்வாயில் தேனை அள்ளி
கொய்வாயோ எனக் கேட்கும்
செங்கனிகள் இரண்டை உண்டு
பொங்கித்தான் போர் தொடுத்தான்.

கட்டிலின் ஓசையே
காமனின் தாளமாக
கொட்டுகின்ற அருவியாய்
கோடி ஆசைகள் நாதமாக
கட்டி விளையாடினான்
கட்டழகில் ஆடினான்!
தொட்டிலவள் ஆகினாள்
தோளணைத்து தாங்கினாள்!

ஆடிக் களைத்தவன்
கூடிக் களித்தானில்லை.
காரணம் அந்த
கூடலில் மனம் கலக்கவேயில்லை!

பொன்னுக்கும்-பொருளுக்கும்
தன் மேனி படைப்பவள்
கண்ணுக்கு நிகராம்
காதலி போல் வருவாளோ?

உள்ளம் கலவாத
காம வெள்ளத்திலே
உடல்கள் இழுபடலாம்
உள்ளம் மகிழ்ந்திடுமோ?

வாழைத் தொடையிருந்தும்
வாஞ்சை மனதிலில்லை
மூங்கில் தோளிருந்தும்
ஏக்கம் அவளுக்கில்லை.

## இலக்கிய நயம்



உதிர்ந்த மலராக
விரிந்து கிடந்தவளை
உச்சிமோர்ந்து
இறுகித் தழுவியென்ன?

அச்சமும் கொண்டாளில்லை
ஆசையும் அவளுக்கில்லை
பட்சமும் என்னிலில்லை
பாசமாய் அணைத்தாளில்லை!

கைப்பொருள் அளந்து பார்த்து
கையணைத்திடும் காரிகை
மெய் மகிழ்ந்தாடுகின்ற
மையலுடன் கூடுவாளோ?

பெய் யென்றால்
பெய்யுமோ மழை?
மேகம்தான் திரளவேண்டும்
திரண்டது குளிரவேண்டும்
மழையது பெய்யும் அப்போ!

உள்ளத்தில் ஒருமை வேண்டும்
எண்ணத்தில் இனிமை வேண்டும்
மஞ்சத்தில் சேரும் போது
மனங்களும் கூட வேண்டும்.
கள்ளமே இல்லாக் கூடல்
கைப்படும் அப்போதுதானே!
உள்ளமும் எழுந்து ஆட
உடல்களும் ஜோடிசேர
உறவது இனிக்கும்தானே!

நினைத்தவன்
திருந்தி மீண்டான்.
தன்னவள்
பெருமை கண்டான்.

அன்னவள்
இல்லத்தில் காத்திருந்தாள்!

நறுமுகை முகத்தாள்
அறுசுவை விருந்து வைத்தாள்
குறுத்தது உள்ளம்
வெறுத்ததேனோ இவளை என்று!
கறுத்தது முகம்தான் என்றதும்
"விருந்திலோ குறை?" என்றாள்.
உறுத்திய மனத்துடன்
"இல்லையடி கண்ணே" என்றான்.

மஞ்சத்தில் அவள் மறுக்க
மையலில் இவன் இழுக்க,
குங்கும பூ முகத்தில்
கொஞ்சிட இவன் துடிக்க,
நெஞ்சத்தில் ஆசையுடன்
தஞ்சமாய் ஆகிப்போனாள்!

வெட்கத்தில் விழிமூட
விரகத்தில் இதழ் துடிக்க
தங்கத்தை உரசுகின்ற
சரசத்தை அவள் ரசித்தாள்!

பக்கத்தில் இருந்தவனை
தங்கத்தில் வைரம்போல
தன்னோடு சேர்த்தணைத்தாள்!

விளக்கையணைக்கச்
சொன்னாள்-இவனோ
"விளக்கம் அறிய" என்றான்.

காதல் கடலாக
ஆசை அலையாக
இரு உடல்கள்
கடக்கும் படகாக
மோதும் புயலாக
மோகம் சுழன்றடிக்க
கூடல்கரைசேர
கூடி முயங்கி நின்றார்.

கரை சேரும்நேரத்தில்
ஊடல் இடையில்வர
போதும் எனப் புரண்டாள்
பூ முகத்தாள் கோபத்தை
பூஞ்சிறகு வார்த்தைகளால்
நோகாமல் துடைத்துவிட
மறுபடி பூங்கொத்து
மார்புறச் சேர்ந்தது!

இன்பக் கரை கண்டான்
உள்ளத்தில் ஒளி கண்டான்.
பொருள் எடை பார்த்து
உடை நெகிழ்த்தும்
பொய்க் காரிகையர் உறவெல்லாம்
கிட்டவரக் கூடுமோ இதுபோல்?
பொய் முகப் புன்னகைகள்
கொட்டித் தரக்கூடுமோ இதுபோல்?

மனம் ஒன்றாக் காமம்
சாக்கடைக் குளியல்!
இரு மனம் கலந்தால்

## தருவது ரசிகன்



இன்பக் கடல்தான் காமம்!
கடலில் வீசும் அலைதான்
காதலர் கூடல்.
கூடிய இன்பத்தில் பெருகும் அன்பே
காமக் கடலில் கிடைக்கும் முத்து.
கிடைத்த முத்தில் தெறிக்கும் ஒளியே
காதலர் மத்தியில் தோன்றும் ஊடல்.
தெறிக்கும் ஒளி பாயுமிடமே
மகிழ்வுடன் பெற்ற மக்கட்பேறு!

உண்மை புரிந்தது
உறவு இனித்தது!

"காமம் வீழ் இன்பக் கடலாமே
காதலரின்
ஏமஇருக்கையே தூம் திரையாம்-ஏமத் தீண்டு
ஆம்பரலே தோன்றும் அளியுடலாம் பரலில்
தெற்றித் தெறிப்பாம் ஒளி ஒளியாய்
கண்ணே-சீர்த்
துற்றுகப்பாய்ப் பெற்ற மகவு"
பாடல் எழுதியது: பொய்கையார்

## சிந்தியா பதில்கள்

★ தமிழ்மொழி அமுலாக்கலின் வேகம் எந்தளவில் உள்ளது?

எஸ். ராமநாதன்- கல்கிசை.

வேகம் இருந்தால்தானே அது எப்படி என்று சொல்லமுடியும்! ஜனாதிபதி கால வரையறை குறித்தபின்னர், நம்ம பிரதமர் மருத்துவமனை ஒன்றை திறந்து வைக்கும் காட்சியை தொலைக்காட்சியில் பார்த்தேன். மருத்துவமனை பெயர்ப்பலகையில் தமிழ் மருந்துக்கும் இல்லை.

○●○

★ சந்தனக்கடத்தல் வீரப்பனிடம் தமிழக, கர்நாடக அரசுகள் பணிந்தது ஏன்?

ஜி. சுபா, கொழும்பு-06.

பணிவு அல்ல, நன்றி மறவாமை!

ஜெயலலிதாவை தாறுமாறாக வீரப்பன் விமர்சனம் செய்ய, அதனை வீடியோ படமாக எடுத்து, சன் ரீ.வியிலும் காண்பித்தனர். அது தேர்தல் பிரசாரத்திற்கு உதவியது. அதற்காக கலைஞர் செய்துள்ள நன்றிக் கடன்தான் இது. கர்நாடக அரசு பிடிவாதமாகத்தான் நின்றது. பிடிவாதத்தை நெகிழச் செய்தவர் கலைஞர்தான்.

○●○

★ சிந்தியா! மீண்டும் பிரபு-குஷ்பு ஜோடி சேர்ந்தால் எப்படி இருக்கும்?

ஆர். ரஞ்சனி, எட்டியாந்தோட்ட.

சி. சுந்தர் நிலைதான் கவலைக்கிடமாக இருக்கும்.

○●○

★ நடிகர் அப்பாசுக்கு தமிழ் தெரியுமா?

கே. சியாமளா, நீர்கொழும்பு.

கடந்த ஞாயிறு எம்.ரி.வி. தொலைக்காட்சியில் அப்பாஸை பேட்டி கண்டாரே எழில் வேந்தன் நீங்கள் பார்க்கவில்லையா?

**எழில்வேந்தன்:** நீங்கள் இலங்கைக்கு வருவது இதுதான் முதல் தடவையா?

**அப்பாஸ்:** இல்லை. இதுதான் ஃபெஸ்ட் ரைம்.

எப்படியோ சமாளித்தார் போங்கள்! எழில்வேந்தன் நல்ல அறிவிப்பாளர்தான். ஆனால் அப்பாசிடம் அவர் கண்ட பேட்டியில் தொடுத்த கேள்விகள் உப்புச் சப்பில்லாதவை. உதாரணத்திற்கு ஒன்று:

"நீங்கள் மீண்டும் இங்கு வருவீர்களா?"

எழில்.... என்னாச்சு?

○●○

★ ஒரு அறுவை சொல்லுங்கள் பார்க்கலாம்?

எம். ஆர். கரீம், மூதூர்.

"எதைச் சுட்டாலும் சாகும். அதைச் சுட்டால் மட்டும் சாகாது. அது என்ன?"

"தோசை!" (உபயம்: 'ஒன்ஸ்மோர்')

○●○

★ யாழ் முஸ்லிம்களை அங்கு வந்து குடியேறுமாறு ஈ.பீ.ஆர்.எல்.எஃப். அழைப்பு விடுத்துள்ளதே?

எம்.எஸ்.எம்.சறூக், யாழ்ப்பாணம்.

யாழ் முஸ்லிம்கள் மீண்டும் சொந்தப் பகுதிக்கு செல்லும் உரிமையுடையவர்கள். அதில் சந்தேகம் இல்லை. ஆனால் தங்கள் பாதுகாப்புக்கே படையினரை நம்பியுள்ளவர்கள் அழைப்பதுதான் தமாஷ். அழைப்பு விடுத்துள்ள அக் கட்சி செயலாளரே இதுவரை யாழ் செல்லவில்லையாமே!

○●○

★ சிந்தியா! சிறந்த எழுத்தாளராக வர உங்கள் ஆரம்ப யோசனை என்ன?

பி. பத்மா, மட்டக்களப்பு.

கண்களையும், காதுகளையும் திறந்து வைத்திருங்கள்!

○●○

★ தம்பட்டம் அடிப்பது என்றால் என்ன?

ஆ. கிருஸ்ணகுமார், வவுனியா.

தம்பட்டம் அடிப்பதற்காக சிறைக்கே போனார் ஒருவர். கதையைக் கேளுங்கள்:

இரண்டு வயதானவர்கள் கடற்கரையில் தினமும் சந்திப்பார்கள். இரண்டுபேரில் ஒருத்தரை மூன்று மாதங்களாகக் காணவில்லை. பின்னர் நண்பரை சந்திக்க வந்தார்.

"மூன்று மாதமாக எங்கே போயிருந்தீர்?" என்று கேட்டார் நண்பரான தாத்தா.

"சிறைக்கு!" என்றார் மற்றத்தாத்தா.

"என்ன, சிறைக்கா? அப்படி என்ன தப்புச்செய்தீர்?"

"பெண்ணிடம் தப்புச் செய்ததாக வழக்கு."

"இந்த வயதிலேயா?"

"ஆமாம். ஒருநாள் தெருமுனையில் நின்று கொண்டிருந்தேன். திடீரென்று பொலிஸ்காரர்கள் என்னிடம் வந்து கைது செய்வதாகச் சொன்னார்கள். காரணம்: ஓர் அழகான இளம்பெண் என்னைக் காட்டி நான் அவளிடம் தகாத முறையில் நடந்துகொள்ள முயன்றதாக புகார் கொடுத்தாளாம். பார்த்தேன். மிக மிக அழகான பெண். உடனே நான்தான் குற்றவாளி என்று ஒப்புக்கொண்டு சிறைக்கு போய்விட்டேன்!" என்றார் தாத்தா.

"செய்யாத தவறுக்காக ஏன் தண்டனை பெறச் சம்மதித்தீர்கள்?"

உடனே மறுதாத்தா பொக்குவாய்ச் சிரிப்புடன் பதில் சொன்னார்:

"இந்த வயதில் அந்தப் பெண்ணுடன் சம்பந்தப்படுத்தி குற்றம் சாட்டப்பட்டது என் ஆண்மைக்கு புகழ் சேர்ப்பதாக இருந்தது, அதனால்தான்!" என்று கண்ணடிச்சுச் சிரித்தார் தாத்தா.

○●○

★ அன்பின் சிந்தியா! காதலித்து அதிகம் ஏமாற்றுபவர்கள் ஆண்களா? பெண்களா?

இ. லலீந்திரன், செங்கலடி.

பொய்யர்கள்.

○●○

★ சிந்தியா! இலங்கை அணிக் கப்டன் அர்ஜுன ரணதுங்கா இந்தியாவுடன் ஆடிய ஆட்டம் எப்படி?

எஸ். விநோதன், வத்தளை.

ஒரே சொல்-அபாரம்!

அர்ஜுன ரணதுங்கா அன்றைய ஆட்டத்தை மறக்கவே மாட்டார்.

தனது மைத்துனரான மர்வின் அத்தபத்துவுடன் (ரணதுங்காவின் சகோதரர் சஞ்சீவ ரணதுங்கா அத்தபத்துவின் சகோதரியைத்தான் திருமணம் செய்திருக்கிறார்) இணைந்து நூறு ரன்குவித்தது. தான் பங்குகொண்ட 200வது ஒருநாள் கிரிக்கட் போட்டியை சதம் போட்டு நிறைவு செய்த மகா சந்தோசம். ஒருநாள் போட்டிகளில் அவரது அதிகபட்ச ரன் குவிப்பு. ஒரு கல்லில் மூன்று மாங்காய்கள்!

○●○

★ அடுத்தவர் துன்பத்தில் இன்பம் காணும் மனிதர்களை திருத்துவது எப்படி?

என். சபருள்ளா, புத்தளம்.

அவர்கள் பட்டறிந்துதான் திருந்த வேண்டும்.

ஒருத்தர் குதிரைக்கு பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னாலே நின்றுகொண்டிருக்கும். இவர் பின்னாலே கொஞ்சத் தூரத்தில் இருந்து வேகமாக ஓடிவந்து ஜம்ப் பண்ணுவார். அப்படியே உயரே எழும்பி குதிரை முதுகிலேபோய் பொத்தென்று அமருவார். அதே வினாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி.

இதைப் பார்த்த ஒரு பெரியவர் "இப்படிப் பொத்தென்று போய் விழுந்தா குதிரையோட இடுப்பு என்னாகும்? உடைஞ்சிடாதா?" என்று கேட்டார். அதையெல்லாம் பயிற்சியாளர் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

கொஞ்ச நாள் சென்று பயிற்சியாளர் அந்தப் பெரியவரை மறுபடியும் பார்த்தார்.

"ஐயா! நீங்கள் சொன்னது மாதிரியே இடுப்பு உடைஞ்சு போச்சு" என்றார்.

"குதிரைக்கா?"

"இல்லை, எனக்குத்தான்."

"எப்படி நடந்தது?" என்று கேட்டார் பெரியவர்.

"குதிரைக்கு பயிற்சியெல்லாம் நல்லாத்தான் குடுத்தேன். அது முடிஞ்ச பிறகு ஒரு தடவை நான் வழக்கம்போல பின்னாலிருந்து ஜம்ப் பண்ணினேன். நான் அமர முன்னாடி குதிரைஓட ஆரம்பித்துவிட்டது. நான் தரையிலதான் அமர முடிஞ்சுது" என்றார் பயிற்சியாளர்.



விஜய், கவுசல்யா—'நேருக்குநேர்'

★ நடிகர் விஜய்யின் நடிப்பு எப்படி?

செல்வி. சி. பாமினி, கொழும்பு-11.

படத்துக்குப் படம் மெருகேறிக் கொண்டிருக்கிறது. 'ஒன்ஸ்மோர்'ரில் அசத்தல். சிவாஜியுடன் பயமில்லாமல் இயல்பாக நடிப்பதென்றால் சும்மாவா?!

○●○

★ நடிகையின் வாழ்க்கையை எதனுடன் ஒப்பிடலாம்?

ஏ.சி.எம். முஸம்மில், குளியாப்பிட்டிய.

மின்மினிப் பூச்சியுடன்!

○●○

## ஸ்போர்ட்ஸ்

### மீண்டும் மரடோனா

உலகப் புகழ்பெற்ற கால்பந்து வீரர் மரடோனா சிறிது கால இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் விளையாடுகிறார். 36 வயதான ஆர்ஜென்டினா வீரரான இவர் சுறுசுறுப்புடன் விளையாடி வருகிறார்.

ஆர்ஜென்டினாவின் போகா ஜூனியர் அணிக்காக ஒப்பந்தமாகியுள்ளார் மரடோனா. நியூவெல் அணிக்கு எதிராக நடந்த முதல் போட்டியில் மரடோனா அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியின் பிற்பகுதி ஆட்டத்தில் தலையால் மோதி அற்புதமாக ஒரு கோல் போட்டார் மரடோனா. இதன் மூலம் தனது ஆட்டத்தின் மெருகு இன்னமும் குறையவில்லை என்பதை நிரூபித்தார் மரடோனா.

ஒரு போட்டியில் விளையாடுவதற்காக போகா ஜூனியர் கிளப் மரடோனாவுக்கு சுமார் 35 இலட்சம் ரூபாய் கொடுக்கிறது.

### தொடுக்கிறார் வழக்கு

பென் ஜோன்சனை உங்களுக்கு ஞாபகம் இருக்கிறதா? 1988ம் ஆண்டு சியோலில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் போதை மருந்து உபயோகித்த குற்றத்திற்காக ஓடத் தடை விதிக்கப்பட்டவர்.

கனடா நாட்டைச் சேர்ந்த இவர் தனது ஆயுட்காலத்தடையை நீக்கக் கோரி சர்வதேச அத்லெட்டிக் சங்கம் மீது வழக்குத் தொடரவுள்ளார்.

வேகமாக ஓட போதை மருந்து உபயோகித்தது மிகப் பெரிய குற்றமில்லை என்றும் பென் ஜோன்சன் கூறியிருக்கிறார்.

### பத்துக் கப்டன்கள்

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அதிக போட்டிகளுக்குத் தலைமை தாங்கியவர்கள் விபரம் இதோ:

| வீரர் | டெஸ்ட் | வெற்றி | தோல்வி | சமன் |
|---|---|---|---|---|
| 1. அலன் போடர் (அவுஸ்திரேலியா) | 93 | 32 | 22 | 39 |
| 2. கிளைவ் லொய்ட் (மே.இ.தீவுகள்) | 74 | 36 | 12 | 26 |
| 3. விவியன் ரிச்சர்ட்ஸ் (மே.இ.தீவுகள்) | 50 | 27 | 8 | 15 |
| 4. கிரெய்க் சப்பல் (அவுஸ்திரேலியா) | 48 | 21 | 13 | 14 |
| 5. இம்ரான் கான் (பாகிஸ்தான்) | 48 | 14 | 8 | 26 |
| 6. சுனில் கவாஸ்கர் (இந்தியா) | 47 | 9 | 8 | 30 |
| 7. மைக் ஆதர்ட்டன் (இங்கிலாந்து) | 42 | 11 | 13 | 18 |
| 8. பீட்டர் மே. (இங்கிலாந்து) | 41 | 20 | 10 | 11 |
| 9. அர்ஜுன ரணதுங்க (இலங்கை) | 41 | 7 | 15 | 19 |
| 10. பட்டோடி ஜூனியர் (இந்தியா) | 40 | 9 | 19 | 12 |

### இவர்கள் தான் அவர்கள்



1 சஞ்சய் தத்



2 பிடல் காஸ்ட்ரோ



3 சார்ள்ஸ்



4 ஐஸ்வர்யா ராய்



5 முகமது அலி



6 ரவீனா ராண்டன்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 93

இராமபிரானுடைய உள்ளத்தில் அதுவரை குடிகொண்டிருந்த கவலையில் ஒரு பெரும் பகுதி விலகியது. இலங்கை மாநகரில் முதல் நாளன்று இடம்பெற்ற போரில் அரக்கர் படைக்குப் பெரும்பேரிழப்புகள் ஏற்பட்டதனால் இலங்கை வேந்தன் இராவணன், தானே போர்க்களம் புகுவதற்கு ஆயத்தமாகி விட்டான் என்ற செய்தி இராமபிரானுக்கு எட்டியது. இராவணனுடைய அக்கிரமங்களுக்கு முடிவு அண்மித்துவிட்டது: தனது இதயகமலத்தில் குடிகொண்டிருந்தபோதும், உடலால் எட்டத்திலிருந்த சீதாப்பிராட்டியார் மீண்டும் தன்னிடம் வந்து சேரும் நாள் வெகுதூரத்தில்லை என்பதை நினைத்த மாத்திரத்திலேயே இராமபிரானுடைய ஏக்கம் விலகியது. இலங்காதிபதியை வீழ்த்த வேண்டும் என்ற நோக்கம் பெருகியது. மலைகள் போன்ற அவருடைய தோள்களில் தோன்றிய வீக்கம் விசாலமடைந்தது.

அண்ணன் இராமனிடம் ஏற்பட்ட மாற்றம் கண்டு தம்பி இலக்குவனின் உள்ளமும் உடலும் புத்தூக்கம் பெற்றன. தினவெடுத்த அவன் தோள்களும் பூரித்தன. போர்முகம் புகுவதற்கு அவரும் தயாராகிவிட்டார்.

இராமபிரான் போர்க்கோலம் பூண்ட காட்சியை கவிஞர் பெருமான் கம்பநாட்டாழ்வார் விபரிக்கும் பாங்கினைப் பார்ப்போம்:

**அங்கு அவன் அமர்த் தொழிற்கு**
**அணுகினான் என**
**வாங்கினென் சீதையை என்னும்**
**வன்மையால்**
**தீங்குற பிரிவினால் தேய்ந்த**
**தேய்வு அற**
**வீங்கின இராகவன் வீரத் தோள்களே!**

(யுத்த காண்டம்- 1065)

**பொருள்:**

இராவணன் போர்க்களம் புகுவதற்குப் புறப்பட்டு விட்டான் என்று செய்தி அறிந்ததும், 'சீதையை நான் மீட்டுக் கொண்டுவிட்டேன்' என்ற எண்ணம் மேலெழ, அன்றுவரை பிராட்டியாரைப் பிரிந்து விட்டிருந்தமையினால் ஏற்பட்ட துன்பம் நீங்கி இராமபிரானின் வீரத் தோள்கள் பூரித்தன.

### கலக்கமுற்ற இலங்கை வேந்தன்

பிரகத்தன் என்பவன் அரக்கர் படையில் மாபெரும் வீரன். இந்திரலோகத்தையும் தேவர்களையும் அடிமைப்படுத்தும் பொருட்டு மேகநாதன் எனப்படும் இந்திரஜித்துடன் அரக்கர் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றவன். இந்திரனை வீழ்த்தி வெற்றி ஈட்டிய பெருமைக்குரியவன். அத்தகைய பராக்கிரமசாலியான பிரகத்தன் வீழ்ந்தான் என்ற செய்தி இலங்கையர்கோனுக்குப் பேரிடிபோல் ஆயிற்று. அதுவும் ஒரு சாதாரண குரங்கு அப்பெருவீரனை வீழ்த்தியது என்பது கேட்டு அவமானத்தால் குறுகிப்போனான். அதுமட்டுமல்லாமல் முதல்நாள் போரில் இலங்கைக் கோட்டையின் நான்கு திக்குகளிலும் நடைபெற்ற பெரும் மோதல்களில் பல்லாயிரக்கணக்கான அரக்கர் படை வீரர்கள் வீழ்ந்தனர்; யானைப் படை, குதிரைப் படை மற்றும் தேர்ப்படை ஆகியனவும் சிதைந்து சின்னாபின்னமாகிவிட்டன என்பதனையும் அறிந்து இராவணன் கலக்கமுற்றான். இத்தனைக்கும், முழுமையான பயிற்சி பெற்ற போர் வீரர்கள்-போதுமான படைக்கலங்களைக் கொண்டு போரிட்டவர்கள்- அரக்க வீரர்கள். அத்தனை பேரும் நிரந்தரமாகப் போர் புரிவதையே தொழிலாகக் கொண்டவர்கள்.

ஆற்றல் மிக்க- பாரம்பரியப் பெருமை பொருந்திய வீரர்களை எதிர்த்து நின்று வீழ்த்தியவர்கள்- கானகத்தில் மரக்கிளைகளில் தொத்தித் திரியும் வானரர்கள்- ஆயுதம் தரித்துப் போர் புரியும் ஆற்றலற்றவர்கள். கல்லையும் மரத்தையும் கைகளிலேந்திவந்தவர்கள்.

போர்க்களத்தில் நடந்தேறிய சம்பவங்களை தூதர்கள் சொல்லக் கேட்ட இராவணன், சினம் மேலீட்டால் சிவந்த மேனியனானான்.

### படைகளின் கைகலப்பு

வடபுறத்தே அரக்கர் படைத் தலைவனாக நின்றவன் வச்சிரமுட்டி எனும் வீரன். இவனை மன்னன் சுக்கிரீவன் வீழ்த்தினான். கும்பானு என்பவனை கழுகரசனான இடும்பன் கொன்றான். நீலன் எனும் வானரவீரனே பிரகத்தன் வீழ்ச்சிக்குக் காரணமானவன். பிரகத்தனுடன் சென்ற பல்லாயிரக்கணக்கான வீரர்களில் போர் நிலவரங்களை இராவணனுக்கு எடுத்துரைக்க வந்த ஒரு சில வீரர்கள் மட்டுமே மிஞ்சினர். ஏனையோர் களத்தில் மாண்டு போயினர்; அல்லது காணாமற் போயினர் என்று தப்பி வந்தவர்களே சொன்னார்கள்.

தெற்கு வாயிலில் போர் முழக்கமிட்டவன் வாலியின் மகனான அங்கதன். அரக்கர் படைக்குத் தலைமை தாங்கியவன் சுபாரிசன் என்பவன். இவனும் அங்கதன் கையால் மடிந்தான். மேற்கு வாயிலை அண்டி தனது வானரப்படைகளுடன் ஆஞ்சநேயர் காத்திருந்தார். கோட்டையினுள்ளிருந்து மற்றொரு அரக்கர் வீரனான தளபதி துன்முகம் ஆரவார்த்துடன் படை நடத்தி வந்தான். அப்படை அணிகள் அனைத்தும் சிதறி அழிந்தொழியவும் எஞ்சியவர்கள் புறமுதுகிட்டோடவும் செய்தனர் வானரப் படையினர். துன்முகம் நேரடியாக ஆஞ்சநேயர் முன்னின்று வீரகர்ஜனை செய்தான். ஆஞ்சநேயரோ எதுவித ஆயுதமும் ஏந்தாமல்- நிராயுதபாணியாக நின்றிருந்தார். துன்முகனும் ஆயுதங்களை ஏந்தாமல் இரதத்தினின்றும் குதித்து முன்னேறினான். இருவருக்கும் மல்யுத்தம் நடந்தது. சில நொடிகளில் துன்முகன் துடிதுடித்து தரையில் வீழ்ந்து உயிர்விட்டான். இக்காட்சியைக்கண்டு வானரப்படைகள் ஆனந்த மேலீட்டால் ஆர்ப்பரித்துக் கூத்தாட, அரக்கர் படை மாயமாக மறைந்தது.

# போர்க்கோலம் பூண்ட மன்னர்கள்



இராவணனுடைய தூதர்களும் தப்பிப் பிழைத்த அரக்க வீரர்களும் இக்காட்சிகளைக் கண்டு வந்து கூறியதும், கடும் துயரும் சினமும் ஒருங்கே கொண்டவனான இராவணன், தானே போர்க்களம் புகுவது என்ற தீர்மானத்துக்கு வந்தான்.

### நம்பிக்கை சிதைந்தது

தளபதி பிரகத்தன் மீது இராவணனுக்கு அளப்பரிய நம்பிக்கை இருந்தது. இந்திரலோகத்தையே ஆட்டிப்படைத்து தேவர் படையை வென்று பல்லாயிர வீரர்களைச் சிறையிலிட்டவன். அப்பேற்பட்டவீரன் மாண்டதால் இராவணன் துயரடைந்து கண்ணீர் விட்டான். அக்கணத்தில் ஆஞ்சநேயரும் அங்கதனும் தூதர்களாக வந்து தன்னிடம் கூறிச் சென்ற தகவல்கள் அவனுள்ளத்தில் நிழலாட்டமிட்டன. சற்று நேரம் அவனுடைய மனச்சாட்சி அவனுக்கு அறிவுரை கூறத் தொடங்கியது.

'இன்னும் காலதாமதமாகி விடவில்லை. சீதையை இப்போதாவது விடு தலை செய்து, இராமரிடம் அனுப்பி விடலாம்!' என்றது அவன் மனம். ஆனால் சற்று சில நொடிகளில் 'என்னை வெல்லுவதற்கு எவனால் முடியும்? முப்பத்து முக்கோடி தேவரையும் அடிமைப்படுத்தியவன் நான்! அந்த மும்மூர்த்திகளும் என்னை மீறி எதுவும் செய்து விடமுடியாது. சர்வலோகமும் எனக்கு அடக்கம். இவ்வாறிருக்கையில், கேவலம் ஒரு நரனுக்கும் அவனுடன் வந்துள்ள வானரங்களுக்கும் பயந்து பின்வாங்கி விடுவேனா?' என்ற ஆணவம் தலைக்கேறியது. உடனே தனது எண்ணத்துக்குத் தடை போட்டு, 'போரிட்டே அவர்களை அழிப்பேன்!' என்று திடமானான்.

பல்லாயிரக்கணக்கான தேர்கள் அணிவகுத்து நின்றன. அவற்றில் தனக்கேற்றதான ஒன்றைத் தேர்ந்தெடுத்து அதற்குரிய குதிரைகளைப் பூட்டுமாறு பணித்தான் இராவணன்.

தேவேந்திரன் அசுரர் படையிடம் தோற்ற போது, இராவணனுக்கு அத்தேரை இந்திரனே தந்தான்.

அரண்மனையோடு அமைந்திருந்த சிவன் கோவிலுக்குச் சென்று சிவபிரானை வழிபட்டான். பூசையினைச் செய்த பூசகர் கொடுத்த பிரசாதம் இராவணனின் விரித்த இருகரங்களிலும் வைக்கப்பட்டபோது, அதிலிருந்து ஒரு செம் மலர் தரையில் விழுந்தது. சுற்றி நின்ற பிரதானிகளில் பலர் இந்தத் துர்ச்சகுனத்தைக் கண்டு துணுக்குற்றனர். ஆனால் இதனை இராவணனிடம் எடுத்துக்கூற எவருக்கும் துணிச்சல் இருக்கவில்லை.

பிரசாதத்துடன் இருந்த தும்பை மாலையை எடுத்து கழுத்தில் சூடிக்கொண்ட இராவணன், தன்னுடன் போர்முனை புகக் காத்திருந்த படைகளை பார்வையிட்டான். இராவணனின் போர்க் கோலம் கண்டு, அதுவரை திகிலடைந்திருந்து, சோர்ந்துபோயிருந்த அசுரப்படைகளுக்குப் பெரும் உற்சாகம் மேலிட்டது. எல்லோரும் ஜெயகோஷமிட்டனர்.

இராவணன் தன் தேரில் ஏறினான். வீணைக்கொடி அத்தேரின் உச்சியில் பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. தன்னுடைய வில்லை வலது கையால் தொட்டெடுத்து இடதுகையில் தூக்கி நிறுத்தினான். வலது கையால் நாணை ஏற்றி இறுக்கிக் கட்டியதும் தனது சுட்டு விரலால் நாணை ஒரு தட்டுத் தட்டினான். பெரியதோர் இடி முழக்கம் எழுந்தது போல் அப்பிரதேசமெங்கும் அந்த நாணொலி எதிரொலித்தது.

இராவணனின் வில்லிலிருந்து பிறந்த நாணொலி கேட்ட வானர சேனைகளில் பெரும் பகுதியினர் பதறினர். அவர்கள் இத்தகைய பேரொலியை அவர்கள் இதற்கு முன்னர் எப்போதும் கேட்டதேயில்லை. அந்த ஒலி இலங்கை மாநகரெங்கும் பரந்தொலித்தது. வானரப் படையினர் மட்டுமல்ல, அசுரப் படைகளுக்கும் அந்த ஒலியால் குலை நடுக்கம் உண்டாயிற்று.

(தொடர்ந்து வரும்)

**இராஜகுமாரன்**

## இராமாயணப் போட்டி: 91

**சரியானவிடை:-** வானர இனத்தின் தலைமைப் பதவி.

1. ஜீவா தேவராஜா, பாரதிபுரம், கிளிவெட்டி, மூதூர்.
2. ஏ.சீ.எம். முஸம்மில், 37, பிரதான வீதி, குளியாப்பிட்டி.
3. தி. இன்பராஜ், மருக்காரம்பளை, மன்னார் வீதி, வவுனியா.
4. சாமிளா அஷ்ரப், கண்டி வீதி, மல்லவப்பிட்டிய, குருநாகல்.
5. செல்வி வீ.சொ.ஸோபிதா, அ.த.ம.வித்தியாலயம், ஆண்டிமுனை, உடப்பு.

**போட்டி இல. 93** கேள்வி:- **பிரகத்தனைக் கொன்றவன் யார்?**

ஆகஸ்ட் 02 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**இராமாயணப் போட்டி - இல.93, தினமுரசு வாரமலர், த.பெ.இல - 1772, கொழும்பு.**

---

# கைதுகளை நிறுத்த தமிழ்க்கட்சிகள் மகஜர்!

## 24 மணிநேரத்தில் நடவடிக்கை!

### 26 மணிநேரப் பேச்சில் முடிவு!

கைதுகளை நிறுத்தவேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கூட்டாக தயாரித்த பத்துக் கிலோ எடையுடையதும் 96 1/2 பக்கம் கொண்ட தடிப்பான தாள்களையுடைய, கம்பியூட்டரில் தயாரான, தூய ஆங்கிலத்தில் செதுக்கப்பட்ட மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இம் மகஜரைத் தயாரிக்க ஆயிரத்தொரு இரவுகளும், ஆயிரத்தொரு பகல்களும் தேவைப்பட்டதாக எட்டுக் சட்சிப் பேச்சாளர் தூங்காது சிவந்த கண்களுடன் தெரிவித்தார்.

ஆயித்தொரு இரவுகளும் தூங்காமல் இருந்தீர்களே, உடல் நிலை கெடாதா? என்று நிருபர் கேட்டபோது, சிவந்த கண்களில் கனல் தெறித்தது.

நெற்றிக் கண் மூலம் நக்கீரனை நோக்கிய சிவபெருமான்போல எமது நிருபரை நோக்கிய அப் பேச்சாளர், "ஆயிரத்தொரு இரவுகள் மட்டுமல்ல ஆயுள் முழுக்கவும் தூங்காமல் இருக்க தயாராக உள்ளோம்." என்று சூளுரைத்தார்.

"மகஜரின் ஒவ்வோர் பக்கத்தையும் பிரமிப்புடன் நோக்கினார்கள். உற்று உற்றுப் பார்த்தார்கள். மகஜர் தயாரிக்கப்பட்ட முறையை தம்மை மறந்து கைதட்டி பாராட்டினார்கள். நாம் பயன்படுத்திய சில ஆங்கிலச் சொற்களுக்கு அவர்களுக்கே அர்த்தம் தெரியவில்லை. உடனடியாக கேம்பிரிட்ஜ் டிக்ஷனரி ஒன்றை தருவித்து அர்த்தம் அறிந்தார்கள்." என்று தாம் நடத்திய பேச்சுக்களின் பலாபலன் பற்றி சிலாகித்தனர் தமிழ்க் கட்சியினர்.

# ஆண்கள் பெண்கள் குழந்தைகள்

## சோதனைக்காக வீதியில் நிறுத்தும்!

தமிழ்க் கட்சிகளின் பத்துக்கிலோ எடையுடைய மகஜரை அடுத்து துரிதமாக நடந்துள்ள சம்பவங்கள் பின்வருமாறு:

கொழும்பு தங்கு விடுதிகளில் கண்டபடி கைது செய்யக்கூடாது என்று தமிழ்க்கட்சிகள் கோரியிருந்தன. அதனால் கண்டுபிடித்து கணக்கெடுத்து நூற்றுக்கணக்கானோர் மட்டும் கைது செய்யப்பட்டனர்.

கண்டபடி கைது செய்யாமல் கணக்கெடுத்து கைது செய்வதற்காக தங்கு விடுதிகளில் உள்ள ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் வீதிகளில் நிறுத்தப்பட்டு கணக்கெடுக்கப்பட்டனர்.

காரணமின்றி கைது செய்யக்கூடாது என்று தமிழ்க்கட்சிகள் கோரியது தெரிந்ததே. இதனையடுத்து கைதுகளுக்கான காரணம் கூறப்பட்டு கைதுகள் நடக்கிறது. கைதானவர்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்போர் பயங்கரவாதிகள் என்ற காரணம் ஒளிவு மறைவின்றி தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தமிழ்க் கட்சிகளின் மகஜர் ஏற்படுத்திய மகத்தான மாற்றம் என்று கூறப்படுகிறது.

வவுனியா அகதிமுகாம்களில் உள்ளோர் நல்ல முறையில் நடத்தப்படவேண்டும் என்று தமிழ்க்கட்சிகள் கோரியிருந்தன.

அதனால் இப்போது முகாம்களில் உள்ளோரை முன்புபோல்கூட வெளியில் நடமாட விடுவதில்லையாம். வெளியே திரிந்து வெய்யில், மழை என்று நோய் நொடி ஏற்பட்டால் தமிழ்க் கட்சிகளுக்கு யார் பதில் சொல்வது என்று கேட்கிறார்களாம்.

# காகிதப் புலிகள் பட்டம்

## அட்டைக் கத்திகள் பரிசளிப்பு

## தமிழ்க் கட்சிகள் உலக சாதனை

உலக சாதனைகளைக் கின்னஸில் பதிவு செய்வது நீங்கள் அறிந்ததே. தற்போது நம்நாட்டிலுள்ள தமிழ்க் கட்சிகளின் பெயர்களும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறவுள்ளன என்னும் இனிப்பான செய்தி வெளியாகியுள்ளது.

சர்வதேச ரீதியாக அரசியல் கட்சிகள் இடையே அதி சிறந்த காகிதப் புலிகளுக்கான போட்டி ஒன்றை கின்னஸ் நிறுவனத்தினர் நடத்தியிருந்தனர்.

கடந்த பத்தாண்டுகளில் அதிகளவில் அறிக்கைகள், மகஜர்கள், தந்திகள், ஃபக்ஸ் செய்திகள், கடிதங்கள், பத்திரிகைப் பேட்டிகள் போன்றவற்றை வெளியிட்ட கட்சிகளும், அதன் தலைவர்களும் மட்டுமே போட்டியாளர்களாகும் தகுதி பெற்றிருந்தனர்.




சர்வதேச அளவில் பல கட்சிகள் போட்டியில் குதித்தன. அப்படியிருந்தும் இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளே போட்டியின் முதல் ரவுண்டிலிருந்து கடைசி ரவுண்ட் வரை முன்னணியில் நின்றன.

தமிழ்க் கட்சிகள் ஒன்றுக்கு ஒன்று சளைத்தவையல்ல என்பதால், எக் கட்சியை வெற்றி பெற்றதாக அறிவிப்பது என்று முடிவு செய்ய கடைசிவரை இயலவில்லை.

ஒரு தமிழ்க் கட்சி ஏனைய கட்சிகளைவிட மகஜர் எடையில் 1/2 கிலோ அதிகம் கொண்டிருந்தது. அக் கட்சி முன்னே சென்றுவிடாமல் தடுக்க இன்னொரு கட்சி தலைவர் அக் கட்சித் தலைவரின் காதைக் கடித்துவிட்டார்.

தமிழ்க் கட்சிகள் மத்தியில் மோதலைத் தவிர்க்கும் முகமாக சகல தமிழ்க் கட்சிகளுக்கும் காகிதப் புலிகள் என்ற பட்டம் வழங்கப்பட்டது.

காகிதப் புலிகள் பட்டம் பெற்ற ஒவ்வொரு கட்சிக்கும் அட்டைக் கத்தியொன்று பரிசாக கொடுத்து கௌரவிக்கப்பட்டது.

இது பற்றிக் கருத்துத் தெரிவித்த ஒரு கட்சித் தலைவர் 'இது ஒரு படிக்கல்லு' என்று தெரிவித்தார்.

மற்றொரு தலைவர் கருத்துத் தெரிவிக்கையில்; 'உலக அளவில் தமிழர்களுக்கு கிடைத்துள்ள மட்டற்ற மரியாதை இது. ஜனநாயகப் பாதையில் நாம் சாதித்த சாதனைகளுக்கு கிடைத்த வெகுமதி' என்று தெரிவித்தார்.

இன்னொரு தலைவர் சோகமாக அமர்ந்திருந்தார். அவரை அணுகி விபரம் கேட்டபோது; "அதிக பக்கங்களில் மகஜர் கொடுத்தது நாம்தான். குண்டுப் புரளி காரணமாக சில அரச அலுவலகங்களில் குப்பைக் கூடைகளை அகற்றிவிட்டனர். இல்லாவிட்டால் அவற்றில் கிடந்த மகஜர்களையும் சேகரித்து எங்கள் தரப்பின் எடையை அதிகரித்திருப்போம்." என்று கூறினார்.

அட்டைக் கத்திகள் சகிதம் சகல தமிழ்க் கட்சிகளும், தலைவர்களும், பிரமுகர்களும் நாளை சுப நேரத்தில் நாடு திரும்புகின்றனர்.

மேலும் உற்சாகமாக காகிதப் பணிகளை தொடரப்போகிறார்கள். அதனால் பத்திரிகைக் காரியாலயங்கள், மற்றும் செய்தி நிறுவனங்கள் இனிமேல் 24 மணிநேரமும் உஷாராக இருக்க வேண்டும் என்று கட்சிப் பேச்சாளர் ஒருவர் மூச்சுவிடாமல் கருத்து வீசினார்.

*காகிதப் புலிப் பட்டத்தோடும்*
*கைகளிலே அட்டைக் கத்தியுடனும்*
*வருகின்ற அனைவரையும்*
*வருக வருக என்று வரவேற்கிறோம்.*

**காதில பூ கந்தசாமி**



படிப்பகம்



அருள் ஜுவலர்ஸ்
ARUL JEWELLERS
பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை:
105, காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
436331

# நேற்று நான் — இன்று நீ



தருவது
வியோடெ

↓ இந்திய கிரிக்கெட் அணியில் உள்ள ஒவ்வொரு வீரருக்கும் நட்சத்திர மதிப்பு இருக்கிறது வருமானமும் எக்கச்சக்கம்.

அணியின் கப்டன் டெண்டுல்கர் இன்றைய கிரிக்கெட் வீரர்களில் முன்னணியில் இருப்பவர். சர்வதேச ஒருநாள் போட்டிகளில் பந்தை பதம்பார்க்கும் அதிரடி வீரர்களுக்குத்தான் செம மரியாதை. கப்டன் பதவி டெண்டுல்கரின் கைகளை பல சமயங்களில் கட்டிப் போட்டாலும்கூட இதுவரை 12 சதம் போட்டிருக்கிறார். இப்போது களத்தில் உள்ள வீரர்களில் டெண்டுல்கரும், சயீத் அன்வரும்தான் 12 சதம் போட்டுள்ளனர். (ஆசியா கிண்ண போட்டிக்கு முன்பு வரை) சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அதிக சதம் போட்டவர் ஹெயின்ஸ். 17 சதம். ஹெயின்ஸின் சாதனையை உடைப்பதில் டெண்டுல்கருக்கும், சயீத் அன்வருக்கும் இடையேதான் போட்டி.

இந்திய அணி சமீபகாலத்தில் பல போட்டிகளை கோட்டை விட்டிருக்கிறது. சிறந்த வீரர்கள் இருந்தும் தோல்விகள் ஏற்பட்டது எப்படி? என்பதுதான் பலரது கேள்வி. மனம் வைத்து விளையாடினால் இந்திய அணியால் தூள்கிளப்ப முடியும்தான். மனம்வைக்க தடை யாது?

## குமுறல்



அணி வீரர்களிடையே ஒரு முகப்பட்ட உத்வேகம் பல சமயங்களில் காணாமல் போய்விடுகிறது. அதனைவிட இந்திய கிரிக்கெட் தேர்வுக் குழுமீது வீரர்களுக்கு உள்ள அதிருப்தியும் ஒரு காரணம்.

டெண்டுல்கருடனும் மல்லுக் கட்டியிருக்கிறது தேர்வுக்குழு. அணித் தேர்வில் கப்டனின் கருத்துக்கு காது கொடுக்காவிட்டால் எப்படி, என்கிறார் கபில் தேவ்.

இந்தியக் கிரிக்கெட் தேர்வுக் குழுவை என்ன செய்யலாம் என்று கபில் சொல்கிறார்:

"அவர்களைத் தூக்கி கடலில் போடுங்கள். கிரிக்கெட் நுணுக்கமே தெரியாத சிலர் இந்திய கிரிக்கெட்டின் தலைவிதியையே நாசம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்" என்கிறார் கபில். அவரது பந்து வீச்சைப் போலவே விமர்சனமும் வேகம்தான். ஆனால் டெண்டுல்கர் மட்டும் வெளியே மூச்சுவிடவில்லை. உள்ளே மட்டும் குமுறியிருக்கிறார். ■

↑ இந்திய முன்னாள் கிரிக்கெட் வீரர் மனோஜ் பிரபாகர் சமீபத்தில் வீசியுள்ள பந்தொன்றால் இந்திய அணியே கலகலத்துப்போயிருக்கிறது. பந்தயங்கள் நடத்துகிறவர்களிடம் இலஞ்சம் வாங்கிக்கொண்டு அணியின் தோல்விக்காக விளையாடினார்கள் சிலர் என்று புகார் சொன்னார் பிரபாகர். அவர்களின் பெயர்களைச் சொல்லமாட்டேன் என்று முதலில் கூறினார். பின்னர் சாடை மாடையாக அசார்மீது பந்தை எறிந்திருக்கிறார்.

அசாருக்கு இத்தனை பங்களாக்கள் கார்கள் எங்கிருந்து வந்தன? விளம்பரம் மூலம் மட்டுமே சம்பாதித்து இத்தனை கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பாதிக்க முடியுமா? என்று கேட்கிறார் பிரபாகர்.

பிரபாகர் சொல்வதை அப்படியே நம்பமுடியாது. இத்தனைகாலம் சென்று ஏன் புகார் செய்யவேண்டும். தவிர, அசார்தான் தனது இடம் பறிபோனதற்கு காரணம் என்றும் பிரபாகருக்கு படுகோபம். இந்தக் குற்றச்சாட்டின் பின்னணி அதுதான் என்கிறார்கள்.

இன்றுள்ள வீரர்களில் ஆறாயிரம் ஓட்டங்களை ஒருநாள் போட்டிகளில் கடந்தவர்கள் மூன்றுபேர். அசார், சலீம் மாலிக், அரவிந்த டி.சில்வா.

சலீம் மாலிக் மீது முன்னர் இலஞ்சம் கொடுக்க முற்பட்டதாக குற்றச்சாட்டு. இப்போது அசார்மீது இலஞ்சம் வாங்கியதாக மறைமுக குற்றச்சாட்டு. இருவருமே முன்னாள் கப்டன்கள். இன்றுவரை பிரகாசிப்பவர்கள். தங்கள்மீதான புகார்களையும் அலட்சியமாக வீளாசினாலும் உள்ளூர வருத்தம் இல்லாமல் போகாது.

## அதிர் இடி



→ சர்வதேச ஒருநாள் போட்டிகளில் அறிமுகமே அபாரம். 17 வயதுப் புயலாக உலக சாதனைகளை உடைத்து ஒரத்தில் போட்ட போது கிரிக்கெட் ரசிகர்கள் திறந்தவாயை மூட மறந்தனர்.

6வது ஆசியா கிண்ண போட்டிக்கு முன்பு வரை ஒரு சதம் உட்பட ஐந்து அரைச் சதங்கள் போட்டுள்ளார். அடித்தால் ஃபோர் இல்லாவிட்டால் போரடிக்கும் என்பதுபோல ஆடுகிறவர் அப்ரிடி. இப்போது 18 வயது. சகலதுறை ஆட்டக்காரராக இருப்பது அணிக்கு மேலதிக சாதகம். வயது இருக்கிறது. அதனால் அணியில் மேலும் பல சாதனைகளைப் படைக்க போதிய அவகாசமும் இருக்கிறது. ■



ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்
SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11
323657

## 1வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி ஜெ. நிதுர்ஷா (10.07.97)

தாவடியைச் சேர்ந்த ஜெகதீஸ்வரன்- சிவராணி தம்பதியினரின் செல்வப் புதல்வி நிதுர்ஷா தனது முதலாவது பிறந்ததினத்தை 10.07.97 அன்று டென்மார்க்கிலுள்ள தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை டென்மார்க்கிலுள்ள அன்பு அப்பா, அம்மா, தாவடியைச் சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா, பண்ணாகத்தைச் சேர்ந்த பாட்டி, அம்மப்பா, அம்மம்மா, திருகோணமலையிலுள்ள தாத்தா, அப்பம்மா, சுவிஸ் ராசன் சித்தப்பா, கனடா ஜெகன் சித்தப்பா, தாவடி சுவிதா அத்தை, ரஜினி அத்தை, ஜேர்மன் காந்தி மாமா, பண்ணாகம் ஜெயம் மாமா, விஜி மாமா, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் பெற்று பல்லாண்டு சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: வே. ஜெயராசா (அப்பப்பா)
திருகோணமலை.

→ கிரிக்கெட் அணிக் கப்டன்களில் அதிஸ்டக்காரர் அர்ஜுன் ரணதுங்கா. எப்போது சறுக்குவார் கப்டன் பதவி கைமாறும் என்று காத்திருப்போர் கிடையாது. அணிக்குள் அவரது முதுகுக்குப் பின் முணு முணுப்பவர்களும் கிடையாது.

கப்டனை மாற்றுங்கள் என்ற குரல் எழுவது இல்லை. அணி தோற்றால் என்ன, ஜெயித்தால் என்ன, கப்டன் ரணதுங்காதான்.

ஆனால் ரணதுங்காதான் சலித்துப் போயிருக்கிறார். முதலாவது ஆசியா கிண்ணப் போட்டியில் இருந்து தற்போது ஆறாவது ஆசியா கிண்ணப் போட்டிவரை சந்தித்துவிட்டார்.

உலகக் கிண்ணத்தை பெற்றுக் கொடுத்த சந்தோசத்தோடு ஓய்வு பெற விரும்பினார். உதவிக் கப்டன் அரவிந்தாவும், அணியும் அவரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார்கள்.

புத்திசாலித்தனமான கப்டன் என்று கிரிக்கெட் உலகம் பாராட்டுகிறது. பெரிய பையன்களின் அணி என்று கேலியாகப் பேசப்பட்ட அணியை வெற்றிப்பாதையில் நடத்திச் சென்ற கப்டனுக்கு அந்தப் பாராட்டு மிகப் பொருத்தம்தான்.

சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்களை தாண்டிவிட்டார். இரண்டு சதம் போட்டிருக்கிறார்.

கடந்த கால அரசாங்கத்தில் ரணதுங்காவுக்கு சில சங்கடங்கள் இருந்தன. ரணதுங்காவின் தந்தை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய தூண்களில் ஒருவராக இருந்ததுதான் காரணம்.

ரணதுங்காவுக்கு அரசியலில் ஆர்வம் கிடையாது. ஓய்வின் பின்னர் குடும்பத்தினருடன் இருக்கவே விரும்புகிறார்.

ஆரவாரம், ஆர்ப்பாட்டம், டென்ஷன் என்பவற்றில் இருந்து விலகி அமைதியான சூழலில் இருக்கவே பிரியம்.

பிடித்த உணவு அரிசிச் சோறும் கறியும். பிடித்தது எதுவென்றாலும் இலங்கைக்குள் மட்டும்தான் சொல்லுகிறார். வெளிநாடுகள் பலவற்றுக்கு சென்று வந்தாலும் அங்கு எதுவுமே ரணதுங்காவைக் கவரவில்லை. சுத்தமான சுதேசி. அதுதான் அணிக்காக தன் சொந்த விருப்பங்களையும் ஒதுக்கிவிட்டு தொடர்ந்து விளையாட முடிகிறது.

தற்போதைய ஆசியக் கிண்ணப் போட்டியில் இந்திய அணியுடனான ஆட்டத்தில் ஜெயசூரியா, அரவிந்தா இருவரும் சரிந்தனர். இந்த மலைகள் சரிந்த பின்னர் களத்தில் இறங்கிய ரணதுங்காதான் நம்பிக்கையோடு அசத்தலாக ஆடி அணியை தூக்கி நிறுத்தினார். அந்த தன்னம்பிக்கைதான் ரணதுங்கா. பல போட்டிகளில் இந்த தன்னம்பிக்கை பளிச்சிட்டுள்ளது. அதனால் இந்தக் கப்டனை இழப்பது பற்றி நினைக்கவே அணிமட்டுமல்ல இலங்கை கிரிக்கெட் அணி ரசிகர்களே கலங்குகிறார்கள். ■

## போட்டியில்லை






இப்பத்திரிகை கொழும்பு ... 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்